
# கிழக்கும் மேற்கும்

- ஒப்பீட்டுக் கவிதைகள் -




கவிஞர்

## முருகு

வாஹினி பிரசுராலயம்
யாழ்ப்பாணம்
2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் மேற்கும்

ஒப்பீட்டுக் கவிதைகள்



என்றென்றும் அன்புடன்

[illegible]
30.06.2019

கவிஞர்

## முருகு

வாஹினி பிரசுராலயம்
யாழ்ப்பாணம்
2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின்பெயர் | : | கிழக்கும் மேற்கும் (ஒப்பீட்டுக் கவிதைகள்) |
| ஆசிரியர் | : | "முருகு" |
| முகவரி | : | முருகு (ச.முருகையா)<br>45 சுவாமியார் வீதி,<br>கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.<br>021 221 5363 |
| முதற் பதிப்பு | : | 2019 சித்திரை |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | : | 214 + xviii |
| வெளியீட்டாளர் | : | வாஹினி பிரசுராலயம்,<br>90 மணிக்கூட்டுக் கோபுர வீதி,<br>யாழ்ப்பாணம். |
| அச்சகம் | : | ஜெயஸ்ரீ அச்சகம்,<br>இல 34, பிறவுண் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 221 9129 |
| விலை | : | ரூபா 450.00 |
| ISBN | : | 978 - 624 - 95199 - 0 - 9 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

என்னன்புத் தந்தையாரும்
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலையின்
தலைமை ஆசிரியருமான

**அமரர் உயர்திரு கந்தையா சரவணமுத்து**

அவர்கள்



ஆளாக நானுலவக்
காலாக விளங்குமென்
தந்தையார் பதமலரில்
சமர்ப்பணம் இப்படைப்பு!

**-முருகு-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

கொழும்புத்துறையைச் சேர்ந்த "கவிஞர் முருகு" என்றழைக்கப்படுகின்ற திரு.ச.முருகையா அவர்கள் எழுதிய "கிழக்கும் மேற்கும்" என்ற நூலைக் கண்ணுற்றேன். முருகு என்ற பெயரிலேயே அவர் அவ்வப்போது எழுதி வருவனவற்றையும் படித்திருக்கிறேன். "பாடிப்பறந்த குயில்கள்" (மறைந்த இசைக்கலைஞர்களின் வாழ்க்கைச் சரிதம்)என்ற அவரது நூல் மிகப் பயனுடையது. இசை பயிலும் மாணாக்கர்வசம் என்றும் இருக்கவேண்டிய நூல், அது.

பல்வேறு துறைகளிலும் தன்னை அடையாளப்படுத்தியுள்ள "முருகு" தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்பான அறிவுடையவர். மரபு மாறாமல் செய்யுள் செய்யும் ஆற்றல் கைவரப் பெற்றவர். இவருக்குத் தமிழ்ப் புலமைக் குடும்பப் பின்னணியும் உண்டு.

எழுவான் திசையும் - படுவான் திசையும் என்றும், உதய திசையும் அஸ்தமன திசையும் என்றும் கீழைத் திசையும் மேலைத் திசையும் என்றும் கிழக்கையும் மேற்கையும் சுட்டும் வழக்காறு நம்மிடையே நிலவியமையை இந்த நூல் ஒரு கணம் நினைக்க வைத்தது.

பொதுவாக மனிதர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கெனப் பொதுவான உணர்வுகள், உடலியற்தேவைகள், பண்பாட்டுக் கூறுகள், வழிபாட்டுமுறைமைகள் முதலானவற்றிலே உடன்பாடும் இருக்கலாம். முரண்பாடும் இருக்கலாம். தும்மல், இருமல், பசி, தூக்கம் முதலான உடலியற் செயற்பாடுகள் எல்லோருக்கும் பொதுவானதே. காதல், வீரம், அன்பு முதலானவையும் அவ்வாறே.

முருகு அவர்கள் வரலாற்று நோக்கிலும் இலக்கிய நோக்கிலும் கிழக்கையும் மேற்கையும் ஒப்பிட விரும்பினார். இந்த ஒப்பீட்டின் உட்கிடையாகச் சமயம், சமூகம், அரசியல், பண்பாடு முதலியன கரந்துறைந்துள்ளமையைக் காண முடிகின்றது. பதினாறு தலைப்புக்களில் அமைந்த இந்த ஒப்பீட்டுக் கவிதை நூல் பதினாறு விடயங்களைப் பதிவு செய்கின்றது. எமது பண்பாட்டிலே "பதினாறு" என்ற எண் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்தும் மரபு இன்றும் உண்டு. அதனாற்தான் போலும் முருகுவும் பதினாறுடன் இந்நூலை நிறைவு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்னன் சங்கிலி, மாவீரன் யூலியஸ்சீசர், கௌதமபுத்தர், ஐசாக் நியூட்டன் எனத் தொடங்கி இந்த ஒப்பீடு தொடர்கிறது. அரிச்சந்திரன், நெடுஞ்செழியன், ஔவையார், ஆருணி, தருமி, ஆறுமுகநாவலர், இளங்கோ அடிகள், கட்டப்பொம்மன், குழந் தைக் கண்ணன், இராஜராஜ சோழன், ஞானப்பிரகாசமுனிவர் எனக் கீழைத்தேச ஆளுமைகளையும் ஒப்பீடு செய்திருக்கின்றார்.

கல்வி, அரசியல், புவியியல், பொருளியல், பண்பாடு, சமூகவியல் முதலானவை முற்குறிப்பிட்ட ஆளுமைகளையும் பாதித்தமையை முருகு தெளிவாக விளக்கி யுள்ளார்.

முருகு தமது கருத்து நிலை அடித்தளத்திலே நின்றே இந்த ஒப்பீட்டைச் செய்துள்ளார். வரலாற்று நிகழ்வுகளையும் செவிவழிக்கதைகளையும் கொண்டு பின்னப்பட்ட வற்றை ஒப்பிட்டுப் பேசுவது என்பது மிகவும் கடினமான காரியம். முருகு துணிந்து இந்த ஒப்பீட்டு முயற்சியில் இறங்கியுள்ளார். வெற்றியும் பெற்றுள்ளார். சாதாரண வாசகர்களுக்குச் செய்தியைச் சொல்லும் ஒப்பீடாக அமைந்தாலும் புத்தி ஜீவிகளும் படித்து இன்புறலாம்.

சாதாரண வாசகர்களை கவிதைக்குள் இறக்கி அதிலே அவர்கள் இன்பங்காண வைப்பது முருகுவின் பிரதான நோக்கம் போலும். கவிதை என்ற பெயரில் காளான் கள் பலமுளைக்கும் இக்கால கட்டத்திலே முருகு துணிந்து கவிதையிலே இந்த ஒப்பீட் டினைச் செய்துள்ளார். வெற்றியும் பெற்றுள்ளார்.

முருகுவுக்குக் கவிதை கைவரும். அதைப் பலவிடங்களிலே பார்த்திருக்கிறோம். ஆழமானபடிப்பு ஆங்கிலமொழியறிவு, சமூகத்தோடு ஒன்றிப்பழகும் பண்பு, இறை பக்தி இவைகளையுடைய முருகு இந்த நூலை எழுதியிருப்பது மகிழ்வுக்குரியது.

நிறைவாக, முருகுவின் "கிழக்கும் மேற்கும்" நின்று வென்று நிலைக்கும். அவரின் முயற்சிகள் மென்மேலும் தொடர வாழ்த்துவோம்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
**முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்**
**யாழ். பல்கலைக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயப்புரை

ஒப்பியற் கல்வியானது அறிவியலிலும் மனிதப் பண்பியலிலும் பல நலன் களைத் தந்துள்ளது. இந்த வகையில் மானிடவியல் ஆய்வு முறைகளில் ஒன்றான இன ஒப்பாய்வியலானது (Ethnology), பண்பாட்டிடை ஆய்வாக உலகப் பண்பாடு கள் பற்றிய புரிதலுக்குப் பெரிதும் துணையாகியுள்ளது.

காலதேச வரையறைகளைக் கடந்து, பண்பாடுகளின் பொதுமைகளையும் தனித் துவங்களையும் காணப்பயன்படும் ஒப்பிலக்கிய ஆய்வானது, ஒப்பியல் ஆய்வி னது முன்னோடியான பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் எழுத்துக்களின் வழி ஈழத்துத் தமிழியல் உலகில் ஆழ வேர்விட்டுள்ளது.

இத்தகைய ஒரு சூழமைவில் "முருகுவின்" புதிய நூலான "கிழக்கும் மேற்கும்" வரவாகின்றது. பண்பாட்டிலும் இலக்கியங்களிலும் வாழும் "முருகு"வின் சமூக மனத்தினை வெளிப்படுத்தும் ஒப்பியல் நூலாக இந்நூல் வடிவம் பெற்றுள்ளது.

முருகுவின் இந்த ஒப்புவமையின் பொருண்மைகளாகப் பல இலக்கிய - வரலாற்றுப் பாத்திரங்கள் உயிர்ப்புப் பெறுகின்றனர். மேலான மனித மாண்புகள் அவரது இந்த ஒப்பீட்டில் அர்த்தம் பெறுவது போலவே, உலகளாவிய இழிநிலைகளையும் இந்த ஒப்புவமைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தேசம் வாழ, உலக ஞானம் தழைக்க உழைத்த ஆளுமை அழகுகள், கூட இருந்தே அவர்களின் உயிரழித்த ஈனப்பிறப்புகள் என்றவாறு முருகுவின் இந்த ஒப்பியல் பயணம், 16 இயல்களாய் விரிந்துள்ளது. கண்ணனுக்கு ஹம்சன், யேசுவுக்கு ஏரோது என்றவாறு காலதேச வர்த்தமானங்களைக் கடந்த ஒப்பீடுகள்.

பொதுவான அரசர், ஞானியர், பாவலர் பற்றிய ஒப்பீடுகளுடன், மனிதநேய வரலாற்றில் தடம்பதித்த தாதியர் எனப் பன்முகமான தரிசனங்களை இந்நூல் எமதாக்குகின்றது.

ஆரவாரம் இல்லாத "முருகு"வின் ஆழமான தேடல், மனித நேயம் என்பனவே இந்நூலாக்கத்தின் மூலதனம். மனிதப் பொதுமை பற்றிய புரிதலே நூலின் பயன் எல்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பண்பாட்டு வாழ்வின் நிலைபேறான இலக்கிய, வாழ்வியல் ஆளுமைகள் இந்நூலின் வழி இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகமாதலும் பெரிதும் அறியப்படாத மேலைப்பண்பாட்டுத் தரிசனங்கள் தமிழுக்காதலும் குறிப்பிடத்தக்கது. இலக்கிய, வாய்மொழி ஆதாரங்களுடன் வரலாற்று உண்மைகளையும் தேடி இவ்வொப்பீடுகளைச் செய்வதற்கு நிறைந்த துணிவு வேண்டும். முருகுவின் தற்துணிவுடன் அவருக்கே உரித்தான ஆக்கத்திறனும் பலமாக உள்ளது.

"முருகு"வின் உயிர்ப்பான கவிதை வடிவில் செப்பலுற்ற அவர் பொருண்மைகளும் செழுமை பெறுகின்றன என்றால் மிகையில்லை!.

உலகமயமாதல் என்ற ஒரு வழிப்பாதையில் சுயமறியாமலும் சுயம் தொலைத்தும் அழிகின்ற இந்நாள் அவலங்களிடை "கிழக்கும் மேற்கும்" ஒன்றை ஒன்று அறிதலும் புரிதலும் உரியவாறு இசைதலும் காலத்தின் தேவையாகும். இந்த வகையில் எதிர் காலத்தில் இந்நூலை ஆங்கிலத்திலும் முருகு தரவேண்டும்.

இந்தக் காலப்பணியின் உள்ளொளியான "முருகு" மென்மேலும் பெறுமதியான படைப்புக்களைச் சமூகத்துக்காக்க எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்!.

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

ஆக்கபூர்வமாகச் சிந்திக்க விரும்புவன்: ஆக்க பூர்வமாக மற்றவர்களிலும் பார்க்கச் சற்றே வித்தியாசமாக - ஏதாவது படைக்க வேண்டும் என்று துடிப்பவன் யான். இது என்னைப் பற்றியதொரு சின்னஞ் சிறிய குறிப்பே!

எனது சிந்தனையில் ஒரு நாள் எமது தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு அதியமான் என்னும் மன்னன் அதிசய நெல்லிக்கனி கொடுத்த நிகழ்வு தலைகாட்டி நின்றது. அந்தத் தொடரில் சிறிது நேரத்தில் கிரேக்கப் பேரறிஞர் - தத்துவமேதை - சோக்கி ரட்டீசுக்குக் கிரேக்க ஆட்சியாளர்கள் நஞ்சு கொடுத்துக் கொன்ற நிகழ்ச்சியும் தலை யினை நீட்டி நின்றது.

ஒன்று கிழக்கே நடந்தது. மற்றையது மேற்கே நிகழ்ந்தது. இவ்விரு நிகழ்ச்சி களையும் இணைத்துப் பார்த்த போது "ஔவையார் - சோக்கிரட்டீஸ்" என்னும் எனது ஒப்பீட்டுக்கவிதை உருவானது!

இக்கவிதையை எடுத்துக் கொண்டு அன்றைய வாரமுரசொலி இதழின் பிரதம ஆசிரி யரும் அறிஞருமான உயர்திரு. உமாமகேஸ்வரன் அவர்களிடம் சென்று காண்பித் தேன். அவர் இக்கவிதை பல தடவை வாசித்துப் பார்த்து விட்டு "இது ஒரு புதுவித மான பார்வை. மிக நன்றாகவே இருக்கின்றது. இது போல இன்னும் எழுதுங்கள். நான் பிரசுரிக்கின்றேன்" என்று கூறிப் பாராட்டி உற்சாகமூட்டினார்.

1989ல் எனது அக்கவிதையைக் "கிழக்கும் மேற்கும்" எனும் தலைப்பிட்டு அடுத்த வாரமுரசொலி இதழிலேயே பிரசுரித்துதவினார். அக்கவிதை எனது "மனிதர்கள்" என்னும் கவிதைத் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது! அக்கவிதையை இத்தொ குப்பின் நிறைவுப் பகுதியிலும் பிரசுரித்துள்ளேன். அக்கவிதையை வளர்த்து விரித்து இத்தொகுப்பில் 6வது கவிதையாகவும் இடம்பெறச் செய்துள்ளேன்.

கதிரிப்பாயைச் சேர்ந்தவரும் தமிழறிஞருமான உயர்திரு. உமாமகேஸ்வரன் அவர்கள் அன்றெனக்குத் தந்த ஊக்குவிப்பின் - தூண்டுதலின் - விளைவே இத் தொகுப்புக்கு மூல காரணமாக அமைந்தது என்பதனை மகிழ்வுடனும் நன்றியுட னும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது "கடும்" உழைப்புக் காரணமாகக் கவிதைகள் உருவான போதிலும் இத்தொகுப்பில் கடைசியாக இடம் பிடித்துள்ள நாலு கவிதைகளும்தான் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக 1990ம் ஆண்டில் நாலு "ஈழநாடு வாரமலர்களிலே" பிரசுரமாகும் வாய்ப்பினைப் பெற்றன! ஆயினும் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற நிலைமை காரணமாக எனது கவிதைகள் தொடர்ந்து பிரசுரமாகும் பெருவாய்ப்பினை இழந்து விட்டன.

அந்த நாலு கவிதைகளில் 14வது கவிதையை வளர்த்து - புதிய - மேலதிக - தகவல்களுடன் இத்தொகுப்பில் இணைத்துள்ளேன்.

அதன் பின்னர் சில நாளேடுகளுக்கு எனது கவிதைகள் சிலவற்றினை அனுப்பி இருந்தேனாயினும் எனது கவிதைகள் பிரசுரமாகவில்லை என்பது கசப்பான அனுபவம் எனக்கு!

நீண்டகாலக் காத்திருப்பின் பின்னர் 2003ம் ஆண்டு "நமது ஈழநாடு" நாளேட்டின் பிரதம ஆசிரியரை நாடி அவரிடம் எனது கவிதைகளைக் காண்பித்தேன். உடனே அவைகளை ஆர்வமுடன் பெற்றுப் படித்துப் பார்த்துவிட்டுக் கணப்பொழுது சிந்தித்தார். "அடுத்தடுத்த வாரம் முதல் ஒவ்வொரு திங்கள் இதழிலும் உங்கள் கவிதை தொடர்ந்து இடம் பெறும். எஞ்சிய கவிதைகளையும் கொண்டு வந்து தாருங்கள்" என்று உறுதிமொழி தந்து என்னை அனுப்பி வைத்தார்!

அவர் அளித்த வாக்குறுதியின்படியே எனது இந்த ஒப்பீட்டுக் கவிதைகள் 17.02.2003ம் திகதி முதல் சுமார் ஓராண்டு காலம் ஒவ்வொரு திங்களிலும் பொருத்தமான ஓவியங்களுடன் நமது ஈழநாடு இதழ்களில் பிரசுரமாகின என்பது மகிழ்ச்சிக்குரியதொரு நிகழ்ச்சி!

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள 10வது 11வது ஆகிய கவிதைகள், நமது ஈழநாடு இதழ்களில் காலநிலை மாற்றம் காரணமாக இடம்பெறும் வாய்ப்பினை இழந்த போதிலும் இத்தொகுப்பில் இடம்பெறும் பெருவாய்ப்பினைப் பெற்றுள்ளன.

எனது இந்த ஒப்பீட்டுக் கவிதைகளை அழகாக - ஆர்வத்தோடு - பிரசுரித்து ஊக்கமளித்த "ஈழநாடு" ஆசிரியர் உயர்திரு. எஸ். பெருமாள் அவர்களுக்கும் - "நமது ஈழநாடு" ஆசிரியர் உயர்திரு. எஸ். ரகுராம் அவர்களுக்கும் முதலில் எனது இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

அடுத்ததாக ஒப்பீட்டுக் கவிதைகளைக் கொண்டுள்ள இந்தத் தொகுப்பிற்குப் பொருத்தமான அணிந்துரையை மனமகிழ்வுடன் தந்துதவியுள்ள யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிய கலாநிதி பேராசிரியர். எஸ். சிவலிங்கராசா அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள் என்றென்றும் சமர்ப்பணம்!

எனது இந்த நூலுக்கு எனது விண்ணப்பத்தினை ஏற்றுக்கொண்டு பொருள்பொதிந்த நயப்புரையை மனமுவந்தளித்த எனது பேரன்புக்குரிய பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் அவர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள் சமர்ப்பணம்.

அடுத்து இத்தொகுப்பிற்கு அர்த்தம் நிறைந்த அழகு மிகுந்த அட்டைப் படத்தை அமைத்துத் தந்துதவிய அன்புக்குரிய திரு. முருகையா பிரணவன் அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகும்.

அடுத்து நாளேடுகளில் பிரசுரமான நேரங்களில் இக்கவிதைகளுக்குப் பொருத்தமான ஓவியங்களைத்தீட்டி உதவியவரும் நாடறிந்த நல்லதொரு ஓவியரும் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு.சிவசுப்பிரமணியம் (ரமணி) அவர்களுக் கும் என் நெஞ்சம் கனிந்த நன்றிகளை அர்ப்பணிக்கின்றேன்.

மேலும் எனது கவிதைகள் அனைத்தையும் படித்துப் பார்த்துக் கையெழுத்துப் பிர திகளாக இருந்த போதிலும் பொருத்தமான திருத்தங்கள் - மாற்றங்கள் -முதலான வைகளைச் செய்வதற்கு அன்புடனான ஆலோசனைகளைத் தந்து உதவிய என் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரியவர்களான அமரர்களான கலாநிதி - கவிஞர் இ. முருகையன், புலவர் ம. பார்வதிநாதசிவம், மூதறிஞர் சொக்கன் ஆகிய அறிஞர் பெருமக்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள் என்றென்றும் உரியதாகும்.

அடுத்ததாக இக்கவிதைகளை அழகாகக் கணினியில் பதிவு செய்தும் அவற்றில் நான் மேற்கொண்ட திருத்தங்களையெல்லாம் விருப்புடன் கணினியில் சேர்த்தும் பேரு தவி புரிந்த யாழ். இராசாவின்தோட்ட வீதியில் இல:151 இல்லத்தில் வாழ்ந்திருக்கும் செல்வி. சாம்பசிவம் சாந்தரூபி அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளும் வாழ்த்துக்களும் என்றென்றும் உரித்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக இத்தொகுப்பினை அழகுற அச்சிட்டுதவிய யாழ் பிறவுண் வீதியில் அமைந் துள்ள ஜெயஸ்ரீ அச்சக உரிமையாளர் உட்பட அவ்வச்சக நிறுவனத்தைச் சேர்ந்த அனைவருக்கும் என் உளப்பூர்வமான நன்றிகள் சமர்ப்பணம் என்றென்றும்!!

1989ம் ஆண்டில் தொடங்கிய எனது கடும் உழைப்புடனான எனது இம்முயற்சி இன்று தான் இனிதே நிறைவேறுவது கண்டு என் மனது மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றமை கண்டு தமிழன்னையின் பதமலர் பணிந்து என் நன்றிகளைச் சமர்ப்பிக் கின்றேன்!!.

இக்கவிதை தொகுப்புப் பற்றிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வாசகப்பெருமக் களிடமிருந்து ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

நன்றி

–(முருகு)–

**ச.முருகையா**

**45 சுவாமியார் வீதி,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**
**30.04.2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "செம்மொழி செகமெங்கும் அரசோச்சப் பாடுங்கள்"

இராகம் :- பிலஹரி
தாளம் :- ஆதி ( சதுஸ்ர நடை )

**பல்லவி**

செம்மொழியா மெங்கள் செந்தமிழ் மொழியிந்தச்
செகமெங்கும் அரசோச்சுமே - என்றும் ! ( செம்... )

**அனுபல்லவி**

தென்பொதிகை உதித்த குறுமுனி துதிசெய்த
தொன்மையுடன் தெய்வத் தன்மையிலும் மிகுந்த ( செம்... )

**சரணம்**

இராகம் :- சாருகேசி
தாளம் :- ஆதி (சதுஸ்ர நடை)

இயலிசை கூத்தென்னும் தமிழ்மூன்றும் மணியாரம் !
இன்பங்கள் தரும்ஐந்து காப்பியங்கள் முத்தாரம் !!
திருமுறை பாசுரங்கள் கருத்தீர்க்கும் பொன்னாரம் !
திருக்குறள் சொல்லும்நீதி பாரினுக் காதாரம் !! ( செம்... )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம் :- பாகேஸ்வரி**
**தாளம் :- ஆதி ( சதுஸ்ர நடை )**

எண்ணரும் இலக்கியங்கள் அணிசெய்யு மொருமொழியே !
பன்னரும் இலக்கணநூல் அரண்செய்யு மெம்மொழியே !!
பன்னரும் அறநூல்கள் எழில் செய்யு மொருமொழியே !!
விண்ணவ ரும்போற்றும் மொழியெங்கள் செம்மொழியே !!

( செம்... )

**இராகம் :- அடானா**
**தாளம் :- ஆதி ( திஸ்ர நடை )**

முடிமன்னர் முடிசாய்த்துத் தமிழ்ப்பணி தலைக்கொண்டார்!
முச்சங்கம் அமைத்தன்று புலவோரும் பணிகொண்டார்!!
முத்தமிழ்ச் சுவைகண்ட போப் ஐயர் போன்றோர்கள்
முனைப்புடன் தமிழுக்குப் பணிசெய்து நலம் கொண்டார்!

( செம்... )

**இராகம் :- வசந்தா**
**தாளம் :- ஆதி ( திஸ்ர நடை )**

செம்மொழிப் புகழையெலாம் உரைத்திடல் பேரின்பம் !
நம்மொழிக் கணிசேர்த்தல் அதைவிடப் பெரும் இன்பம் !!
செம்மொழியைப் போற்றிப்பா இசைத்தல் உயர் இன்பம் !
செம்மொழி எங்களன்னை என்பதெம் உயிர்க்கின்பம் !!

( செம்... )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம் :- அமிர்தவர்ஷினி**
**தாளம் :- ஆதி ( மிஸ்ர நடை )**

செம்மொழி வளத்தையெல்லாம் நாலைந்து வரிகளிலே
செம்மையா யுரைத்திடுதல் யாராலும் முடியாது !
செம்மொழி வனப்பையெல்லாம் நாள்தொறும் கற்பதல்லால்
செவ்வையா யறிந்து கொள்ள வழியொன்றும் கிடையாது !

( செம்... )

**இராகம் :- மத்தியமாவதி**
**தாளம் :- ஆதி ( மிஸ்ர நடை )**

செகத்துள்ள அறிஞர்காள் வந்தொன்று கூடுங்கள் !
நம்மொழி புகழ்போற்ற வந்திங்கே சேருங்கள் !!
நம்மொழி வளர்ந்தோங்க வழியெல்லாம் கூறுங்கள் !
செம்மொழி செகமெங்கும் அரசோச்சப் பாடுங்கள் !!

( செம்... )

***

2010ம் ஆண்டில் "தமிழ் செம்மொழி" யாகப் பிரகடனம் செய்யப் பெற்றதனை முன்னிட்டுத் தமிழகத்தில் தமிழ்நாடு அரசால் 2010ல் எடுக்கப்பட்ட மாபெரும் மாநாட்டை முன்னிட்டு எம்மால் ஆக்கப்பட்டுத் "தினகரன்" நாளேட்டில் பிரசுரமானதுவே இப்பாடல்.

-கவிஞர் முருகு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1) | அணிந்துரை | v |
| 2) | நயப்புரை | vii |
| 3) | என்னுரை | ix |
| 4) | தமிழ்வாழ்த்து (கவிதை) | xiii |

**ஒப்பீட்டுக் கவிதைகள்**

| | | |
|---|---|---|
| 1. | மாமன்னன் சங்கிலி<br>மாவீரன் யூலியஸ்ஸீஸர் | 1 |
| 2. | கௌதம புத்தர்<br>சேர் ஐசாக் நியூட்டன் | 9 |
| 3. | சிறுத்தொண்டர் நாயனார்<br>அமிஸ் எட் அமிலஸ் | 17 |
| 4. | மாமன்னன் அரிச்சந்திரன்<br>இறையன்பன் யோபு | 28 |
| 5. | மூன்றாம் நெடுஞ்செழியன்<br>செல்வி புளோரன்ஸ் நைற்றிங்கேல் | 42 |
| 6. | ஔவையார்<br>சோக்கிரட்டீஸ் | 50 |
| 7. | ஆருணி<br>கான்சு | 67 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 8. | புலவர் தருமி<br>கவிஞர் பிர்தௌசி | 75 |
| 9. | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்<br>வீரமாமுனிவர் | 85 |
| 10. | மாமன்னர் அசோகர்<br>மாவீரன் அலெக்ஸாண்டர் | 91 |
| 11. | இளங்கோ அடிகள்<br>பாவலன் ஹோமர் | 109 |
| 12. | வீரபாண்டிய கட்ட பொம்மன்<br>மாவீரன் நெப்போலியன் | 141 |
| 13. | குழந்தைக் கண்ணன்<br>குழந்தை யேசு பாலன் | 149 |
| 14. | தாஜ்மஹால்<br>பிரமிட்ஸ் | 154 |
| 15. | ராஜ ராஜ சோழன்<br>பதினாறாம் லூயி மன்னன் | 163 |
| 16. | ஞானப்பிரகாச முனிவர்<br>சிந்தனையாளர் அரிஸ்டாட்டில் | 173 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 01 மேற்கும்

## மாமன்னன் சங்கிலி
## மாவீரன் யூலியஸ் ஸீஸர்

கிழக்கினில் அன்று வாழ்ந்த மன்னன்
இன்னுயிர் நண்பனின் துரோகச் செயலால்
இழப்பதற்கரிதாம் தனது உயிரையும்
கிடைப்பதற்காரிதாம் அரசையும் இழந்தான்!
மேற்கினில் அன்று வாழ்ந்த மாவீரன்
போற்றும்தன் நண்பரின் வஞ்சனைச் செயலால்
ஓதுதற்கரிதாம் தனது உயிரையும்
தேடுதற்கரிதாம் தன் நாட்டையும் இழந்தான்!!

யாழ்ப்பாண அரசின் தலைநகர் நல்லூர்!
பார்போற்ற அரசாண்ட பரராச சிங்கனின்
இளைய மகனாம் சங்கிலி – தன் அண்ணனாம்
பரநிருப சிங்கனின் உரிமையை மீறியே
ஏற்றுக் கொண்டான் – தந்தையின் ஆட்சியை!
ஏற்றம் பெற்றன தமிழுடன் சிவநெறி!
பறங்கியர் மன்னாரில் மதமாற்றம் செய்வதை
அறிந்ததும் சங்கிலி மன்னார் விரைந்தான்!
மதம் மாறினோரை மிரட்டியும் – அங்கு
மதம் மாற்றினோரை விரட்டியும் மீண்டான்!
சங்கிலி மன்னனை ஆயுதப் போரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லுதல் அரிதென உணர்ந்த பறங்கியர்
நல்லவர் போலவே மன்னனை நாடித்தம்
கோவில் அமைத்திட அனுமதி வேண்டினர்!
வேண்டிய அனுமதி மறுக்கப்பட்டதால் ...
அனுமதி கேட்டனர் வர்த்தகம் செய்திட!!
அதனையும் மன்னன் மறுத்தான் – ஆயினும்
பரநிருபசிங்கன் பரிந்துரை செய்யவே...
அனுமதி வழங்கினான் வர்த்தகம் செய்யவே!
மீண்டும் பறங்கியர் வீடுகள் அமைத்திட
அனுமதி பெற்றுக் கோட்டை அமைத்தஇவ்
வஞ்சனைச் செயலினைக் கண்டதும் சங்கிலி
வெஞ்சினம் மிகுந்து வெஞ்சமர் புரிந்தான்!
பறங்கிக் கோட்டையை மண்மே டாக்கினான்!
பறங்கிப் படைகளும் பஞ்சாய்ப் பறந்தன!
சங்கிலி மன்னனின் நண்பனாய் விளங்கிப்பின்
சங்கிலிக் கெதிராகப் பறங்கிக்குத் துணைநின்ற
காக்கை வன்னியனிடம் ஊர்காவற் துறைக்குப்
பறங்கியர் பறந்தனர் புகலிடம் வேண்டியே!
நல்லூரில் தமக்குற்ற இழப்புக்குப் பதிலீட்டை
நஞ்சன் வன்னியிடம் பறங்கியர் நெருக்கினர்!
வெளிப்பகை அழைத்துத்தம் குலப்பகை தீர்த்திடத்
துணிந்த அமைச்சராம் அப்பா முதலியும்
பரநிருப சிங்கனும் காக்கை வன்னியனும்
பறங்கியருடன் கலந்து சதித்திட்டம் தீட்டினர்!
திட்டப் படியோர்நாள் பறங்கிப் படைகள்
நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசலில்
அணிசெய்து நின்றிட – அவற்றின் நடுவே
மாறுவேடத்தில் காக்கைவன்னியன் நின்றான்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைவந்த செய்தியை அறிந்ததும் சங்கிலிதன்
படைகள் தொடர்ந்திட வாசலை அடைந்தான்!
சதிகாரரின் சூழ்ச்சியால் மன்னனின் தளபதி
சமர்க்களத் திருந்து அகற்றப் பட்டிருந்தான்!
மன்னன் தன்தளபதி களத்திலில்லை என்பதை
அறிந்து கொண்டதும் திகைத்து நின்றான்!
நெருக்கடி மிகுந்த அந்த வேளையில்
மன்னனின் உதவிக்கு வருபவன் போல
மன்னனை நோக்கி வந்தான் வன்னியன்!
தன்னுயிர் நண்பனாம் வன்னியின் வருகையால்
இதயம் மகிழ்ந்த சங்கிலி தன்நண்பனை
இருகை நீட்டி அன்புடன் அணைத்தான்!
வன்னியும் பதிலுக்காய் அரவணைப் பவன்போல
மன்னனைக் கைகளால் இறுகப் பற்றினான்!
சதித்திட்டப் படியே தகுந்த நேரத்தைச்
சதித்திட்டப் படியே வன்னியின் "சைகையை" –
எதிர்பார்த் திருந்த பறங்கியர் விரைந்து
சங்கிலி கைகளில் இட்டனர் விலங்கினை!
மன்னனின் நிலைகண்டு படைகள் கிளர்ந்தன!
"தளபதி இன்றிச் செயற்படல் தவறு"எனத்
தடுத்தான் படைகளைப் பரநிருப சிங்கன்!
எனவே கிளர்ந்த மன்னனின் படைகள்
அக்கிரமம் கண்டும் அடங்கி நின்றனர்!
அக்கிரமம் அறிந்து விரைந்த தளபதி
வழியில் பதுங்கிக் காத்து நின்ற
பழிகாரர் களால் கொலையுண் டிறந்தான்!
பொருத்த மில்லாத பொய்ப்பழி குற்றம்
மன்னன் மீதினில் சுமத்திய பறங்கியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணை செய்வதாய் வித்தைகள் நிகழ்த்தி
வீர மன்னனின் சிரத்தைக் கொய்தனர்!
தமிழரின் ஆள்புலம் கொடியவர் காலின்கீழ்!
தமிழரின் சுதந்திரம் கயவரின் காலின்கீழ்!!
தலைநிமிர்ந்து வாழ்ந்த தமிழினம் தாழ்ந்தது!
தலை நிமிர்ந்து அரசாண்ட தமிழரசு வீழ்ந்தது!!



"உலகினை ஆள்வோர் உரோமரே – அந்த
உரோமரை ஆண்டிட வல்லவன்நான்" என
ஆர்த்தன் றெழுந்த யூலியஸ் ஸீஸர்
அயல் நாடுகளை அடித்து வீழ்த்தினான்!
ஆட்சியில் அமர்ந்தவன் தன்பலம் (நா)கூட்டினான்!
ஆண்டுகள் தோறும் நிகழும் நகரவிழாவினை
இவ்வாண்டு ஸீஸரின் வெற்றி விழாவாகச்
சிறப்புடன் நடத்திட விரும்பிய மக்கள்
பொருத்தமா யொழுங்குகள் விரைந்து செய்தனர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருவிழா நாளன்றுதன் மனைவி "கல்பேணியா"
நண்பன் அந்தோனி ஆகியோர் உடன்வர
நகர் வலம் வந்தான் யூலியஸ் ஸீஸர்!
வருகின்ற வழியில் மாவீரன் ஸீஸரை
"மார்ச் நடுநாளில் உனதுஇப் பெருமிதம்
என்னவாகும் இருந்து பார்" என்று ஓர்
குரலழைத்து எச்சரிக்கை தந்ததாயினும்
அலட்சிய மாயவன் அடைந்தான் விழாமேடை!
முன்னரே ஏற்பாடு செய்ததன் வண்ணமே
ஸீஸரின் தலையில் முடியினைச் சூட்டிட
மும்முறை முயன்றனர் – ஸீஸர் தடுத்தான்!
மக்கள் ஆட்சியை மாற்றிப் புதிதாய்
மன்னனாட்சி முறையை மீண்டும் புகுத்தலை –
ஸீஸர் மணிமுடி சூடிக் கொள்வதை –
ஸீஸரின் உயிர் நண்பன் புறூட்டஸ் வெறுத்தான்!
மார்ச் நடுநாளில் உரோமின் மன்னனாய்
ஸீஸர் மணிமுடி சூடிக் கொள்ளுதல்
உறுதி என்பதைக் காஸ்க்கா கூறிடக்
கேட்டதும் காஸியஸ் விரைந்து காஸ்க்காவைத்
தந்திரமாகத் தன்அணி சேர்த்தவன்
சூழ்ச்சிகள் செய்து மார்க்கஸ் , புறூட்டஸ்
என்னுமிரு பேரையும் இன்னும் பலரையும்
தன்னணி சேர்த்துக் கொண்ட காஸியஸ் –
ஸீஸரைக் கொல்லத் திட்டம் வகுத்தான்!
மார்ச் நடுநாளின் மறுநாள் ஸீஸர்
அரசியல் மன்றம் சென்றிட முனைந்தான்!
"கடந்த இரவு நான் கெட்ட கனவுகள்
கண்டேன்" என்று மனைவி கல்பேணியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசியல் மன்றம் செல்ல வேண்டாம்" எனத்
தடுத்தாளாயினும் தடைகளை மீறி
அரசியல் மன்றம் விரைந்தான் ஸீஸர்!
அன்றுஎச்சரித்த மனிதனைக் கண்டதும்
"மார்ச் நடுநாள் வந்தும் என்னாச்சு?"
என்று கேலியாய்க் கேட்டான் ஸீஸர்!
"மார்ச் நடுநாள்வந்ததென்றாலும் அது
முடியவில்லையே இன்னும்" என்றான் அம்மனிதன்!
நண்பர்கள் சூழ்ந்திட மன்ற வாசலில்
அமைந்துள்ள சிலைஅருகினில் ஸீஸர் வந்தான்!
சதிகாரர் அனைவரும் ஸீஸரை சூழ்ந்தனர்!
ஸீஸரால் முன்னர் நாட்டினை விட்டு
விரட்டப்பட்ட ஒருவனின் உறவினன் -
விரட்டப்பட்டவனை மீண்டும் உரோமினுள்
வருவதற்கு அனுமதி வழங்கும் வண்ணம்
ஸீஸரி டத்தோர் விண்ணப் பத்தினை
நேரிலே கொடுத்திட முனைந்து நின்றான்!
அதனை ஏற்றிட மறுத்தான் ஸீஸர்!
அவ்வுற வினனுக்கு உதவுவார் போலப்
புரூட்டஸ் காஸியசுடன் அவ்விடம் வந்தான்!
இருவரும் அவனுக்காய் ஸீஸரி டத்தினில்
பரிந்து பேசியும் அவர்களின் பேச்சையும்
ஏற்றிட மறுத்தான் யூலியஸ் ஸீஸர்!
ஏற்றதோர் தருணம் இதுவென்று கண்ட
காஸ்க்கா தனது உடைவாளையெடுத்து
ஸீஸரின் முதுகினில் குத்திடக் கண்ட
ஸீஸரின் நண்பனாம் புரூட்டஸ் விரைந்து
ஸீஸரின் முன்பக்கம் சென்று நின்றவன்



ஸீஸர்



மார்க் அன்ரனி



ஸீஸர்
கொலைசெய்யப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புரூட்டஸ்


காசியஸ்



தன்னுடை வாளினை எடுத்து ஓங்கி
"உரோமின் பகைவன் வீழ்க" எனக் கூவி
ஸீஸரின் மார்பினில் குத்திடக் கண்ட
ஸீஸர் திகைப்புடன் "நீயுமா புரூட்டஸ்?" எனக்
கேட்ட வண்ணம் நிலத்திடை வீழ்ந்தான்!
சில நொடிக் குள்ளே அவனுயிர் பிரிந்தது!
இருபத்து மூன்று வாள் குத்துக் காயங்கள்
ஸீஸரின் உடலில் காணப்பட்டன!
ஸீஸரின் நண்பர்கள் வழங்கிய "பரிசிதோ?"
ஸீஸரின் எதிர்நிற்கப் பயந்தோரின் "பரிசிதோ"?
"சுதந்திரம் வாழ்க" எனச் சிலர் கூவினர்!
"சமத்துவம் வாழ்க" எனச் சிலர் கூவினர்!!
"கொடுங்கோன்மை வீழ்க" எனச்சிலர் கூவினர்!!!
புரூட்டஸ்தன் குழுவுடன் மகிழ்ச்சியில் முழ்கினான்!
ஸீஸரின் நண்பனாம் மார்க்அந்தோனி
ஸீஸரின் உடலினை அடக்கம் செய்திட
அனுமதி கேட்டிட அதனை ஏற்றிட்ட புரூட்டஸ்
மார்க்அந்தோனிக் கனுமதி வழங்கினான்!
அவைக்கு வந்ததும் அந்தோனி – ஸீஸரின்
உடலினைக் கண்டு கதறி அழுதான்! – பின்
அந்தோனி எழுந்து அவையினைப் பார்த்து
"ஸீஸரைப் புகழ்ந்து பேசநான் வரவில்லை!
அவரின் உடலினை அடக்கம் செய்யவே
இங்கு வந்துள்ளேன்" என்றவன் தொடங்கித்தன்
பேச்சுத் திறமையால் மக்களைத் தன்பக்கம்
சாய்ந்திடச் செய்ததோ டல்லாது அவர்களை
ஸீஸரை சதிசெய்து படுகொலை செய்த
அனைவர்க்கும் எதிராய்க் கிளர்ந்திடச் செய்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினம் கொண்ட மக்கள் சதிகாரர்களின்
வீடுகளைத் தேடித் தேடித் தீயிட்டு எரித்தனர்!
பழிக்குப் பழியெனப் பாய்ந்து சிதைத்தனர்!
ஆண்டுகள் சிலகாலம் வாழ்ந்ததன் பின்னர்
தன்னைத் தானே அழித்தான் புரூட்டஸ்!
உரோமின் மன்னனாய் ஸீஸர் இருந்திலன்! – ஆனால்
உரோமரின் மனங்களில் மன்னனாய் இருந்தான்!

நண்பனை நம்பியே அரசை இழந்தான்!
நண்பனை நம்பியே மணிமுடி இழந்தான்!
நண்பனை நம்பியே இன்னுயிர் இழந்தான்!
நம்மன்னன் சங்கிலி கிழக்கினில் – அன்று!!
நண்பரை நம்பியே ஆட்சியை இழந்தான்!
நண்பரை நம்பியே ஆருயிர் இழந்தான்!
நானிலம் போற்றிடும் மாபெரும் வீரனாம்
யூலியஸ் ஸீஸர் மேற்கினில் – அன்று!!

**கால அட்டவணை**

| | |
|---|---|
| மாமன்னன் சங்கிலி | - கி.பி 1515 - கி.பி 1565 |
| மாவீரன் யூலியஸ் ஸீஸர் | |
| மண்ணில் பிறப்பு | - கி.மு 100 - 07 - 12/13 |
| மணிமுடி ஏற்க மறுப்பு | - கி.மு 44 - 02 - 15 |
| உயிர் பறிப்பு | - கி.மு 44 - 03 -15 |
| உடல் எரிப்பு | - கி.மு 44 - 03 - 19/20 |

( நமது ஈழநாடு - 17.02.2003 , 24.02.2003 , 03.03.2003 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 02 மேற்கும்

## கௌதம புத்தர்
## சேர் ஐசாக் நியூட்டன்

மரமொன்றின் கீழே அமர்ந்து
மெஞ்ஞான விளக்கம் பெற்றார் -
கிழக்கிலோர் ஞானி - அன்று
மரமொன்றின் கீழே அமர்ந்து
விஞ்ஞான விளக்கம் பெற்றார் -
மேற்கிலோர் ஞானி - அன்று!!


கபிலவஸ்துவின் மன்னன்
சுத்தோதனன்!
அவனின் தேவி மாயாதேவி!
அவர்களின் குமாரன்
சித்தார்த்தன் -
அம்பு பட்டதோர்
அன்னப் பறவையின்
இன்னுயிர் காத்தவர் -
யசோதரையை மணந்து
பெற்றெடுத்து மகிழ்ந்தனர் -
ராகுலனை!
தேரில் உலா வருகையில்
மூப்பு பிணி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பினால் மனிதர்
வருந்திடக் கண்டு
தமது 29 ஆவது வயதில்
துறவினை ஏற்றிட்ட
சித்தார்த்தன் –
காரிருட்டினிலே
ந(த)ன்நகர் விட்டுத்
தன்மனை விட்டுக்
க(ந)டந்து களைத்ததால்
நினைவினை இழந்தனர்!
இடைகுலச் சிறுவனின்
ஆட்டுப் பாலுண்டு
"சாதிகள் இல்லை" என்னும்
பேருண்மையை உண(ய)ர்த்தினர்!
போதனை – தவத்தால்
நிறைவு காணாதவர்
தமது 35 ஆவது வயதினில்
வைகாசித் திங்களில்
பௌர்ணமி தினத்தில்
வெள்ளரசு மரத்தின் கீழ்
நிஷ்டையில் இருக்கையில்
"துன்பத்தின் காரணமும்
அதை வெல்லும் வழியும்"
அவர் சிந்தையில் உதித்தது!
ஞானோதயம் பெற்ற
சித்தார்த்தன் தான்
"கௌதம புத்தர்"!
"ஆசையை விட்டால்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனந்தம் உண்டாகும்" எனத்
தெளி(ரி)ந்து கொண்டவர்
மன்னன் பிம்பசாரன்
நிகழ்த்திய மிகப்பெரும்
யாகமென்றிலே
ஆகுதியாகப்
பலியிடப்படவிருந்த
ஆடுகள் இருநூறின்
ஆருயிர் காத்தனர்!
ஒன்றரை நாழி கடுகு
பெற்றுவரப்
பணித்ததன் மூலம்
"இறப்பு இயற்கை" எனத்
தனயனை இழந்து
துடிதுடித்த
தாய்க்கும் – இந்தத்
தரணிக்கும் உணர்த்தினர்!
மனிதரைக் கொன்று
மரணித்தவர்களின் விரல்களை
மாலையாய் அணிந்த
"அங்குலிமாலனைத்"
தன்னன்புப் பேச்சினால்
ம(பு)னிதனாக்கினர்!
பசியேற்பட்ட வேளைகளில்
பிச்சையேற்றுண்டவர் –
மற்றைய நேரத்திலவர்
மக்களுக்குத் தருமபோதனை!!
தம்மிறுதிப் பொழுதினை



ஆடுகளின்
இன்னுயிர் காத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவா" எனுமூரில்
"சுந்தன்" வீட்டில்
தங்கியிருந்து
அவன் தந்த உணவை
உட்கொண்டதனால்
நோய்கண்டிடவேயவர்
"குசி" நகர் சேர்ந்தார்!
அங்கு புத்தர் தமது
எண்பதாம் அகவையில்
அவனி வாழ்வினை
நிறைவு செய்தார்!
புனிதர் புத்தரின்
புதுமைகள் பற்பல!
புனிதர் புத்தரின்
அற(றி)வுரை பற்பல!!
புத்தரின் போதனைகளைப்
போற்றவோ பற்பலர்!
புத்தரின் போதனைப்படி!!
நடக்கவோ சிற்சிலர்!!



அங்குலிமாலன் புத்தரைக் கொல்லத் துரத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இங்கிலாந்திலுள்ள
'வூல்ஸ்தோப்' ஊரினில்
உதித்தவர் நியூட்டன்!
தந்தையை இழந்ததால்
அன்னையின் ஏழ்மையால்
கல்வியில் நியூட்டன்
கவனம் செலுத்தவில்லை!
எனினும் – நியூட்டன்
பொறிமுறையாலியங்கும்
காற்றாடி இயந்திரம்
சூரியச் சாயைகள்
பட்டங்கள்
நீர்க்கடிகாரம் எனப்
பலசெய்து கற்றார்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கேம்பிறிட்ஜில் கல்வி
கற்றிடச் சென்றார்!
கொள்ளை நோயின்
கொடுமையினாலே
கற்பதைக் கைவிட்டு
ஊருக்கு மீண்டவர்
புவியீர்ப்பு – ஒளியியல்
நுண்கணிதம் என்பவற்றில்
ஆய்வுகள் தொடர்ந்தார்!
அப்பிள் மரத்தின் கீழ்
ஓர்நாள் – ஓய்வாக
அமர்ந்திருந்த நியூட்டன்
பழமொன்று கீழே
விழுவதைக் கண்டார்!!
"மேல் நோக்கியும்
இவ்வப்பிள்பழம்
போயிருக்கலாமே!
நிலம் நோக்கியேன்
விழுகின்றது?" எனப்
பல நாளாகப்
பலவாறாகச்
சிந்தனை செய்தார்!
'எந்தப் பொருளையும்
தன்பால் ஈர்க்கும்
சக்தியிப் புவிக்குண்டு' –
என்னும் உண்மையைத்
தெளி(ரி)ந்து கொண்டவர்
ஒளியின் துணிக்கைக் கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலாண்ட ஈர்ப்புவிதி
நிறமாலை என்பவற்றினை
ஆய்வுகள் மூலம்
கண்டு தெளிந்தார்!!
தேற்றங்கள் பலவும்
தெரிந்து விளங்(க்)கினார்!
கோள்களின் ஒழுங்கு – தூரம்
அவற்றின் இயக்கம் என
ஆய்வுகள் செய்து
நிறுவிய நியூட்டனை –
கேம்பிறிட்ஜ் கழகம்
“கணிதப் பேராசிரியராகப்”
பதவியில் அமர்த்திப்
பெருமையில் திளைத்தது!
‘தெறி தொலைக்காட்டியை’
ஆய்வுகள் மூலம்
படைத்தார் நியூட்டன்!
‘றோயல் சொசாயிற்றி’
அவரைத்தன் தலைவராய்
ஏற்று மகிழ்ந்தது – அவருக்கும்
பெருமை அளித்தது!
பெருமை வெற்றது!!
மற்றைய உலோகங்களைப்
பொன்னாக மாற்றும்
‘இரசவாத வித்தை’ யின்
இயல்புகள் தெளிந்திட
இடையீடின்றித்
தொடர்ந்து முயன்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகள் மூலம்
அறிய முயன்றார்!
எண்பத்து நாலாண்டு
ஐசாக் நியூட்டன்
திருமணமின்றி வாழ்ந்தார்!
விஞ்ஞானத் துறையில்
அவரின் வெற்றிகள்
எண்ணிலடங்கா!
அவரின் பெருமைகள்
சொல்லிலடங்கா!!

கௌதம புத்தருக்கு
வெள்ளரச மரத்தின் கீழே
மெஞ்ஞான விளக்கம் – கிழக்கில்!
ஐசாக் நியூட்டனுக்கோ
அப்பிள் மரத்தின் கீழே
விஞ்ஞான விளக்கம் – மேற்கில்!!

**கால அட்டவணை**

கௌதம புத்தர் - கி.மு 563/573 - கி.மு 483/493

சேர். ஐசாக் நியூட்டன் - கி.பி 25.12.1642 - 20.03.1727

( நமது ஈழநாடு - 10.03.2003, 17.03.2003 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 03 மேற்கும்

## சிறுத்தொண்டர் நாயனார்
## அமிஸ் எட் அமிலஸ்

சிவனடி யவர்களின் பசித்துயர் தீர்ப்பதைச்
சிரம்மேற் கொண்டவர் - தன்பிள்ளைக் கறியுடன்
சிவனடி யவருக்கு உணவு படைத்தன்று
அன்பினில் சிறப்புற்றார் சிவதொண்டர் - கிழக்கினில்!
தன்னுயிர் நண்பனின் கொடிய நோய் தீர்க்கத்
தன்பிள்ளை யுடைய குருதியில் நண்பனைக்
குளிக்கச் செய்தவனின் நோயினைத் தீர்த்தன்று
குணத்தினில் உயர்ந்தாரோர் நண்பன் - மேற்கினில்!!

சோழமண்டலத்துள்ள ஊர்களில் ஒன்றாம் - திருச்
செங்காட்டங் குடியில் மகாமாத்திரர் குலத்தில்
தோற்றிய பரஞ்சோதியார் போர்க்கலை வல்லவர்!
போர்வல்லார் என்பதால் பல்லவ மன்னனாம்
முதலாம் நரசிம்ம வர்மனின் பணிப்பேற்று
உத்தர தேசத்துள்ள வாதாபி நகரத்தைப்
படைகொண்டு தாக்கி வெற்றி கொண்டங்கு
கிடைத்த பெருஞ்செல்வம் அனைத்தையும் பரம்சோதியார்
திரட்டி வந்தவைகளை மன்னன் முன்வைத்தார்!
பரஞ்சோதி யாரின் பெருவீரச் செயல்களைப்
போற்றிய அவ்வேளையில் அமைச்சர்கள் மூலம்
பரஞ்சோதியா ரொரு சிவபக்தன் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்ததும் பல்லவன் அஞ்சி நடுங்கியே
முத்தும் மணியுமா யள்ளிக் கொடுத்து
"இன்று முதல் நீர் சிவபெரு மானுக்கும்
சிவனடி யவர்கட்கும் விரும்பிய வண்ணம்
(சிவ)திருத்தொண்டு செய்வீர்" என விடைதந்து அனுப்பினான்!
பரஞ்சோதியாரும் தம்மில்லம் சேர்ந்து
"திருவெண்காட்டு நங்கை"யை மணம் செய்து
இல்லறம் நடத்தினார் நல்லற மாகவே!
ஒவ்வொரு நாளும் சிவனடி யார்களை -
ஒருநாளுக்கு ஒருசிவனடி யவரையாகிலும்
அன்புடன் அழைத்து உணவு படைத்து
அடியவர் உண்டபின் தாமுண்ணும் விரதத்தைச்
சிரமேற் கொண்டவர் பரஞ்சோதி யாவார்!
சிவனடி யவர்களை உயர்ந்தவ ராகவும்
சிவனடி யவரின்முன் தாம்சிறியவ ராகவும்
தம்மைத் தாழ்த்திக் கொண்டவர் ஒழுகவே
அனைவரும் அவரைச் "சிறுத்தொண்டர்" என்று
அன்புடன் - மதிப்புடன் - அழைக்க முற்பட்டனர்!
சிவனவன் அருளினால் "சீராளதேவர்" எனும்
தவமகன் உதித்தான் சித்தம் மகிழ்ந்திட!
சிவனடி யவர்க்குத் தினம்தினம் செய்யும்
சிவதொண்டை - மெய்யன்பைக் - கண்டு மகிழவும்
அகிலத் தவர்க்கிதை உண(ய)ர்த்தி வைக்கவும்
திருவுள்ளம் கொண்ட சிவபெரு மானொரு
சிவனடி யவராகத் திருவேடங் கொண்டு
திருச்செங் காட்டம் குடியினில் உள்ள
சிறுத்தொண்ட ருடைய வீட்டின் வாசலில்
சென்று நின்றவர் தொண்டரை அழைத்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவனடி யார்களைத் தேடிக் கொண்டவர்
வெளியே போனார்" என்று பதில்தந்த நங்கை
"உள்ளே வந்து ஆசனத் தமருங்கள்" எனச்
சிவனடியாரை அழைத்திட – அடியவர் மறுத்தார்!
மறுத்ததைக் கண்ட நங்கையார் விரைந்து
"எனது நாயகர் தினம்தொறும் தவறாது
சிவனடி யவர்க்குத் திருவமுது அளிப்பவர்!
காலை முதல் அடியவர் ஒருவரை யாகிலும்
காணாமை யினாலே சிவனடியாரைத் தேடிப்
போயுள்ளார் – உங்களைக் கண்டதும் மகிழ்வார்!
ஆதலின் தாங்கள் வந்துள்ளே அமருங்கள்!"என
அழைத்தார் பணிவுடன் – அதற்கும் மறுத்திட்ட
சிவனடியார் "கணபதிச் சரத்தினில் உள்ள
திருவாத்தி மரத்தின் கீழ் இருப்பதாய் அவரிடம்
தெரிவியுங்கள்" என்று தெரிவித்துச் சென்றார்!
சிவனடி யவர்களை எங்கெல்லாம் தேடியும்
கிடையாதுளம் நொந்து இல்லம் திரும்பிய
சிறுத் தொண்டரிடத்தில் சிவனடியார் பற்றி
நங்கையார் கூறிட விரைந்தவர் சென்று
சிவனடி யவரின் இருப்பிடம் கண்டு
தயவுடன் தாமேற்ற விரத்தை விளக்கித்
தனது விரதத்துக்கு இன்று நேர்ந்துள்ள
தடையினை– இடரினை – விளக்கி நின்றார்!
"ஆறு மாதத்துக்கு ஒருமுறையேதான்
பசுவைக் கொன்று உண்போம் – அத்துடன்
அவ்விதம் உணவுண்ணும் நாளும் இன்றுதான்!
ஆதலின் உம்மால் அவ்விதம் நமக்குணவு
படைத்திடல் இயலாது" என்றார் அடியவர்!


சிறுத்தொண்டர் மகனைப்
பள்ளியில் இருந்து
அழைத்து வருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்கேட்ட தொண்டர்" எம்மிடம் பசுக்கள்
பலவுண்டு அவைகளில் தாங்கள் விரும்பும்
பசுவைக் காட்டினால் தங்கள் விருப்பம் போல்
உணவு படைத்திடல் எமக்கு இலகுவாகும்" என்று
பணிவுடன் அடியவர் முன் வேண்டி நின்றார்!
அதுகேட்ட அடியவர் "நாம் உண்பதுவோ
நரபசு - அதுவும் ஐந்து வயதுடையதாய்ப்
பழுதில்லா அங்கமுடன் குடிக்கொரு பிள்ளையாய்
உள்ள ஆண் பிள்ளையைத் தாயார் பிடித்திடத்
தந்தை அரிந்தெடுத்துச் சமைத்த கறியுடன்தான்
நாமுண்போம்" என்று அடியவர் கூறவே - விரைந்து
தம்மில்லம் அடைந்தவர் துணைவியை அழைத்துச்
சிவனடியவரின் " உண்ணும் முறையினை"
விளக்கி முடித்ததும் நங்கையைப் பார்த்து
"இன்னமும் தாமதம் இன்றியே நம்மகன்
சீராள தேவனை அழைப்பதே தகும்" என்று
சிறுத்தொண்டர் கூறிட நங்கையார் இசைந்து
"பள்ளிக் கூடத்திற்கு விரைந்து சென்று எம்
பாலனை அழைத்துடன் வாருங்கள்" என்றார்!
மகிழ்வுடன் சென்றவர் மகனுடன் வந்தார்!
எதிர் கொண்ட தாயார் மகனை அழைத்து
நீராடச் செய்து தந்தைகைக் கொடுத்திடத்
தாயின் துணையுடன் அடியவர் விருப்பம் போல
செல்வனை அரிந்து கழிப்பன கழித்துச்
சேர்ப்பன சேர்த்துப் பாகம் பண்ணிய
இறைச்சிக் கறியுடன் வேறும் கறிகளும்
சோறும் சமைத்துக் கணவரிடத் ததனை
அறியத் தந்தார் - திருவெண்காட்டு நங்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுத்தொண்டர் மிகுந்த மகிழ்வுடன் தமது
சிவனடி யவரின் இருப்பிடம் அடைந்து
உணவுண்ண வரும்படி அன்புடன் அழைத்தார்!
தொண்டரின் வீட்டுக்கு அடியவர் வந்ததும்
தந்தையும் தாயும் மலரிட்டு அவர்பதம்
வணங்கி அவரிடம் “ உணவு படைக்கும்
விதிமுறை எது?” எனக் கேட்டிட அடியவர் –
“அன்னத்துடன் சமைத்த கறிவகை அனைத்தையும்
எம்முன் ஒருங்கே படைப்பீர்” என்றனர்!
தந்தையும் தாயும் அவ்விதம் படைத்தனர்!
அனைத்து உறுப்பும் பாகம் செய்தீரோ?” என
அடியவர் கேட்டிட “தலையிறைச்சியை மட்டும்
கழித்து விட்டோம்” எனப் பணிவுடன் கூறினர்!
அடியவர் அதற்கு “அதனையும் உண்போம்” எனக்
கூறிடக் கேட்டதும் இருவரும் திகைத்தனர்!
அருகினில் நின்ற தாதியா ராகிய
சந்தன நங்கையார் “அத்தலை இறைச்சியை
அடியவர் உணவினை உண்ணும் வேளையில்
நினைக்க வருமென்று முன்னரேயே நான்
பாகம் பண்ணினேன்” எனச் சொல்லிய வண்ணம்
எடுத்துக் கொடுத்திட அதனையும் படைத்தனர்!
“சிவனடி யார்களில் சிலரையாகிலும் இங்கே
அழைத்துடன் வருவீர்” என்றவர் பணித்திட
“உணவை உண்டிட இதுவுமோர் தடையோ?” –
என்றெண்ணிக் கொண்டு விரைந்த தொண்டர்
எவரையும் காணாது நொந்தில்லம் திரும்பிச்
“சிவனடி யார்கள் ஒருவரை யாகிலும்
எங்குமே காணேன்” எனத்தொண்டர் கூறிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மைப் போலிங்கு திருநீறு இடுபவர்
வேறும் உள்ளனரோ? ஆதலின் நீரே
எமக்கு அருகினில் இருந்துணவு உண்பீர்" எனச்
சொல்லிய தோடவர் நங்கையைப் பார்த்து
"எமக்குப் படைத்ததில் எடுத்து இவருக்கும்
தனியொரு கலத்தில் படைப்பீர்" என்று
பணித்திட – நங்கையார் படைத்து முடித்தார்!
சிறுத்தொண்டர் மீண்டும் அடியவ ரிடத்து
உண்ணும்படி வேண்டித் தாமுண்ணத் தொடங்கினார்!
இது கண்ட அடியவர் தொண்டரைப் பார்த்து
"ஆறு மாதத்துக் கொருமுறை உணவு உண்ணும்
நாமுண்ணும் வரையிலும் காத்திருக்காது – உணவு
எந்நாளும் உண்பவர்க்கு அவசரமேன்" எனக்
கேட்ட அடியவர் – தொண்டரைப் பார்த்து
"நம்முடன் அமர்ந்து உணவு அருந்திட
உமக்குப் புத்திரன் இருந்தால் அழைப்பீர்" என்றார்!
அதுகேட்ட தொண்டர் அடியவரைப் பணிந்து
"இப்போது எமக்கவன் உதவான்" என்றார்!
"அவன் வந்தாலே நாமுண்போம்" என்றார் அடியவர்!
"அடியவர் இன்னமும் உணவுண்ண வில்லையே" எனத்
துக்கித்த வண்ணம் தொண்டர் நங்கையுடன்
இல்லத்தின் வெளியே வந்து நின்ற வண்ணம்
"புதல்வா வா" எனக் கூவி அழைத்தார்!
"சீராளனே! அடியவர் தம்முடன் அருகிருந்து
உணவு அருந்திட அழைக்கிறார் வா" என்று
அன்புடன் அழைத்தார் அன்னையாம் நங்கையார்!
அப்போது தான் சீராளன் பள்ளியிலிருந்தோடி
வருபவன் போல் – வழமை போல் – ஓடி வந்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வுடன் அவனை வாரியணைத் தெடுத்துடன்
"இனியேனும் அடியவர் தடையின்றி உண்ணுவார்!" -
என்றெண்ணிய வண்ணம் வீட்டினுட் சென்றனர்!
வீட்டினுள் உணவின்முன் அமர்த்திருந்த சிவனடியாரை
அவ்விடம் காணாது உள்ளம் கலங்கினர்!
அடியவர் முன்பாகப் படைத்த உணவுகளும்
அவ்விடம் இன்மையால் அனைவரும் கலங்கினர்!
"அடியவர் எங்கேயாகிலும் ஒளிந்துள்ளாரோ?" -
என்றெண்ணி வீட்டுள்ளும் புறத்தும் தேடியும்
காணாதுளம் கலங்கியபடி வெளியே வந்தனர்!
சிறுத்தொண்டர் செய்திட்ட செயல்கள் யாவும்
பக்தியின் உ(ய)யிர்நிலை ஒளிர்வதாய் அமையவே - அதனை
ஏற்றுக் கொண்டருளிய சிவபெரு மானார் -
இந்திரன் முதலான தேவர்கள் முனிவர்கள்
சேவித்து நின்றிட - உமையவளுடனே -
நாயனாரும் மனைவியும் மகனும் தாதியாரும்
கண்டுள்ளம் மகிழ்ந்திட - இடபத்திலமர்ந்து
வானப்பெரு வீதியில் அருட்காட்சி தந்தனர்!
வானவர் மலர்தூவி தொண்டரை வாழ்த்தினர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ எழுபதுமுதல் எண்பது வரையுள்ள
குறுங்காப்பியப் பாடல்களின் தொகுப்பே
பிரெஞ்சு மொழிக் காப்பியம் "சாண்சன்ஸ்-டி-கெஸ்டி!"
இத்தொகுப் பினிலுள்ள பாடல் களினைப்
பிரான்ஸின் வடபகுதியில் உள்ள
"துரோவெர்ஸ்" எனும் பாணர் மரபினரும்
தென் பகுதியில் உள்ள "துரோபதர்" என்னும்
பாணர் மரபினருமே பாடினர் என்று
கருதிய போதிலும் -பாடியோர் பெயர்களை
யாரும் அறிந்திடாவிக் காப்பியம் தன்னை
மூன்று பிரிவினுள் அடக்குவர் அறிஞர்கள்!
இதன் முதற்பாகம் பிரான்சு நாட்டில்
நடந்து முடிந்ததோர் போராட்டம் பற்றியது!
இரண்டாம் பாகம் பிரிட்டனின் தொகுப்பு!
இதிற் குறிப்பிடத் தக்கது " கிறிஸ்டியன்-டி-டிராய்ஸ்!!"
பிரிட்டனின் அரசனாம் ஆர்தர் பற்றியும்
அவ்வரசனின் வட்டமேஜை வீரத் திருத்தகையர்
பன்னிருவர் பற்றியும் மொழிகின்ற பாகமது!
குறுங்காப் பியங்களில் இரண்டாம் தொகுதியில்
இணைக்கப்பட்டுள்ள "அமிஸ்- எட் - அமிலஸ்" எனுமிது
குடும்ப உறவுபற்றி விரித்திடும் காப்பியம்!
"அமிஸ்" என்பவரும் "அமிலஸ்" என்பவரும்
வெவ்வெறு இடங்களில் - ஒரே நாளில்
பிறந்தவர் என்பதுடன் இவர்கள் இருவருக்கும்
ஒரே நாளில்தான் ஞானஸ் நானமும்!
தோற்றத்திலும் ஒற்றுமை மிக்க இவ்விருவரும்
அரசனான "சார்லி மேகின்" என்பவனால்
வீரத் திருத்தகைய ராக்கப் பெற்றனர்!



அமிஸ் - அமிலஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நல்ல வேளையிற் தானிவ் விருவரும்
ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர்!
தம்மிடையே உள்ள உருவ ஒற்றுமையைக்
கண்டுள்ளம் வியந்து நட்பில் இணைந்தனர்!
மன்னன் "சார்லி மேகின்" தன் இளவரசியான
"பெல்லி செண்டை" அமிலஸிக்குக் கொடுத்திட
விருப்பம் கொண்டதை அறிந்தான் "கார்டர்"!
பொறாமை மிக்கவனாம் இக்கொடிய வீரத்திருத்தகை
"இளவரசியுடன் அமிலஸ் தவறான முறையில்
நடந்து கொண்டதாக" குற்றம் சுமத்தித்
தன்னுடன் மோதிட அமிலஸை அழைத்தான்!
தான் காதலித்த இளவரசி "பெல்லி செண்டைக்"
காட்டிக் கொடுத்திட விரும்பாத அமிலஸ் -
கார்டரின் சவாலை ஏற்றுக் கொள்ளாத
அமிலஸ் - தன்னுயிர் நண்பனாம் அமிஸ்ஸோடு
அவ்விடத் தினையே கைவிட்டு அகன்றான்!
பின்னொரு நாளில் தன்நண்பன் அமிலஸைக்
கவர்பொறி யிலிருந்து காத்திட வேண்டி
அமிஸ்ஸொரு பொய்ச்சத்தியம் செய்திட நேர்ந்தது!
அதனால் விரைவினில் அமிஸ்ஸைக் கொடியதாம்
குஷ்டநோய் தொற்றி வருத்தத் தொடங்கியது!
நோயாளியான அமிஸ்ஸை அவனது மனைவியும்
சுற்றத் தவர்களும் தனியே விட்டகன்றதால்
நோய்தரும் துயருடன் தனிமையும் வருத்தின!
நோயால் மிகுந்த துன்பம் அடைந்த
அமிஸ் தன்னுடைய நோய் தீரும் வழியாக
அவனது நண்பன் அமிலஸ்சுக்கும் - அவனின்
அன்பு மனைவியாம் பெல்லி செண்டிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த குழந்தையை வெட்டியதிற் பெருகும்
செங்குரு தியினிலே குளித்தால் மட்டுமே
தன்குஷ்ட நோய் தீர்ந்திடும் என்பதை
அறிந்த போதவன் அனலிடைப் புழுவாய்த்
தன்னிழி நிலையெண்ணித் துயரினில் உழன்றான்!
நோயாளியாம் அமிஸ் தன்னன்பு நண்பனிடம்தன்
நோய்தீரும் வழியினைக் கூறுவ தெப்படியென
வழியறியாதும் – அதனைத் தெரிவிக்கும்
மனத்துணி வின்றியும் – உள்ளம் தவித்தாலும்
தயங்கித் தயங்கி ஒருவழி யாகத்தன்
நண்பனிடத்தில் தன்நோய் போக்கிடும்
வழியினைக் கூறவே – தன்நண்பன் துயரினைத்
துயர்தரும் நோயினைப் – போக்கும் வழியினைத்
தன்நண்பன் வாயால் அறிந்த போதுடன்
அமிலஸ் முதலில் அகம்மிக வாடினான்!!
ஆயினும் தன்னுயிர் நண்பனைக் காத்திட
தன்நண்பன் நோயினைப் போக்கிட விரும்பித்
தனக்குள்ள ஒரேயொரு குழந்தையை வெட்டியதில்
பெருகிய குருதியில் தன்நண்பன் அமிஸ்ஸைக்
குளிக்கச் செய்யவே – அமிஸ்ஸின் கொடிய
குஷ்ட நோயும் அவனைவிட் டகன்றது!
உயிரின் இனிய உயர்நண்பர் களான
அமிலஸ்சும் தேவாலயம் போயினர்!
ஆண்டவ னுக்குத் தங்கள் நன்றியைக் கூறினர்!!



குழந்தையின் குருதியில்
நண்பனைக் குளிக்கச் செய்யும்
நண்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடியவர் பசிதீர்க்கத் தன்னொரு பிள்ளையின்**
**தசையிற் சமைத்த கறியுடன் உணவு**
**படைத்துத் தொண்டினில் உயர்ந்து நின்றார் -**
**சிறுத்தொண்டர் நாயனார் கிழக்கினில் அன்று!**

**தன்பிள்ளை யினுடைய இரத்தத் தினிலே**
**தன்னுயிர் நண்பனைக் குளிக்கச் செய்து**
**நண்பனின் நோயைத் தீர்த்து நட்பினில்**
**உயர்ந்தான் அமிலஸ் மேற்கினில் அன்று**

## கால அட்டவணை

சிறுத்தொண்டர் நாயனார் - கி.பி 600 - கி.பி 660
(பரம்சோதியார்) ( குருபூசை தினம் - சித்திரை பரணி)
முதலாம் நரசிம்மவர்மன் - கி.பி 630 - கி.பி 668
(நரசிங்கன்)

( நமது ஈழநாடு - 31.03.2003 , 07.04.2003 , 14.04.2003 , 21.04.2003 , 28.04.2003 , 05.05.2003 , 12.05.2003 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 04 மேற்கும்

## மாமன்னன் அரிச்சந்திரன்
## இறையன்பன் யோபு

இலட்சிய வாழ்க்கைக் காக
இடர்பல பெற்ற மன்னன்
இறுதியில் இலட்சி யத்தில்
வென்றனன் கிழக்கில் அன்று!
இலட்சிய வாழ்க்கை தன்னில்
இன்னல்கள் பெற்ற அன்பன்
இறுதியில் இலட்சி யத்தில்
வென்றனன் மேற்கில் அன்று!

கோசல நாட்டினுக்கு
அயோத்தியைத் தலைநக ராக்கிக்
கோன்முறை அரசு செய்தான் –
அரிச்சந்திரன் என்னும் மன்னன்!
இந்திர சபையில் ஓர் நாள்
"சத்தியம் நேர்மை வாழ்வின்
மந்திர மாக்கிக் கொண்டு
வாழ்பவன் எவனும் உண்டோ?" –
என்றொரு கேள்வி கேட்ட
வானவர் கோனைப் பார்த்து
"மன்னன் அரிச்சந்திரனே – உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய வாழ்க்கை வாழ்வோன்" –
என விடை அளிக்கக் கேட்டு
மாமுனி விசுவாமித்திரர்
சினம்மிகக் கொண் டெழுந்து
"அவனொரு பொய்யன் கள்வன்" –
எனமறுத் துரைக்கக் கேட்ட
மாமுனி வசிட்டர் நொந்து
"எனிலதை நிறுவல் வேண்டும்" –
என்றுடன் கிளர்ந்து நின்றார்!
"அவனிக்கு இன்றே சென்று
என் சொல்லை நிறுவுவேன் யான்!
அதனை நீர் காண்பீர்" என்று
அவையினுக் குரைத்து விட்டு
மண்ணுல கினுக்கு வந்த
மாமுனி விசுவா மித்திரர் –அந்த
மன்னனை நேரிற் கண்டு
"யாகமொன் றியற்றுதற்குப்
பெரும் பொருள் வேண்டும்" என்றார்!
மன்னனும் தயக்க மின்றிப்
பெரும் பொருள் அளித்த போது
"வேண்டும்போ திவற்றை யானே
பெறும்வரை வைத்துக் கொள்வாய்" –
என்றங்கு விட்டுச் சென்றார்!
பெரும்பகை கொண்ட ரிஷியோ
காட்டினில் உலவும் கொடிய
விலங்கெலாம் மன்னன் ஆளும்
நாடினுட் விரைந்து சென்று
அழித்திட ஏவி நின்றார்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகள் அழிப்பை மன்னன்
பாணத்தால் தடுத்துக் கொண்டான்!
முனிவர்தம் மூக்கின் ஊடே
எழும் காற்றில் உதித்த இரண்டு
கன்னியர் களினை மன்னன்
முன்பாக அழைத்துச் சென்று
மன்னனைப் பார்த்து "மன்னா!
இவர்களை மணப்பாய்" என்றார்!
மன்னனோ ரிஷியைப் பார்த்து
"ஆட்சியை இழப்பே னல்லால்
இவர்களை மணக்கேன்"என்றான்!
"ஆட்சியை எனக்கு இன்றே
அளித்திட வேண்டும்" என்று
மகரிஷி கேட்ட போதே
ஆட்சியை ரிஷிக் களித்தான் -
வாய்மொழி மாறா மன்னன்!
ஆட்சியைப் பெற்ற ரிஷியோ
வஞ்சனை நெஞ்சி னோடே
நாட்டினை விட்டு மன்னன்
நீங்கிடும் போது மகரிஷி -
"எனக்குநீ யாகம் செய்ய
முன்தந்த அப்பொருளும் வேண்டும்" -
எனக் கேட்ட போது மன்னன்
"நாட்டினைத் தந்த போதே
அனைத்தையும் உமக்குத் தந்தேன்"
என்றவன் உரைக்கக் கேட்டு
"ஆட்சியைத் தந்து போது
யாகத்துக் களித்த பொன்னும்



இதிலுண்டு என்று எதுவும்
நீ சொல்ல வில்லை" என்றார்!
இது கேட்ட மன்னன் "அந்தப்
பொருட்களைத் தருவதற்கு
நாட்சில பொறுக்க வேண்டும்" -
என்றதும் முனிவர் "மன்னா!
கேட்டது இயலா தென்றால்
ஒப்புக்கொள் - கேட்க மாட்டேன்" -
என்றதும் ரிஷியின் உள்ளக்
கருத்தினை அறிந்து கொண்டு
"எத்தடைவந்த போதும்
தருவாதய்ச் சொன்ன வற்றை
அளித்திடு வேனே யல்லால்
வாக்கினில் மாற மாட்டேன்!
அளித்திடச் சில தினங்கள்
பொறுத்திட வேண்டும்" என்று
கேட்டுடன் நாட்டை விட்டு
மனைவியும் மகனும் சூழக்
கேட்டினை விலக்க எண்ணிக்
காசியம் பதியைச் சேர்ந்தான்!
முனிவருக் களித்த வாக்கைக்
காத்திடும் எண்ணம் கொண்டு
இனியதம் மனைவி யோடு
மகனையும் விற்றுப் பெற்ற
பெரும் பணம் போதா தென்று
தன்னையும் விற்றுப் பெற்ற
பொருளையும் மகரிஷிக்குக்
கொடுத்துத் தன் வாக்கைக் காத்தான்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனை அடிமை கொண்டோன்
சுடுகாடு காக்கச் செய்தான்!
மன்னனின் மனைவியோடு
மகனையும் விலைக்குப் பெற்ற
அந்தணன் – இரண்டு பேர்க்கும்
ஓய்வில்லா உழைப்புத் தந்தான்!
அவ்விதம் உழைப்பை என்றும்
அறியாதோர் துயரில்நொந்தார்!
அயலில்வாழ் சிறுவர்களுடனே
ஓர்நாள் தனதன்பு
மகனையும் தர்ப்பை கொய்ய
அனுப்பினாள் காட்டுக் கன்னை –
அந்தணன் பணிப்பை ஏற்றே!
காரிருள்சூழும் வேளை
வந்ததால் விடியற்காலை
காட்டினிற் தர்ப்பை கொய்யக்
கூட்டமாய்ச் சென்ற மற்றச்
சிறுவர்கள் மெல்ல மெல்லத்
தம்மில்லம் திரும்பக் கண்ட
சிறுவனின் அன்னை சென்று
"என் மகன் எங்கே" என்று
கேட்ட போதவர்கள் "உங்கள்
மகனையோர் நாகம் தீண்டக்
காட்டினில் இறந்தான்" என்று
அன்னைக்குப் பதில் தந்தார்கள்!
செய்தியால் அதிர்ந்த அன்னை
அந்தணர்க் கதனைச் சொல்லச்
"செய்வதற் கிங்கே வேலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவுண்டு அதனால் நீயும்
விரைவினில் வருவாய்" என்று
விடைதந்தான் விருப்பமின்றி!
விரைந்தவள் காடு சென்று
மகனது உடலைத் தங்கள்
விதிமுறைப் படியே தகனம்
செய்திட எண்ணம் கொண்டு
சுடலைக்குக் கொண்டு வந்து
ஆயத்தம் செய்தாள் அன்னை!
சுடலையைக் காவல் செய்யும்
காவலன் ஓடிவந்தவளைப் பார்த்து
"உடலினைத் தகனம் செய்வோர்
தரும் கூலி நீயும்தா" என்றான்!
உடைமைகள் ஏதும் இல்லாத்
தன்நிலை எடுத்துச் சொல்லி
"அந்தண ரிடத்துச் சென்று
கூலியைப் பெற்று வந்து
தந்தபின் தகனம் செய்வேன்!
அதுவரை பொறுப்பாய்" என்று
உடலினை அங்கே விட்டு
அந்தணரிடத்துக் கூறிச்
சுடுகாட்டுக் கூலிபெற்று
மீண்டிடும் எண்ணத்தோடு
தன்னில்லம் நோக்கிச் சென்றாள்!
உளம் நொந்து செல்லும் போது
திருடரால் கொல்லப் பெற்றவோர்
சிறுவனின் உடலைத் தெருவின்
ஓரத்திற் கண்ட அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனை மடிமேல் வைத்துத்
தன்மகன் நினைவு பொங்கப்
புலம்பிடும் வேளை – அவ்வூர்
மன்னனின் காவ லாளர்கள்
புலம்பிடும் பெண்ணைக் கண்டு
விசாரணை செய்த போது
மடியினிற் கிடக்கும் பிள்ளை
தம்மன்னன் பிள்ளை என்று
நொடியினிற் தெளிந்து – பெண்ணை
அரசன் முன் நிறுத்தித் தாங்கள்
கண்டவை அனைத்தும் சொன்னார்!
"என் மகன் உயிரைக் கொன்ற
பெண்ணுயிர் கொள்(ல்)வீர்" என்று
மன்னவன் ஆணை யிட்டான்!
காவலர் அவளைக் கொல்லக்
கொலைக்களம் இழுத்துச் சென்றார்!
காவலர் இழுத்து வந்த
பெண்ணினைக்கண்ட சுடலைக்
காவலன் "தகனக்கூலி
இன்றித்தன் மகனைத் தனது
காவலை மீறித் தகனம்
செய்திட வந்தவள் இவளே" –
என்றுள்ளம் தெளிந்தபோது
"இவளது உயிரைக் கொல்(ள்)வாய் –
மன்னனின் ஆணை" என்றார்!
காவலன் அவளைப் பார்த்து
"நங்கையே! உனக்கு இந்தக்
கேடு ஏன் வந்த" தென்றான்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையும் தனக்கு நேர்ந்த
கதியினை உரைக்கக் கேட்டுக்
காவலன் பெண்ணை நன்கு
நோக்கியபோது - மண்ணில்
கணவனை யன்றி மாற்றார்
பார்வைக்குத் தோற்றாத் தாலி - அவளின்
கழுத்திலே மிளிரக் கண்டு
"தன்துணை இவளே" என்று
தெ(ரி)ளிந்ததும் தன்னைப் பற்றி
அவளுக்கு விளக்கிச் சொன்னான்!
தெளிவுற்ற இரண்டு பேரும்
இறந்ததம் மகனைப்பார்த்துத்
துயரத்தால் உள்ளம் நொந்து
"வாய்மைக்காய் எமது போரில்
உயர்ந்தஎம் மகனைத் தந்தோம்!
இழப்பதற் கினியொன்றில்லை" -
என்றுள்ளம் தெளிந்து கொண்டு
"மன்னனின் ஆணை ஏற்று
என்பணி செய்வேன்" என்று
கொலை வாளை உயர்த்தும் வேளை
"ஐயனே! அரசன் ஆணை
முடிப்பதுன் கடனே" என்று
கைகளைக் கூப்பி நங்கை
சிரம்தாழ்த்தி நின்றவேளை
"அவசரம் வேண்டாம் சற்றே
பொறுபொறு" என்ற வண்ணம்
அவலத்துக் கெல்லாம் மூல
காரணர் என்று சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமுனி விசுவா மித்திரர்
அவர்கள் முன் வந்து நின்றார்!
"மன்னனே! ஒருபொய் யுரைத்தால்
நாமன்று பெற்றுக் கொண்ட
நாட்டுடன் செல்வம் வாழ்வு
அனைத்தையும் தருவோம்" என்றார்!
"நாட்டினை இழந்தோம் பெற்ற
மகனையும் இழந்தோம் ஆனால்
பொய்யினை உரைக்க மாட்டோம்" -
எனப்பதில் உரைத்த வண்ணம்
செய்பணி நினைவில் மோதக்
கைகளில் ஒளிர்ந்த வாளைப்
பெண்ணவள் கழுத்தை நோக்கி
வேகமாய் வீசி நின்றான்!
பெண்ணது கழுத்தை வெட்ட
வீசிய கொலைவாள் போற்றும்
மாலையாய்ப் பெண் கழுத்தில்
வீழ்ந்திடக் கண்டபோது
மாமுனி நகைத்து நின்றார்!
வானவர் மலர் பொழிந்தார்!
சத்தியம் காத்து இன்னல்
பலகண்ட மன்னனுக்கும்
சத்தியப் பாதை தன்னில்
துணையான சந்திரமதிக்கும்
வாழ்த்துக்கள் பொழிந்தார் வானோர்!
பூமழை பொழிந்தார் வானோர்!!
தூங்கிப்பின் விழிப்பான் போல
வாய்மையைக் காக்கும் போரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்நீத்த மகன் தேவதாஸன்
எழுந்தோடி வந்தபோது
வளம்மிகு கோசல நாடும்
எழில்மிகு கொடியும் வாழ்வும்
பெற்றுள்ளம் மகிழ்ந்தான் மன்னன்!!
மன்னன் மகிழ்ச்சிக் கடலில்
மனைவியும் மகனும் இணைந்தனர்!



கடவுள் மேல் கொண்ட அன்பால்
கடவுளைப் பழித்துப் பேச -
இடர்பல நேர்ந்த போதும்
பழித்திட மறுத்தோன் பற்றிக்
"கீப்ரூ" மொழியில் உள்ள
கதையினைக் கேட்பீர் நன்கு!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊத்ஸ்" என்னும் நாட்டின் கண்ணே
"யோபு" எனும் நாமம் பூண்டோன்
ஊருல கேத்தும் வண்ணம்
உயர்குண நலன்கள் மற்றும்
பண்புகள் நேர்மை தர்மம்
இறையன்பு மிக்கோனாகப்
பெண்மக்கள் மூன்று பேரும்
ஆண் மக்கள் ஏழு பேரும்
மொத்தமாய்ப் பத்துப் பேர்கள் -
கொண்டதோர் குடும்பத்தோடும்
மிகப்பெரும் செல்வத்தோடும்
கண்டவர் மதிக்கும் வண்ணம்
மகிழ்வுடன் வாழ்ந்து வந்தான்!
தேவரின் உலகில் ஓர் நாள்
தேவரின் சபையின் கூட்டம்!
தேவரின் சபையிற் பொல்லாச்
சாத்தானும் இருக்கக் கண்டு
இறைமகன் அவனைப் பார்த்து
"எங்கிருந்து இங்கே வந்தாய்?
உரைத்திடு" என்று கேட்டார்!
"நிலவுலகத்தை விட்டு இன்று
இங்குற்றேன் ஐயா" என்றான்!
"இறைபக்தி மிக்கயோபு
அங்குள்ளான் - கண்டதுண்டோ?" -
என்றிறை அவனைக் கேட்டார்!
"செல்வங்கள் நலங்கள் யாவும்
அவனுக்குக் கொடுத்து விட்டீர்!
வெல்லரும் அன்பை உம்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளான் யோபு – ஆனால்
அளித்துள்ள செல்வம் எல்லாம்
பறித்திடின் அவனும் உம்மைப்
பழித்திடத் தயங்கான்" என்று
சினம்மிக உரைத்தான் சாத்தான்!
கடவுள்தன் பக்தன் அன்பை
உலகிற்குக் காட்ட எண்ணிக்
கடவுள்தன் பக்தன் அன்பைச்
சோதிக்கச் சாத்தானுக்குக்
கடவுள் ஓர் வாய்ப்பைத் தந்தார்!
யோபுவின் மக்கள் சுற்றம்
செல்வங்கள் அனைத்தும் விரைவில்
அழிந்திடச் செய்தான் சாத்தான்!
செல்வங்கள் அழியக் கண்டும்
யோபுவோ கலக்க மின்றி
"இறைவனே அனைத்தும் தந்தான்!
இறைவனே எடுத்தும் கொண்டான்!
இறைவனைப் பழித்தல் பாவம்" –
என்றவன் வாழ்த்தி நின்றான்!
சபையினை மீண்டும் கூட்டிக்
கலங்கிடா யோபு பற்றிச்
சபையிலே இறைவன் போற்ற
மனம்பொறுக் காதசாத்தான் –
"யோபுவின் நலத்தைப் போக்க
நோய்களின் துயரால் யோபு
உம்மையே பழிப்பான்" என்றான்!
யோபுவின் உயிருக் கெந்தக்
கெடுதலும் இன்றிக் கொடிய



இறையன்பன் யோபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயெல்லாம் அவனின் உடலை
வருத்துக" என்றார் கடவுள்!
தலைமுதல் இருகால்வரையும்
கொடியதாம் பருக்கள் தந்தும்
வருத்தினான் கொடிய சாத்தான்!
ஓட்டினை எடுத்துத் தனது
பருக்களைச் சுரண்டிக் கொண்டும்
வாட்டமே இன்றி யோபு
சாம்பல்மேல் அமர்ந்து கொண்டான்!
யோபுவின் மனைவி மற்றும்
இருநண்பர் "எரிபாஸ்"- "பில்தாத்" -
யோபுவைத் தினமும் அணுகிக்
கடவுளைப் பழிக்கும் வண்ணம்
கருத்துடன் தூண்டி நின்றும் - யோபு
கடவுளைப் பழிக்க வில்லை!
இப்படி ஏழு நாடகள்
கடவுளைப் பழிக்கும் வண்ணம்
அறிவுரை சொல்லித் தோற்றார்!
கடவுளின் மீது யோபு
வாழ்த்துக்கள் பாடக் கண்டு
சினம் கொண்ட மனைவி - நண்பர்
தனிமையில் விட்டுச் சென்றார்!
மனத்தினிற் கவலை இன்றித்
தனிமையில் இருந்தான் யோபு!
யோபுவின் உறுதி மிக்க
அன்பினை கண்ட கடவுள்
யோபுவின் முன்னே தோன்றி
யோபுவை வாழ்த்தி நின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு முன்னிலும் பலமடங்கு
செல்வங்கள் பெருகும் வண்ணம் -
அவனுக்கு உடல் நலங்கள்
சிறப்புற்றுப் பெருகும் வண்ணம் -
இறந்திட்ட அவனின் மக்கள்
உயிர்பெற்று வாழும் வண்ணம் -
சிறப்பெல்லாம் பொலியும் வண்ணம் -
இறையருள் பொழிந்து நின்றார்!!
இறையன்பன் யோபு - முன்போல்
மனைவியும் மக்களோடும் - உலகில்
மகிழ்வுடன் வாழ்வு பெற்றான்!
இறைவனை வாழ்த்தி நின்றான்!!

வாய்மையைக் காக்க எண்ணி
வாழ்வெலா மிழந்து பின்னர்
வாய்மையால் வாழ்வு பெற்றான்
அரிச்சந்திர மன்னன் - கிழக்கில்!
இறைவனை வாழ்த்த லல்லால்
பழித்திடே னென்ற யோபு
குறையெலாம் விலகப் பெற்று - மீண்டும்
நலம் பெற்று வாழ்ந்தான் - மேற்கில்!!

## கால அட்டவணை

யோபு ஆகமம் - கி.மு 05 ஆம் நூற்றாண்டு

( நமது ஈழநாடு - 26.05.2003 , 02.06.2003 , 09.06.2003 , 16.06.2003 , 23.06.2003 , 30.06.2003 , 07.07.2003 , 14.07.2003 , 21.07.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 05 மேற்கும்

## மூன்றாம் நெடுஞ்செழியன்
## செல்வி. புளோரன்ஸ் நைற்றிங்கேல்

நோயாளர்களுக்குத் தாயாக நின்று
சேவைகள் செய்யும் "தாதியர் சேவையைத்"
தரணிக்கு முதன்முதல் அறிமுகம் செய்தான்
தமிழ்மன்னன் ஒருவன் கிழக்கினில் – முன்பு!
தாதியர் சேவையை வளர்க்கத் தொடங்கினார்
அரிவையர் ஒருவர் மேற்கினில் – பின்பு!!

அடுபோர்ச் செழியன் – இயல்தேர்ச் செழியன்
கோதை மார்பன் – கொடித்தேர்ச் செழியன்
கொற்றச்செழியன் – மறப்போர்ச்செழியன்
பசும்பூண் பாண்டியன் எனப்பல பெயர்பெற்ற
மூன்றாம் செழியன் – சித்திர மாடத்துத்
துஞ்சிய நன்மாறனின் இரண்டாம் புதல்வன்!
முடிசூடிக் கொண்டு சிலநாட்கள் மட்டுமே
அரசு இயற்றிய நன்மாறன் இறந்ததும்
இரண்டாம் மகனாம் மூன்றாம் நெடுஞ்செழியன்
மணிமுடி சூடியவன் – வயதினில் மிகவும்
இளையவனாக இவன் இருப்பதைக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ மன்னனாம் பெருநற்கிள்ளி
சேர மன்னனாம் இரும்பொறை என்னும்
இருமன்னர் களுடனே வேளிர் ஐவராம்
எவ்வி – திதியன் – அதியமான்எழினி
எருமையூரன் – இருங்கோ வேண்மான் என்பவருடனே
இணைந்து கொண்டு செழியன் மீதினில்
படையெடுத் தவர்களின் கூட்டிணைவுப்படை
மதுரையை நோக்கி விரைவதை அறிந்து
பாண்டியன் செழியன் வஞ்சினம் கூறித்
தன்படை யுடனே பகைவரை எதிர்த்தான்!
கூடற்பறந்தலையில் நடந்த கடும் போரில்
சேரரும் சோழரும் பாண்டிய மன்னனை
எதிர்கொள்ள மாட்டாது சோழநாட்டினுட்
புகுந்து கொள்ளவே – பாண்டியன் அவர்களை
விரட்டிச் சென்று தஞ்சை மாவட்டத்தில்
திருவாரூருக்கு வடக்குப் புறமாக
எட்டுக்கல் தொலைவில் அமைந்திருக் கின்ற
"தலையாலங்கானம்" என்னுமோர் இடத்தில்
மோதிக் கொண்டதால் மூண்டகடும் போரில்
ஆயிரம் ஆயிரம் வீரர்கள் மாண்டனர்!
சேரமன்னனும் சோழமன்னனும் தமதுயிர் துறந்தனர்!
பாண்டியன் செழியன் வாகை சூடினன்!
"தலையாலங் கானத்தில்" வாகை சூடியதால்
"தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன்" எனும்
பெயர்கொண்டஇவ் வெற்றியைப் போற்றிப் பாடினர் –
புலவர் கல்லாடனாரும் மாங்குடி மருதனாரும்!
போர்க் களங்களில் போர் மறவர்கள்
சோர்வுற்ற வேளையில் அவர்களுக் கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரஉரை களினால் உற்சாக மூட்டியும்
வீரமிகு சொற்களினால் புரிந்துணர் வூட்டியும்
போரை நடத்தினான் மூன்றாம் செழியன்!
போர்க்களங்களிலே வெற்றித் திருமகள்
முத்தமிட் டளித்திட்ட முத்திரை களாகிய
விழுப்புண்கள் பெற்ற போர் மறவர்களைத் -
தன்பெரு வெற்றிக்கு ஊன்றுகோலாய் நின்ற
படை வீரர்கள் ஓய்வு கொண்டிருக்கும்
பாசறை களிலேயே மன்னனின் பொழுதெல்லாம்!!
அவர்களோ டன்புடன் கலந்துரை யாடினான்!!
அவர்களின் நலன்களை விருப்புடன் கேட்டான்!
வீரரும் தாம்கண்ட செருக்களங் களிலே
விளைத்திட்ட அரும்பெரும் சாதனைச் செயல்களைத்
தம்மையும் மறந்து தம்மன்ன னிடத்தினில்
விளக்கிடும் வேளையில் தம்துயர் மறந்தனர்!
வீரர்களிடையே விழுப்புண் களுக்கிட்ட
மருந்து களுடனே மன்னனும் சொரிந்த
அன்பு விசாரணைகளும் ஆறுதல் வார்த்தைகளும்
அவர்களின் புண்களை விரைந்து குணமாக்கின!
இதுவேதன் தினசரிப் பணியெனக் கொண்டான்!!
மன்னன் செழியனின் (ஆ)தேறுதல் வார்த்தையால்
வீரரின் வாழ்க்கை மலர்ந்தது மீண்டும்!
வீரருக் கெல்லாம் பாராட் டுரைகள்
வழங்கிப் போற்றினான் மூன்றாம் செழியன்!
வீரர்தம் மேனியில் கொண்ட புண்களால்
விளைந்த துயர்களை மறந்துளம் மகிழ்ந்தனர்!
வாழ்க்கையின் மேலவர் நம்பிக்கை கொண்டனர்!
போர்களில் மீண்டும் மோ(வே)கம் கொண்டனர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களம் மீளவும் போகவும் துடித்தனர்!
தன்ஊண் உறக்கம் என்பன மறந்தான்!
தன்உடற் சோர்வு – ஓய்வினை மறந்தான்!
அந்த நேரங்களைப் – போர்க்களங்களிலே
அச்சம் இன்றியே வெஞ்சமர் புரிந்ததன்
ஒவ்வொரு வீரர்க்கும் ஆறுதல் தேறுதலும்
பாராட்டும் போற்றலும் வாழ்த்தும் மொ(பொ)ழிவதில்
மூன்றாம் செழியன் மனமகிழ் வுற்றான்!
மூன்றாம் செழியன் உளம் நிறைவுற்றான்
வீரரின் மகிழ்ச்சியில் மன்னனும் மகிழ்ந்தான்!
வீரரின் மத்தியில் மதிப்புடன் அன்பும்
மன்னன் மீதினில் நாள்தோறும் வளர்ந்தது!
தாதியாய் நின்றுதன் வீரரைப் பேணிய –
தாயாக நின்றுதன் வீரரைப் போற்றிய –
மூன்றாம் செழியன் கல்வியில் வல்லவன்!
கற்றோரைப் போற்றிப் புரப்பதில் வல்லவன்!
பத்துப்பாட்டில் இருபெரும் நூல்களாம்
புலவர் நக்கீரரின் "நெடுநல் வாடை" யும்
மாங்குடி மருதனாரின் "மதுரைக் காஞ்சி" யும்
மாமன்னன் செழியனின் பெரும்புகழ் புகல்வன!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியினில்
ரஷ்யாவும் துருக்கியும் பெரும்பகை கொண்டன!
பிரித்தானியா பிரான்ஸ் எனும் நாடுகளின்
பெரும் ஆதரவுடனே ரஷ்யா மேலே
போரொன்றைத் தொடுத்தது துருக்கிநாடு!
"கிரிமியா போர்" என்பர் இந்தப் போரினை!
களத்தினில் போர்வீரர் பலநூறாய் மாண்டனர்!
காயமடைந்த போர்வீரர் – எவராலும்
தேடுவாரின்றிக் களத்தினிற் கிடந்தனர்!
சிகிச்சை அளித்திட வேண்டு மளவிற்கு
வைத்திய வசதிகள் இருக்கவுமில்லை!
வீரர்களுக்கு நிலா வெளிச்சத்தினிலும்
வைத்தியர் சிகிச்சை அளித்து வந்தனர்!
இங்கிலாந்தில் வசித்த செல்வி. நைற்றிங்கேல்
இதனையறிந்து இதயம் நொந்தார்!
அவலத்தைப் போக்க அன்றே துணிந்தார்!
துணிவுடன் திறமையும் தியாகமும் மிகுந்த
அரிவையர் அணியொன்றைச் செல்வி.நைற்றிங்கேல்
அமைத்த வேளையில் களநிலை மிகச்சீர்கெடவே
செல்வியின் தலைமையில் முப்பத்தொன்பது பேர்
கொண்ட குழுவொன்று – பேரலை புயலொன்று
இன்னல் மிகுந்த கடற்பய ணத்தின்பின்
போரக்கள மடைந்து பேரதிர்வடைந்தது!
அழுக்குகள் நிறைந்த அசுத்தங்கள் மலிந்த
கட்டட மொன்றே வைத்திய சாலையாகும்!
காயமடைந்தோர் அழுக்கு நிலத்தினில்!
காயமடைந்த வீரரின் உடைகளோ
இரத்தக் கறையுடனும் துர்நாற் றத்துடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுடையின்றியும் கவனிப்பா ரின்றியும்
காயமடைந்தோர் கிடந்தங்கு வருந்தினர்!
களத்துள்ள வைத்தியர் குழுவினர் – முதலில்
செல்வியின் அணியின் வருகையை எதிர்த்தனர்!
செல்வியின் அணியும் பணியின்றி இருந்தனர்!
துன்ப நிலையையும் துயர ஓலங்களையும்
சமாளிக்க இயலாத வைத்தியர்க் குழுவினர்
செல்வியின் உதவியை நாடினர் இறுதியில்!
தேடுவாரின்றிக் கிடந்தபோர் வீரரைச்
சுத்தம் செய்தும் உடைகள் மாற்றியும்
மெத்தையிற் கிடத்தியும் வைத்தியசாலையில்
துர்நாற்றம் வீசிய சூழலையும் மாற்றினர்!
தூய்மையை வளர்த்து அழகும் செய்தனர்!
போர்வீரர் களுக்குச் சுத்தமும் சுவையும்
போஷாக்கும் நிறைந்த உணவுகள் வழங்கினர்!
செல்வியின் சேவையின் மேன்மையை அறிந்து
மேன்மை தங்கிய விக்டோறியா ராணியார்
செல்வியை வாழ்த்தியும் சேவையைப் போற்றியும்
மடலொன்றை வரைந்து செல்விக் கனுப்பினார்!
ஒவ்வொரு நாளும் இரவுப் படுக்கைக்குத்
தாம்செல்லும் முன்னர் வைத்திய சாலையின்
ஒவ்வோர் அறைக்கும் கையிலோர் விளக்குடன்
சென்றங்குள்ள ஒவ்வொரு நோயாளியையும்
கவனமாய்ப் பார்ப்பார்! குறைகளைக் கேட்பார்!
காய்ச்சலின் வேகத்தில் முனகும் நோயாளிக்கு
மருந்திட்டுத் தடவி ஆறுதல் கூறுவார்!
மனத்துளைவோடு புரண்டு கொண்டிருப்பவர்க்கு
இதமான வார்த்தைகளால் தேறுதல் கூறுவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மிகுந்த அவரின் பேச்சினாலும்
ஆவலாய்த் தேடுவர் நோயாளர் – செல்வியை!
நோயாளர்களுக்கு ஓய்வில்லாச் சேவையால்
நோயின் பிடிக்குள் சிக்கினார் செல்வி!
அவரின் நோயின் கடுமையைக் கண்டோர்
தாயகம் திரும்பிட அறிவுரை கூறினர்!
தாதிப்பணியினை உயிரெனக் கொண்டதால்
தம்பணி தொடர்ந்த செல்வி நைற்றிங்கேல்
தாயகம் திரும்பினார் – யுத்தம் முடிந்ததும்!
தாதிப் பணியில் அவர்பெற் றிருந்த
அறிவு அனுபவம் ஆற்றலை அறிந்துகொண்ட
பிரித்தானிய அரசு தலைமை ஆலோசகராகப்
பதவி வழங்கி அந்நாட்டில் உள்ள
வைத்திய சாலைகளில் சீர்திருத் தங்களினை
விரும்பிச் செய்தது! விரைந்து செய்தது!!
புனித தோமையார் வைத்திய சாலையில்
"நோயுற்ற வர்களைப் பராமரித்தல்" –
"நோய்கள் வாராது தடுத்தல் காத்தல்"
"உடல் நலத்தைப் பேணுதல்" என்பன போன்ற
கொள்கை அடிப்படையில் தாதியர் களுக்கு
முதன் முதலாகப் பயிற்சிதரும் நிலையத்தைத்
தொடக்கி வைத்த செல்வி அவர்களை
"தாதிச் சேவையின் அன்னை" என்றும்
"விளக்கேந்திய பெருமாட்டி" என்றும்
இன்றும் என்றும் உலகம் புகழு(லு)தே!
ஆங்கிலக் கவிஞராம் "லோங்பெலோ" என்பவர்
"சாந்த பிலோமினா" எனும்தம் கவிதையால்
செல்வியைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் தந்தை வில்லியம் நைற்றிங்கேல்!
இத்தாலியில் உள்ள "புளோரன்ஸ் நகரில்"
இவர் பிறந்ததனால் "புளோரன்ஸ் நைற்றிங்கேல்"
எனப்பெயரிட்ட எம்செல்வி அவர்கள்
தொண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தபின் மறைந்தார்!!

போர்களில் விழுப்புண்கள் பெற்றதன் வீரரைப்
போற்றிக் காத்துச் சுகம் செய்து – கிழக்கிலே
தாதிச் சேவையைத் தொடக்கி வைத்தான் –
தலையாலங் கானத்துச் செருவென்ற செழியான்!!
"கிரிமியப்" போர்க் களத்தினிற் காயங்கள்
அடைந்த வீரரைப் போற்றிய வேளையில்
தாதிச் சேவையை வளர்க்கத் தொடங்கினார் –
"தாதியர் தாயாம்" நைற்றிங்கேல் – மேற்கிலே!!
மூன்றாம் செழியன் தாதியர் தந்தையாம்!
செல்வி நைற்றிங்கேல் தாதியர் தாயாம்!!
தாதியர்க் கெந்நாளும் நோயாளர் சேயாவர்!
நோயாளருக் கெந்நாளும் தாதியர் தாயாவர்!!

## கால அட்டவணை

| | |
|---|---|
| மூன்றாம் நெடுஞ் செழியன் | - கி.பி 120 - 144 |
| (தலையாலங்கானத்துக் செருவென்ற செழியன்) | |
| செல்வி. புளோரன்ஸ் நைற்றிங்கேல் | - 12.05.1820 - 13.08.1910 |
| கிரிமியப் போர் | - 1854 - 1856 |

( நமது ஈழநாடு - 04.08.2003 - 11.08.2003, 18.08.2003 - 25.08.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 06 மேற்கும்

## ஔவையார்
## சோக்கிரட்டீஸ்

அதிசயக் கனியொன்றை
அளித்தோர் அரசு
அறிஞரை வளர்த்தது
அன்று – கிழக்கிலே!!
கொடிய நஞ்சினைக்
கொடுத்தோர் அரசு
அறிஞரை வதைத்தது
அன்று – மேற்கிலே!!

சோழ நாட்டுள்ள
உறையூரினிலே
ஆதி அன்னையும்
பகவன் தந்தையும்
பெண்மக வொன்றினைப்
பெற்றெடு த்தனரே!
ஏழ்மையினாலோ – இன்றேல்
என்ன காரணத்தாலோ
பெற்றவர் தம் மகவினைக்
தாம்போகும் வழியிலே
கைவிட் டேகினர்!
திருமண வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகவொன்று இன்றி
மனத்துயர் வுற்றதோர்
பாணன் ஒருவன்
தான்செல்லும் வழியில்
தனிமையில் கிடந்த – பெண்
மகவொன்றைக் கண்டு
உள்ளம் மகிழ்ந்து –
மகவினை எடுத்துத்தன்
இல்லத்துக் கெடுத்துச் சென்றுதன்
மனைவிகைக் கொடுத்தவன்
வளர்த்தான் அன்புடன்!
வளர்பிறை போல
வளர்ந்தது குழந்தை!
தன்மகள் நெஞ்சினில்
உயர் பண்புகளிலே
இறையன்பின் வளர்ச்சியும்
கலைகளின் தேர்ச்சியும்
அழகின் செழிப்பும்
கண்ணுற்ற "பாணன்"
தன்னன்பு மகளை
மணமக ளாகப்
பார்த்துளம் மகிழ்ந்திட
மனத்திடை விரும்பினான்!
தந்தையின் கருத்தினை
அறிந்தமகள் வருந்தினாள்!
இல்வாழ்வை வெறுத்தவள்
இறைய ருளாலே
முதியதோர் பெண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவத்தைப் பெற்றாள்!
"ஔவை" யாகிவள்
தமிழ்ப்பணி செய்திட
(வே)தாகம் கொண்டவராய்
நடந்தார் ஊர்தோறும்!
மக்களோ டிணைந்து
மக்கள் நல்வாழ்வுக்காய்
நல்லறி வூட்டினார்!
நல்வழி காட்டினார்!
பறம்பு நாட்டினை
அரசாண்ட பாரி
நாடி வருவோர்க்கும்
வாடி வருவோர்க்கும்
மாரிபோல் வரையாது
வாரி வழங்கியவன் -
முல்லைக் கொடிக்குத்
தன்தேர் கொடுத்தவன் -
காசினி போற்றிடும்
கடையெழு வள்ளல்களில்
பறம்பு நாட்டரசன்
பாரியும் ஒருவனாம்!
அழுக்காறு அவாவினால்
பறம்பு நாட்டினை
முற்றுகை யிட்டனர் -
தமிழ் மன்னர் மூவரும்!
முடிவின்றி நீடித்த
முற்றுகை இறுதியில்
மன்னன் பாரியின்



அதியமான் ஔவைக்கு
அதிசய நெல்லிக்கனி
தருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுயிர் குடித்தது!
வள்ளலின் உய(யி)ர்நண்பன்
புலவராம் கபிலராவர்!
ஔவையின் முயற்சியால் –
பாரியின் புதல்வியர்
அங்கவை – சங்கவை –
மணவாழ்வு பெற்றனர்!
பாரி வள்ளலின்
பேரன்பைப் பெற்ற
ஔவையின் முயற்சியால்
திருக்கோவலூரை ஆண்ட
மன்னன் தெய்வீகனுக்கு
அங்கவை – சங்கவை –
மணமாலை சூட்டினர்!
தமிழ் மன்னர் மூவரும்
ஔவையின் முயற்சியால்
மணவிழாக் காணவந்துதம்
முன்பகை மறந்து
மணமக்கள் நலம்பெற
வாழ்த்துக்கள் பொ(மொ)ழிந்தனர்!
அனைவரும் மகிழ்ந்தனர்!!
அறிந்துளம் நெகிழ்ந்தனர்!
“உலகினில் என்னைப்போல்
கற்றவர் யாருளர்?
உலகினில் என்னைப்போல்
அறிவாளி யாருளர்?” என
ஔவையின் உள்ளத்தில்
முளைவிட்ட செருக்கினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைந்தாட் கொண்டிடத்
திருவுள்ளம் கொண்டு
இடைக்குலச் சிறுவனாய்
ஔவை வருகின்ற
வழியினில் நிற்குமோர்
நாவலில் அமர்ந்திருந்த
முருகப் பெருமானிடம்
'சுடுகனி' பெற்ற ஔவைதன்
அகத்தினில் முளைவிட்ட
அகந்தையைக் களைந்தார்!
அறிவினில் ஒளிர்ந்தார்!
சேர நன்னாட் டினில்
தகடூர் நாட்டினை
மன்னன் அதியமான்
நல்லாட்சி செய்தான்!!
முனிவ ரொருவரால்
அருளிடப் பெற்ற -
அதனை உண்பவரை
பன்னெடுங்காலம்
அவனியில் வாழ்விக்கும் -
அதிசய நெல்லிக்கனியினை -
ஔவை மீதுற்ற
அளப்பரும் அன்பினால்
அந்நெல்லிக் கனியினை
உண்ணத் தக்கவர்
ஔவையென் றுணர்ந்ததால் -
ஔவைக்கு அக்கனியினை
அளித்தான் அதியமான்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனியுண்ட பின்னரே
கனியின் மகிமையை
அறிந்த ஔவையார் –
தன்மேல் அதியமான்
கொண்டுள்ள அன்பின்
ஆழத்தை உணர்ந்து –
அறிஞரை நெடுங்காலம்
வாழ்விக்கத் துடிக்கும்
ஆர்வத்தை உணர்ந்து –
உள்ளம் மகிழ்ந்து –
உள்ளம் நெகிழ்ந்து
போற்றிப் பாடினார்!
வாழ்த்திப் பாடினார்!!
கனியினைக் கொடுத்த
கனியினை உண்ட
அதியமானும் ஔவையும்
இன்றும் வாழ்கின்றனர்!
என்றும் வாழ்வார்!!
குலோத்துங்க மன்னனின்
திருமண வேளையில்
அரசரும் அறிஞரும்
புலவரும் புரவலரும்
பொலிந்த அவையினில்
'வரப்புயர நீருயரும்" –
எனும் உயர் பாடலால்
அரசனை வாழ்த்தவே –
ஔவையின் பாடலின்
அதியுயர் சிறப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்த அவையினர்
அப்பாவைப் பாடிய
ஔவையின் அறிவினை
மகிழ்வுடன் வாழ்த்தினர்!
ஔவையின் திறமையை
அனைவரும் வாழ்த்தினர்!
'இட்டார் பெரியோர்
இடாதார் சிறியோர்' –
என்றிரு சாதியே
இகத்தினில் உண்டென்று
தாமுரைத்த நீதியைத்
தரணியில் நிறுவினார் –
பொருத்த மாயொரு
நிகழ்வொன்றில் ஔவையார்!
பாண்டிய நாட்டிலோர்
ஊர்வழி நடந்த
மூதாட்டி ஔவைக்குப்
பசி வருத்தியது!
வருத்திடும் பசியுடன்
வழிநடந்த ஔவை
இடைக்குலச் சிறுவனாம்
"அசதி" என்பவனைக் கண்டார்!
தன்பசி போக்கவே அசதி
கொணர்ந்திட்ட கூழினை
ஔவையின் பசிகண்டு
உளம் நொந்த அசதி
அவருண்ணக் கொடுத்தான்!
அன்புடன் அசதி தந்த



புலவர் கபிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழுண்டு பசிதீர்த்த
ஔவைப் பாட்டி
'கோவை' பாடியே
அசதியை வாழ்த்தினார்!
அவனியெங்கும் பரவியது –
அசதியின் புகழும்
அசதியின் கொடையும்!
இதனால் ஔவைக்குக்
"கூழுக்குப் பாடி" எனும்
பட்டப் பெயரும்
உலகினில் உண்டானது!
இன்றும் உயிர் வாழுதே!
நெல்லிக் கனியின்
மகிமை யினாலே
பன்னெடுங் காலங்கள்
பாரினில் வாழ்ந்து
மூதுரை – நல்வழி
ஆத்திசூடி யுடன்
கொன்றைவேந்தன் உட்பட
இன்னும் பற்பல
நீதி நூல்களைத்
தமிழ் மொழிக்கும்
தமிழ் இனத்துக்கும்
தரணிக்கும் தந்த
ஔவை மூதாட்டி
கணநாத னுடைய
கருணை யினாலே
கைலையங் கிரியினைக்



ஔவைக்கு ஆட்டுப்பால் கொடுக்கும் அசதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணத்தி லடைந்தவர்
		கைலாச நாதனின்
கழலிடை சேர்ந்தார்!
		கனியுண்ட திறத்தினால்
கனிதந்த வரத்தினால்
		தமிழுடன் கலந்தவர்
தமிழரில் கலந்தவர்
		தமிழாக இன்றும் வாழ்கிறார்!
தமிழாக என்றும் வாழ்வார்!!
		தமிழுள்ள காலம்வரை
தமிழுடன் தமிழாக
		வாழ்வார் ஔவையார்!

போற்றிடும் வேதாந்தத்தைச்
		சுவர்க்கத்திலிருந்து இந்த
அவனிக்குத் தந்தவர்' என்று
		ஐரோப்பியரால் இன்றும்
போற்றுதற்குரிய ஒரு பெரும்
		கிரேக்க ஞானி –
ஏதென்ஸ் நகரினில்
		தோற்றம் பெற்றவர்!
தம்மிள வயதினில்
		போர்க்களம் கண்டவர்!
அரசினிலும் அவரோர்
		உறுப்பினர்!
பின்னவர் அனைத்தையும்
		உதறித் தள்ளியவர்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் தெளிந்ததால்
இறைபக்தி மிகுந்தது!
இறையருள் பெற்றவர்
ஆத்மா பற்றியும் -
இறந்தபின் ஆத்மா
பெறும் நிலைபற்றியும் -
இதுதொடர் பாகப்பல
அரும்பெரும் கருத்துக்கள்
ஆய்வின்பின் விளக்கினார்!
இவர்கூறும் அனைத்தையும்
இவரின் உயர் சீடனாம்
பிளேட்டோ கருத்துடன்
பதித்துக் கொண்டவர் பின்பு
எழுத்தினிற் பதித்தார்!
இந்தக் கிரேக்க
ஞானியின் இல்லாள்
இவரை எந்நாளும்
சோம்பல் மிக்கதோர்
கணவ ராகவே
கருதி வந்தாள்!
வழமைபோல் ஓர்நாள்
ஞானியின் மேலே
வசைமொழி தொடுத்தாள்!
ஞானியோ அதுபற்றி
அலட்டிக் கொள்ளாது
அசட்டையா யிருந்தார்!
இவரது மௌனம்
அவளின் சினத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித் திடவே அவளோர்
பாத்திரம் நிறைந்த
அழுக்கு நீரினை
எடுத்து வந்தவள்
ஞானிமேல் கொட்டினாள்!
ஆயினும் - அவரோ
அதற்கும் எதுவிதச்
செயற்பாடு மின்றியே
மௌனமா யிருந்தார்!
இந்நிகழ்வினை யெல்லாம்
கண்ணுற்றவோர் நண்பன்
"இவையெல்லாம் என்னவோ?" என
இவரிடம் வினாவினார்!
"இதுவரை இங்கே
இடிஇடித்திப் போது
மழை பொழிந்துள்ளது" -
எனவிடை தந்தார் -
மிக அமைதியாக -
அப்பெரும் ஞானி!
அரசின் குறைகளை
அரசுக்கு அஞ்சாது
அவ்வப்போதே அவர்
சுட்டிக்காட்டி அவைகளை
மக்களுக் குணர்த்தினார்!
மக்களோடு மக்களாக
ஏற்றத்தாழ்வு எதுவும்நோக்காது
பேதம்எதுவும் நோக்காது
உறவு கொண்டிருந்தார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடன் நெருக்கமாக!
மக்களின் மனநிலை
அறிந்து கொண்டவர்
குறைகளைக் கண்டதும்
அறிவுரை கூறிக்
குறைகளைக் களைந்தார்!
"எச்செயல் செய்தாலும்
செய்திடுமச் செயல்
சரியா? தவறா? எனச்
சிந்தித்தல் வேண்டும்!
செய்யும் செயலால்
வாழ்வு கிடைக்குமா?
தாழ்வுதான் வருமா? எனச்
சிந்திக்க வேண்டாம்!" –
என்றறிவு ரையினைத்
தம்மைச் சூழவரும்
மக்களுக் களித்தார்!
மக்களும் விழித்தனர்!
ஞானம் பொலி(ழி)ந்த
ஞானப் பேச்சால்
ஞானியின் பேச்சால்
ஈர்க்கப் பெற்ற
கிரேக்க இளைஞர்கள்
ஞானியின் பின்னால்
திரண்டனர் கடலென!
ஆள்வோர் இதுகண்டு
அச்சமும் பொறாமையும்
சீற்றமும் கொண்டனர்!



அறிஞர் மேல் அழுக்கு நீர் ஊற்றும்
மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசினை எதிர்த்தும் –
இளைஞர் மனங்களில்
துர்மதி புகட்டியும் –
அரசுக்கு எதிராக
இளைஞரைத் தூண்டியும் –
தெய்வ வழிபாட்டிலும்
தவறுகள் விளைத்தும் –
செயற்படுகின்றீர்" என
ஞானிமேல் ஆள்வோர்
குற்றம் சுமத்தினர்!!
நீதி மன்றின்முன்
நிறுத்தினர் ஞானியை!!
சுமத்தப் பட்டுள்ள
குற்றங்கள் பற்றி
விளக்கம் தரும்படி
ஞானியைப் பணித்தது –
ஏதென்ஸ் நீதிமன்றம்!
முதலிரு குற்றச்சாட்டிலும்
நிறைந்துள்ள நியாயத்தை
விளக்கிக் கூறியவர்
"இறை வழிபாட்டில் நான்
தவறிய தில்லை!
அதிலெந்தத் தவறேதும் –
விளைத்தது மில்லை" –
என்றார் அந்த ஞானி –
உள்ளத் தெளிவுடன்!
உண்மைத் தொனியுடன்!!
"நீதியாய் நடக்கின்ற



மாணவர்கள் பார்த்திருக்க
நஞ்சருந்தத் தயாராகும்
பேரறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானேன் எவர்க்கும்
பயப்பட வேண்டும்?
பணிந்திட வேண்டும்?" -
என்றெண்ணி ஞானி
நீதிமன்றினைச் சிறிதும்
கருத்திற் கொள்ளாது
அலட்சிய மாயவர்
நின்றார் மன்றினில்!
"சிறிதள வேனும் தம்மை
மதித்திடவில்லை" - யென்று
ஞானியின் மீதில்
கோபம் கொண்ட
நீதிமன்றத் தவர்கள்
மதித்திடா ஞானியின்
(இ)மன்னுயிர் பறித்திடும்
மரண தண்டனையை
ஞானிக்கு விதித்தனர்!
ஞானத்தை மிதித்தனர்!
அதுகேட்ட பின்னரும்
அவர் கலங்கவில்லை!
அவரின் நண்பரோ
"தண்டனைக் குட்படாது
தப்பிச் சென்றிட
ஒருப்படும் வண்ணம்" -
இரந்தனர் இவரிடம்!
இரந்தனர் பலமுறை!!
இரந்தனர் பலகூறி!
இரந்தனர் பலனின்றி!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானியோ அதற்கு
"இறப்பேன் விருப்புடன்!
இரக்கமாட்டேன்" என
உறுதியா யுரைத்தார்!
இறுதியா யுரைத்தார்!!
தண்டனை வழங்கிடும்
"கரிநாள்"வந்தது!
தண்டனை ஏற்றிடத்
தயாரானார் ஞானி!!
தண்டனை யாளர்தாம்
தயாராகக் கொணர்ந்த
நொடியினில் உயிர் கொல்(ள்)ளும் –
கொடிய நஞ்சாம்
"ஹெம்லொக்" தந்தனர்!
நஞ்சு சிறைந்த
கிண்ணத்தைப் பெற்றவர் –
சூழ்ந்து நின்று
கலங்கிய நண்பர்க்குக்
கலக்கம் தீர்த்திட
அறிவுரை மொழிந்தவர் –
கலக்கம் – தயக்கம்
கடுகளவு மின்றியவர்
விருப்புடன் நஞ்சினைப்
பருகினார் முற்றிலும்!
மெல்ல மெல்ல அவர்
இறப்பினை அணைத்தார்!
கிரேக்க ஞானியின்
சீடராம் பிளேட்டோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்குரு இடைவிட்ட
அரும்பெரும் பணியினை
விருப்புடன் தொடர்ந்தார்!
அன்றிவர் படைத்த
அறிவு நூல்களை
அடிப்படையாக
அமைத்துக் கொண்டே
இன்றைய வித்தைகள்
வளர்ந்து கொண்டுள!
வளர்த்துக் கொண்டுள!!
இன்றைய வித்தைக்கு
அன்றுயிர் வி(தை)த்திட்ட
ஞானிதான் யாரோ?
அறிஞர்க்கும் மேலான
அறிஞர்தாம் யாரோ?
அந்த அறிஞர்தான்
SOPHRONISCUS எனும்
பெயர் பூண்டிருந்த
கற்தச்சன் மகனாக –
PHAENARETE எனும்
அன்னையின் மகனாக –
ஏதென்ஸில் தோன்றிய –
"ஞானி சோக்கிரட்டீஸ் தான்!"
ஞானியர் போற்றிடும்
ஞானியர் அவரே!
அறிஞர்கள் ஏற்றிடும்
அறிஞரும் அவரே!!
அறிவொளி பரப்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞரை அழித்தனர்!
ஆனால் அகிலத்தில்
அவரொளி பரப்பிய
அறிவொளி அணையுமா?
அணைத்திட முடியுமா?
அணைத்திட அணையுமா?

பைந்தமிழ் உலகினில்
பன்னெடுங் காலம்
இன்தமிழ்ப் பணிசெய்ய
ஔவைக்கு அருங்கனி
தந்தான் – அதியமான்
கிழக்கினில் – அன்று!
ஏறத்தாழ வோர்
எழுபது ஆண்டுகள்
அறிவொளி பரப்பிய
ஞானி சோக்கிரட்டீஸின்
ஆருயிர் பறித்திடக்
"ஹெம்லொக்" தந்தனர் –
ஆட்சியில் அமர்ந்தோர் –
அறிவினில் தாழ்ந்தோர் –
மேற்கினில் – அன்று!

## கால அட்டவணை

| | | |
|---|---|---|
| சோக்கிரட்டீஸ் | - | கி. மு. 469 - 399 |
| ஔவையார் | - | கி. பி. 100 - 130 |
| புலவர் கபிலர் | - | கி. பி. 50 - 125 |

( நமது ஈழநாடு - 01.09.2003 - 08.09.2003, 15.09.2003 - 22.09.2003, 29.09.2003 - 06.10.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆருணி**

**காஸ்சு**

ஒருசிறு பையன் கிழக்கினில் அன்று
குருபக்தி யினிலே சிறந்து நின்றான்!
ஒருசிறு பையன் மேற்கினில் அன்று
தேசபக்தி யினிலே உயர்ந்து நின்றான்!

தவத்தினில் உயர்ந்த தௌமிய முனிவரின்
குருகுலத் தினிலே சிறுவர்கள் பலருடன்
ஆருணி எனுமோர் சிறுவனும் பயின்றான்!
குருகுலத் தினிலே வழமைபோல் ஒருநாள்
சிறுவர் எல்லோரையும் தம்முன்னே அமர்த்திப்
பாடமொன்றினை விளக்கினார் முனிவர்!
வானம் திடீரெனக் கறுத்துக் கொண்டது!
பொழியத் தொடங்கிய மழையின் கொடுமையால்
முனிவர்முன் இருந்த சிறுவர் யாவரும்
தத்தம் பணிசெய்ய எழும்பி ஓடினர்!
ஆருணி மட்டும் ஓடினானில்லை!
தன்குரு வுடைய வயல் வரம்பினிலே
தான்கண்ட சிறியதோர் உடைப்பைப் பற்றியே
ஆருணியின் மனம் கவலை கொண்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொழியும் மழைக்குப் பெருகும் வெள்ளமோ
வரம்பினை அழிக்கும் – வயலும் பயிர்களும்
அழியும்" என்றவன் எண்ணிக் கொண்டதும்
அவன்தன் குருவிடம் விரைந்து சென்றவன்
வயலின் நிலையினை விளக்கிச் சொன்னான்!
வயலுக்குச் செல்ல அனுமதி கேட்கவே
குருவும் அவனுக்கு அனுமதி தந்தார்!
புயலென விரைந்தான் வயலினை நோக்கி!
மழையோ தொடர்ந்து சோவெனப் பொழிந்தது!
வயலை அடைந்தவன் உடைப்பைப் பார்த்தான்!
மண்ணை உருட்டி உருட்டி எடுத்து – வயல்
வரப்பின் உடைப்பில் போட்டான் தொடர்ந்து!
பெருகிடும் வெள்ளம் அவன் போடும் மண்ணைக்
கரைத்துச் சென்றதால் உடைப்பு வளர்ந்தது!
அடைத்தலும் கரைதலும் நடந்தது தொடர்ந்து!
ஆயினும் அவன் மனம் கலங்கிட வில்லை!
"அடுத்தென்ன செய்வது?"என்றே ஆருணி
கணப்பொழு தேதான் சிந்தனை செய்தான்!
வெள்ளம் பெருகிடும் உடைப்பின் குறுக்கே
படுத்துக் கொண்டான் தடுப்பாரின்றியே!
வயலின் உடைப்பு அடைபட்டுக் கொண்டது!
பெருகிய வெள்ளமும் தடைப்பட்டு நின்றது!
அழிவிலி ருந்தவன் வயலைக் காத்தான்!
பொழிந்த பேய்மழை சிறிது நேரத்தில்
மெல்ல மெல்லத் தணிந்து கொண்டது!
மழையின் பொழிவும் முற்றாக நின்றது!!
பற்பல திசைகளில் ஓடிய சிறுவர்கள்
முனிவரின் முன்னே வந்து கூடினர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முன் பணிவுடன் அமர்ந்த சிறுவரின்
ஒவ்வொரு முகமாய் முனிவர் நோக்கினார்!
"ஆருணி எங்கே?" என்று கேட்டார்!
"ஆருணி வயலுக்குச் சென்றுள்ளான் சுவாமி"–
என்று சிறுவர்கள் கூறியபோதுதான்
ஆருணி வயலுக்குச் செல்ல அனுமதி
அளித்தமை முனிவரின் நினைவுக்கு வந்தது!
"பொழியும் மழையினில் வயலினில் தனிமையில்
பொல்லாப்பு எதனிலும் ஆருணி சிக்கினால்..." –
என்று நினைத்ததும் விரைந்து எழுந்தவர்
புயலென விரைந்தார் வயலை நோக்கியே!
வயலின் வரப்பின் உடைப்பைத் தடுத்திட
வெள்ளப் பெருக்கைத் தடுத்து நிறுத்திடத்
தன்னலம் மறந்து – தன்னுடல் அடையும்
துன்பம் துறந்து – வரம்பின் குறுக்கே
படுத்த வண்ணம் ஆருணி குளிரினால்
படுகின்ற துன்பம் கண்ட முனிவரின்
உள்ளம் நெகிழ்ந்தது! நெஞ்சம் திகைத்தது!
உடனவர் விரைந்து குளிரினால் நடுங்கும்
ஆருணியைத் தன்னிரு கைகளினாலும்
தூக்கி நிறுத்தினர் கண்கள் பனித்திட!
ஆருணி விரைந்துதன் குருபதம் பணிந்தான்!
அவனது நெஞ்சினில் கனன்றுகொண்டிருந்த
குருபக்தித் தரத்தினை எண்ணி வியந்த –
அவனது தியாகத்தின் உயர்வை வியந்த –
தௌமிய முனிவர் அவனைத் தன்கைகளால்
அன்புடன் அணைத்து அருளாசி புரிந்தார்!
முனிவரின் அன்புடன் ஆசியும் பெற்றதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினில் ஆற்றலில் அருளிலும் உயர்ந்தான்!
'ஆருணி உத்தாலகர்' எனும்பெரும் முனிவராய்
வளர்ந்து சிறந்து புகழுடன் விளங்கினார்!!
குருபக்திக் கிவரோர் சிறந்த உதாரணம்!
துணிவுக்கும் பணிவுக்கும் இவர்தான் உதாரணம்!!
பண்பிலே உயர்ந்ததால் மண்மிசை வாழ்கிறார்!



வெள்ளம் பெருகாது தடுக்கும் ஆருணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய நாடாம் ஒல்லாந்து நாட்டில்
சிற்சில பகுதிகள் கடல் மட்டத்தினிலும்
தாழ்ந்து கிடப்பதால் – கடல் விழுங்காமல்
நாட்டைக் காத்திட வேண்டி வலிய
கடல் மதில்களினை அமைத்துக் கொண்டனர்!
கடற்கரை யோரம் சிறியதோர் ஊரில்
வசித்து வந்தான் சிறுவன் கான்சு!
இரண்டு மைலுக்கு அப்பா லுள்ளதோர்
பள்ளிக்குச் சென்றவன் கற்று வந்தான்!
பள்ளியிருந்து வழமைபோல் ஒருநாள்
தனிமையில் மாலையில் வந்துகொண் டிருந்தான்!
கடல்மதில் ஓரமாய் அமைந்த வீதியில்
நடந்தவன் கால்களில் திடீரென ஈரம்!
"இவ்விடத் தெப்படித் தண்ணீர்க் கசியும்?..."
என்றவன் சிந்தனை அலைகள் மோதிட
மங்கிய ஒளியில் கூர்ந்து பார்த்தான்!
கடல் மதில் தனிலோர் சிறிய துவாரம்!
அதன்வழியே கடல்நீர் கசிந்திப்போ வீதியில்!
"இச்சிறு துவாரம் சிலமணி நேரத்தில்
உடைந்தும் கரைந்தும் பெரிய தொன்றாகலாம்!
அதன்வழி கடல்நீர் நாட்டினுட் புகுந்தே
அனைத்தையும் அழிக்கலாம்" என்றவன் சிந்தையில்
கற்பனை விரிந்தே அச்சத்தைத் தந்தது!
கல்லால் துவாரத்தை அடைத்திட எண்ணி
அயலெங்கும் தேடினான்கல் அகப்படவில்லை!!
எவரை யென்றாலும் உதவிக்கு அழைத்திட
அப(பா)யக் குரலில் அழைத்தும் பார்த்தான்!
எவரின் காதிலும் அவன் குரல் விழவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் அவன்பக்கம் திரும்பவும் இல்லை!!
கான்சுவோ தனிமையில்! வீதியோ இருளினில்!!
கடல்மதில் அருகினில் அமர்ந்து கொண்டான்!
தன்னிருகைகள் கொண்டத் துவாரத்தை அடைந்தான்!
தண்ணீர்க் கசிவும் தடைப்பட்டு நின்றது!
"யாரேனும் வந்ததும் அவரை அனுப்பி
ஊராரை எழுப்பி உதவிகள் பெற்றுத்
துவாரம் அடைப்பேன்! இதுவே அதுவரை
செய்யத் தக்கது" என்று தனக்குள்ளே
சொல்லிக் கொண்டுதன் "கடமையில்"ஆழ்ந்தான்!
கான்சுவின் குடலுள் பசித்தீ கனன்றது!
கான்சுவின் உடம்போ களைப்பில் தளர்ந்தது!
ஆயினும் கான்சு துணிவும் வீரமும்
தியாக சிந்தனையும் நிறைந்தவன் என்பதால்
"தன்னுளம் தளர்ந்தால் தன் நாடு அழியும்.."
என்பதை நன்கவன் அறிந்ததால் தொடர்ந்தான்!
அந்தவேளையில் அவனது வீட்டினில்...
கான்சுவின் தாயார் உள்ளம் கலங்கி
"கான்சு எங்கே? அவனிந்த மாதிரி
வீடு திரும்பிடப் பிந்துவ தில்லையே -
எங்கள் பிள்ளை" என்றுளம் கலங்கினாள்!
கான்சுவின் நண்பனாம் வில்லியம் வீட்டிற்குக்
கான்சுவின் தந்தையார் விரைந்து சென்றார்!
"இன்றவன் என்னுடன் வரவே இல்லை...!" -
என்று வில்லியம் பதில்தரக் கேட்டுடன்
வீட்டுக்கு விரைந்து விளக்கொன்றை எடுத்தார்!
வீட்டுக்குக் கான்சு வருகின்ற பாதையில்
தந்தையார் நடந்தார் கான்சுவைத் தேடி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க கருத்துடன் பாதையின் இருபக்கமும்
பார்த்துக் கொண்டே வந்த தந்தையார்
மதிலோரத்தில் உருவமொன்று இருப்பதைக் கண்டு
விளக்கை உயர்த்திப் பிடித்துப் பார்த்தார்!
தன்விளக் கொளியினில் கடல் மதில் அருகினில்
தன்னந் தனிமையில் காரிருட்டினிலே
தன்மகன் இருப்பதைக் கண்டார் தந்தை!
கான்சுவைக் கண்டதும் வியந்து நின்றவர்
கான்சுவின் அருகே விரைந்து சென்றார்!
தந்தையைக் கண்டதும் சிறுவன் கான்சுவின்
சிந்தையில் மகிழ்ச்சியும் திகைப்பும் எழுந்தன!
கடும்குளிர் வாட்டவும் கொடும்பசி வருத்தவும்
காரிருள் கண்டும் அஞ்சாது உடைப்பினை
அடைப்பதன் மூலம் தன் நாட்டைக் காக்கும்
அரும்பெரும் செயல்கண்டு உள்ளம் நெகிழ்ந்த
தந்தையார் குனிந்து மகன்முகம் நோக்கினார்!
"துவாரத்தின் வழியே கடல்நீர் புகுந்திடும்!
துவாரத்தை அடைத்திட வேண்டிய அனைத்தையும்
கடிதினில் செய்வீர்" என்றான் கான்சு!
காற்றெனத் தந்தையார் ஊருக்குள் ஓடினார்!
மக்களை எழுப்பினார்! அபாயத்தை விளக்கினார்!
மதிலின் அருகே மக்கள் குவிந்தனர்!
கட்டிடப் பொருட்களும் வந்து குவிந்தன!
துவாரம் அடைத்தனர்! அபாயம் தடுத்தனர்!
தாய் நாட்டினுக்கு நேர்த்திட இருந்ததோர்
பாரிய அழிவைத் தடுத்திட்ட கான்சுவை
மக்கள் மெச்சினர்! போற்றிப் புகழ்ந்தனர்!
மக்கள் கான்சுவின் தியாகத்தை வியந்தனர்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கரிய செயல்செய்த கான்சுவைத் தந்தையார்
பெருமையும் மகிழ்வும் பொங்கிட அணைத்தார்!!

கிழக்கினில் அன்றுதன் குரு பக்தியினாலுயிர்
இழக்கவும் துணிந்தான் சிறுவன் ஆருணி!
மேற்கினில் அன்றுதன் தேசபக்தினாலுயிர்
இறக்கவும் முனைந்தான் சிறுவன் கான்சு!!
உலகினில் உயர்ந்தது குருபக்தியென்றால் –
குருபக்திக் குதாரணம் ஆருணியாகும்!
உலகினில் உயர்ந்தது தேசபக்தியென்றால் –
தேசபக்திக் குதாரணம் கான்சுவாகும்.



கான்சு

( நமது ஈழநாடு - 13.10.2003 - 20.10.2003, 27.10.2003 - 03.11.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 08 மேற்கும்

## புலவர் தருமி
## கவிஞர் பிர்தௌசி

கிழக்கினில் அன்று புலவர் ஒருவர்
இயற்றிய பாடலைப் போற்றிய மன்னவன்
முன்னர்தாம் அளித்த வாக்குறுதிப்படியே
ஆயிரம் பொன்களைக் கொடுத்து உயர்ந்தான்!
மேற்கினில் அன்றோர் கவிஞர் பாடிய
பாடலை மன்னவன் போற்றவும் மில்லை!
கவிஞருக்கு அளித்த வாக்குறுதிப் படிமன்னன்
பரிசாகப் பொன்னைக் கொடுக்கவுமில்லை!!

மதுரையம் பதிவளர் சோம சுந்தரர்மேல்
மாற்றரும் அன்பும் சாற்றரும் பக்தியும்
கொண்ட "வம்மிச சூடாமணி" எனும்
பாண்டிய வேந்தன் ஓர் சம்பக வனத்தைப்
படைத்துக் கொண்டு பரமனைப் பரவினான்!
பூக்களைக் கொய்ததில் பல்வகை மாலைகள்
புனைந்தெடுத் தவைகளைச் சோம சுந்தரருக்குச்
சாத்தி மகிழ்ந்தந்த அழகினிற் திளைத்தான்!! – அதனால்
வம்மிச சூடாமணி பாண்டியனுக்கு
சம்பகபாண்டியன் என்றுமோர்
பெயரினைச் சூட்டி அழைத்தனர்
பாண்டி நாட்டவர் என்பதறிவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் ஒருநாள் அந்தி மாலையில்
தன்தேவி யுடனே சம்பக வனத்திலோர்
சந்திர காந்தக் குன்றில் இருந்தான்!
நறுமணம் கமழ்ந்திடும் தென்றற் காற்றுத்
தவழ்ந்து வந்தவனைத் தழுவிச் சென்றது!
"தென்றலில் வந்ததோர் புதுவித நறுமணம்!
சோலையி லிருந்தது வருகின்ற போதது
தென்றற் காற்றுடன் கலந்ததும் அல்ல!
எவ்விடத் திருந்தது என்னிடம் வந்தது?"–
என்று நினைத்தவன் தேவியைப் பார்த்தான்!
அவளின் கூந்தலில் நறுமணம் கமழவே
"இந்த வாசனை வண்டறிந்திராத
ஒன்றுதான் போலும்" என்று நினைத்த
பாண்டியன் தனது தேவியின் கூந்தலில்
தவழ்ந்திடும் நறுமணம் இயற்கையோ? இல்லையேல்
செயற்கையோ? என்றவன் ஐயம் கொண்டான்!
"இந்த என்ஐயம் தீர்ந்திடும் வண்ணம்
எவரே யாயினும் பாடல் செய்தால்
அந்தப் புலவர் ஆயிரம் செம்பொன்கள்
பரிசிலாகப் பெற்றிடத் தக்கவர்"––
என்று அறிவிப்புச் செய்ததோ டாயிரம்
பொன்னைக் கொண்ட பொற்கிளி யொன்றையும்
தமிழ்ச் சங்கம்வாயில்முன் தூக்கிடப் பணிந்தான்!
சங்கப் புலவர்கள் முயன்று தோற்றனர்!
மன்னவன் விடுத்த அறிவிப்பைக் கேட்டார்
தருமி என்றொரு ஏழைப் புலவர்!
சங்கத்தின் முன்தொங்கும் பொற்கிளியையும்
கண்டாசை கொண்டார் அவ்வேழைப் புலவர்!!



பாடல் தரும் புலவரும்
பாடல் பெறும் தருமியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பகப் பெருமான்மேல் பக்தியில் மிக்கஅப்
புலவர் தருமி இறைவனின் திருமுன்பு
"மன்னவன் கருத்தினை அறிந்தொரு பாடலைத்
தந்தருள் செய்விரேல் பரிசா யெனக்கு
பொன்னும் கிடைக்குமென் ஏழ்மையு மகலும்" -
என்றுள்ளம் கசிந்திட இரந்து நின்றார்!
"கொங்குதேர் வாழ்க்கை" என்று தொடங்கும்
பாடலைத் தருமிக்குத் தந்தார் இறைவன்!
பாடலைச் சங்கப் புலவர்கள் கையிற் கொடுத்தான்!
தருமியின் பாடலிற் சொற்சுவை பொருட்சுவை
நிறைந்திருப் பதனைக் கண்டுள்ளம் மகிழ்ந்தவர்
பாடலைப் பாண்டியன் கரங்களிற் சேர்த்தனர்!
பாடலின் பொருளும் தன்மனக் கருத்தும்
ஒத்திருந்திடவே மகிழ்வுற்ற பாண்டியன்
பொன்னைத் தருமிக்கு அளித்திடப் பணித்தான்!
தருமியைப் புலவர்கள் அழைத்துச் சென்றவர்
பொற்கிளி அளித்திட முனையும் வேளையில்
அவ்விடம் வந்து நக்கீரர் தடுத்தார்!
நக்கீரர் என்பவர் முதுபெரும் புலவர்!
தமிழ்ச் சங்கத் திலவரே தலைமைப் புலவர்!!
அவரது நாவினில் தமிழ்நடம் பயிலும்!
அவரது வாழ்வில் இறையருள் பொ(லி)ழியும்!!
அந்தப் பாடலைக் கேட்ட நக்கீரர் -
"இந்தப் பாட்டிலே குற்றம் இருப்பதால்
இதற்குப் பொற்கிளி கொடுப்பது தகாததால்
நிறுத்துவீர்" என்றார் - இதனைக் கேட்டதும்
நெஞ்சம் வருந்திய தருமி விரைந்து
சம்பக சுந்தரர் சந்நிதி அடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழ்மையைப் போக்கிடப் பாடல் கேட்டேன்!
ஏளனம் செய்வதாய்ப் பாடல் தந்ததேன்?" –
என்று சுவாமிமுன் இறைஞ்சி நின்றான்!
சிவப்பொலி வுள்ளதோர் புலவராய் மீண்டும்
சோமசுந்தரனார் தருமிமுன் வந்தனர்!
அவையினில் நடந்ததைத் தருமி யிடத்தே
ஆர்வம் மிகுந்திடக் கேட்டு அறிந்தவர்
தருமி தொடர்ந்திடச் சங்கத்தை அடைந்து
புலவோரைப் பார்த்துத் "தருமியின் பாடலில்
குற்றம் சொன்னவர் யாரோ?" என்றனர்!
"யானேதான்" என்றார் புலவர் நக்கீரர்!
"குற்றம் என்னவோ?" – புலவர் கேட்டனர்!
"தருமியின் பாடலில் சொற்குற்றம் இல்லை – ஆயினும்
பொருட் குற்றம் உள்ளது" – என்றார் நக்கீரர்!
"அக்குற்றம் என்னவோ?" புலவர் கேட்டனர்!
"பூவையர் கூந்தலில் வாசனை கமழ்வது
பூக்களைச் சூடிடும் செயற்கையா லன்றி
இயற்கை யாலில்லை" என்றார் நக்கீரர்!
"நால்வகைப் பெண்டிரில் உத்தம இலக்கணம்
நிறைந்தவ ரெனப்படும் பதுமினி கூந்தலின்
வாசமும் செயற்கையோ?" – வாதிட்டனர் புலவர்!
"பதுமினி கூந்தலின் வாசமும் செயற்கையே"!
"தெய்வப் பெண்களின் கூந்தலின் வாசனை...?"
"அவர்களின் கூந்தலும் மலர்மணம் பெறுவதால்
செயற்கையானதே" என்றார் கீரனார்!
"தினம்நீர் வழிபடும் காளத்தி நாதரின்
துணையாய் விளங்கும் ஞானப்பூங்கோதையின்
கூந்தலின் மணமும் செயற்கையோ?" – புலவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மையின் கூந்தலும் அப்படியானதே" – கீரனார்!!
இதுகேட்ட புலவர்தம் நெற்றிக் கண்ணினைச்
சிறிதே காட்டவும் "இந்திரன் போலவே
உம்முடலெல்லாமே கண்ணாக இருப்பினும்
உமது பாடல் குற்றம் குற்றம்தான்"–
என்று உறுதியாய் உரைத்தார் – கீரனார்!
நெற்றிக் கண்ணின் வெப்பம் தாங்காது
வருந்திய கீரனார் பொற்றா மரைக் குளத்தில்
வீழ்ந்து வருந்திட மற்றப்புலவர்கள் உள்ளம் வருந்தினர்!
சங்கப் புலவர்கள் நெஞ்சம் வருந்தி
சோம சுந்தரரின் சந்நிதி அடைந்தனர்!
"கல்விச் செருக்கால் அறிவிழந்து நக்கீரர்
தங்களின் செய்யுளைப் பிழையென உரைத்தார்!
தங்களின் நெற்றிக் கண்ணின் வெப்பத்தால்
வாவியில் வீழ்ந்து வருந்தி உழல்கிறார்!
கீரனின் பிழையினைக் கருணை கூர்ந்து
தேவரீரே! பொறுத்திடல் வேண்டும்" எனத்
தோத்திரம் செய்யவே திருவுள மிரங்கிய
சோமசுந்தரரின் திருநோக்கால் கீரர்தம்
பொறிகள் புலன்கள் கரணங்கள் அனைத்தும்
அன்புரு வாகினார்! தம்பிழை உணர்ந்தார்!
சோம சுந்தரரின் பாதம் பணிந்தார்!
குற்றம் கூறிய ஞானப்பூங் கோதைமேல்
"கைலைபாதி காளத்திபாதி யந்தாதி" எனும்
அந்தாதியை நக்கீரர் பாடவே இறைவன்
கீரரின் பாடலில் உளம்மகிழ்ந் திரங்கி
நேரிலே வந்து கீரரின் கைகளைப்
பற்றிக் கரைக்குச் சேர்த்தனர் சிவனார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனாரை வணங்கி வாழ்த்தி மகிழ்ந்தார்!
"கீரரே! முன்போல் புலவர் கூட்டத்துள் நீவிர்
சிறப்புடன் இருப்பீர்" என்றனர் சிவனார்!
நக்கீரர் தருமிக்குப் பொற்கிளி அளித்தார்!
புலவர் தருமிக்கு மேன்மேலும் பரிசுகள்
வழங்கி மகிழ்ந்த சம்பக பாண்டியன்
திருப்பணி பலப்பல செய்தருள் பெற்றே
நல்லாட்சி செய்து இன்புற்றிருந்தான்!

பாரசீகக் காப்பியம் "ஷாநமி"!
"அரசர் காப்பியம்" எனவும் கொள்வர்!
அதனை இயற்றிய கவிஞர் யாரெனில்
"அபுல்காசின் மான்சர்" அவர்களே என்பர்!
காப்பியப் பாடலைக் காது குளிர்ந்திடக்
கேட்டு மகிழ்ந்த நாட்டின் தலைவரோ
புலவரைப் போற்றிப் புகழ்ந்து வியந்தனர்!
"பிர்தௌசி" எனும் பட்டமும் வழங்கினர்!
"துறக்கப் பாடகர்" என்பததன் பொருளாம்!
பாரசீகத்தை அப்பொழுது ஆண்ட
மன்னன் முகம்மது ஷா எனும் பெயரினன்!
தனது நாட்டின் பழைய கதைகளை
எதுகை மோனை துலங்கிய நயத்துடன்
பாடி வைத்தால் படிப்போர் மகிழ்வார் -
வரலாறுகளையும் ஆவணப் படுத்தலாம்" -
என்ற தன்மனத் தெண்ணத் துணிவினை



பிர்தௌசி (Ferdowsi)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கி அப்பணியை நிறைவேற்றும் வண்ணம்
கவிஞராகிய "பிர்தௌசி" யிடமேயவன்
வேண்டுகோள் விடுத்து விருப்புடன் பணித்துப்
பொறுப்பினைத் தந்து புலவரைப் பேணினான்!
ஆயிரம் ஈரடிச் செய்யுள் கொண்ட
பாடல்களுக்குப் பரிசிலாய் ஆயிரம்
பொன்னால் இயன்ற காசுகள் தருவதாய்
ஒப்புதல் தந்தவன் ஆசியும் வழங்கினான்!
தனது நகரினைச்சுற்றிப் பாய்ந்திடும்
ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து
நாட்டு மக்கள் நலம்பெறும் வகையில்
செய்திடல் வேண்டும் எனப்பல நாட்களாய்
எண்ணி இருந்தவர் கவிஞர் பிர்தௌசி!
மன்னன் வழங்கிய வாக்குறு தியினால்
மனம்மிக மகிழ்ந்த கவிஞர் பிர்தௌசி
கிடைத்த வாய்ப்பினை மனமுவந்து ஏற்றார்!
முப்பத்து ஐந்து வருடமாய் உழைத்து
தாம்மேற் கொண்ட பெரும்பணி யதனை
வெற்றிகரமாய் நிறைவு செய்தனர் –
அருங்கலை வாணர் கவிஞர் பிர்தௌசி!
கவிஞர் பிர்தௌசி தம்காவி யத்திற்கு
"ஷாநாமா" என்னும் பெயரைச் சூட்டினர்!
மன்னன் விரும்பிய வண்ணம் அந்தக்
கவிஞர் பாடிய காப்பியத்தினிலே
ஈரடிச் செய்யுள் அறுபதினாயிரம்
இருந்தன என்ற இந்த உண்மையை
அரசன் அறியா வண்ணம் மறைத்த
அமைச்சனாகிய வஞ்சகன் ஒருவன் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞருக்கு மன்னவன் கொடுத்திருந்த
வாக்குறுதி யினையும் பூர்த்தி செய்யாமல்
அறுபதினாயிரம் பொற் காசுகளை அவர்க்கு
அளிப்பற்குப் பதிலாய் வெறுமனே
அறுபதினாயிரம் வெள்ளி நாணயங்களை -
அளவிலும் சிறுத்த வெள்ளிப் பணங்களை -
பிர்தௌசியிடம் தந்து - மன்னன் முன்தந்த
அந்த வாக்குறுதியின் தகுதியும் பெறுமதியும்
அற்றுப் போக அநீதி பெருகிடத்
தந்திரமாகச் சமாளிக்க முயன்றான்!
மன்னனின் வாக்கு மீறப்பட்டதை
உணர்ந்த கவிஞர் பெருஞ்சினம் கொண்டனர்!
தமக்குக் கிடைத்த வெள்ளிப் பணங்களைத்
தந்தவனுக்கேயவர் திருப்பிக் கொடுத்தனர்!
அரசன் மீதொரு நிந்தனைப் பாடலை
இயற்றிக் கொடுத்தவர் நாட்டைப் பிரிந்தனர்!
கசப்பும் சினமும் காழ்ப்பும் உந்திடப்
புறப்பட்ட கவிஞர் பிர்தௌசி முதலில்
'மெசிண்டரன்' நகரினை அடைந்தனர் - பின்னர்
'பாக்தாத்' சென்றனர் - பாவம் கவிஞர்!
நொந்த உள்ளத்துடன் மனவிருப்பின்றி
இறக்கும் தருணத்தை நெருங்கு வதுணர்ந்தவர்
பிறந்த நகர்விட்டு நொந்த உள்ளத்துடன்
பாக்தாத் நகரில் இருந்த போது
"யூசுப்பும் யுலைக்காவும்" என்றோர்
பெரிய காவியம் ஒன்றினைப் பாடியவர்
தம் நகராம் 'தௌசிற்கு' மீண்டனர்!
அச்சமயம்தான் தனது அமைச்சரும் சகாக்களும்



சிலையாகப்
பிர்தௌசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிச் செய்த கொடிய சதியினால்
கவிஞருக்கு உரிய தொகை முழுவதும்
கொடுபடாமல் தடுக்கப்பட்டமையையும்
பெரியதோர் மோசடி நடந்திட்டமையும்
தன்வாக்குறுதி முழுமையாய் மீறப்பட்டமையும்
தௌசியின் மன்னனால் அறியப்பட்டன!
அறுபதினாயிரம் செம்பொற் காசையும்
கவிஞரின் கைகளிற் சேர்த்திடும் வண்ணம்
கருத்துடன் கடிதிலே அனுப்பினான் மன்னன்!
ஆயினும் அரசன் அனுப்பிய காசுகள்
பாவலன் உடலம் கல்லறைப் படுக்கையுள்
அடக்கம் செய்யப்பட்ட பின்னர் தான்—
கவிஞரின் மகளின் கைகளைச் சேர்ந்தன!
கவிஞரின் மகளோ சீற்றம் மிகுந்திட
ஆட்சிபீடத்தின் செயலினை வெறுத்து
அப்பொற் காசினைத் தீண்டவே மறுத்தாள்!
அவ்வேளை கவிஞரின் உறவினர் ஒருவர்
அரசன் அனுப்பிய பொற்காசு அனைத்தையும்
பெற்றுக் கொண்டு விட்டா ராயினும்
அரசன் வாய்மொழி பொய்த்தது அதனால்
அரசனின் நெஞ்சம் துயரில் ஆழ்ந்தது!
கவிஞரின் கனவு பொய்த்துப் போனதால்
கவிஞரின் நெஞ்சமும் துயரில் வீழ்ந்தது!
கவிஞரின் கனவும் வீணாகப் போனது!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சம்பக பாண்டியன் வாக்குறுதிப்படிப் பொன்னைத்**
**தருமிக்குத் தருவதைத் தடுத்த நக்கீரரே**
**தருமிக்கு ஆயிரம் பொன்னைக் கொடுத்து**
**அரசனின் வாக்கைக் காத்தனர் – கிழக்கினில்!**
**மன்னன் முகம்மது ஷாவின் ஒப்புதற்படி**
**கவிஞர் பிர்தெளசிற்குச் சேர வேண்டிய**
**அறுபதினாயிரம் பொன்னையும் – கவிஞர்**
**இறந்த பின்னரே வழங்கினர் –மேற்கினில்!!**

## கால அட்டவணை

| | |
|---|---|
| மாமுது இபின் சபக்டஜின் (முகம்மது ஷா) | - கி.பி.998 - 1030 |
| கவிஞர் பிர்தெளசி | - கி.பி. 940 - 1020 |
| நக்கீரர் | - கி.பி. 100 - 130 |
| நக்கீரதேவ நாயனார் | - கி.பி. 10 ஆம் நூற்றாண்டு |

( நமது ஈழநாடு - 10.11.2003 - 17.11.2003,
24.11.2003 - 01.12.2003,
08.12.2003 - 22.12.2003 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 09 மேற்கும்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
## வீரமாமுனிவர்

கிழக்கினிலே உதித்துக் கற்றுச்
சிவநெறி தமிழைக் காத்துச்
சுழன்றிடும் உலகம் போற்ற
அரும்பணி செய்தார் ஒருவர்!
மேற்கினில் பிறந்து கற்றுத்
தமிழினில் மிகுந்த பற்றால்
போற்றிடும் கிழக்கே வந்து
தமிழ்ப்பணி செய்தார் ஒருவர்!

நல்லையில் வாழ்ந்திருந்த
கந்தப்பிள்ளை அவர்களுக்கும்
அவரது துணைவியர் ரென்னும்
சிவகாமியா ரவர்களுக்கும்
நற்தவ மகனாய் நல்லூர்ப்
பதியினி லவத ரித்தார்!
சொல்லரும் இனிமை மிக்க
தமிழினைக் கற்றுத் தேர்ந்தார்!
தள்ளரும் ஆங்கிலத்தைக்
தெளிவுறக் கற்றுக் கொண்டார்!
கொள்ளரும் வளங்கள் மிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழி யதையும் கற்றார்!
விள்ளரும் கல்வி கற்க
இலவசப் பள்ளிக் கூடம்
பிள்ளைகட் கமைத்து ஆங்கே
தாமமர்ந் தறிவைத் தந்தார்!
கற்றவ ரன்றி மற்றோர்
அறிந்திட வியலா வண்ணம்
நற்றமிழ்ப் பாக்கள் கொண்டு
விளங்கிய புராண நூல்கள்
பலவற்றை எளிமை மிக்க
வசனத்திற் பெயர்த் தெடுத்துப்
படிப்பறி வில்லார் கூடப்
படிப்பதாற் பயன்கள் கொள்ளத்
தமிழினம் போற்றும் வண்ணம்
அச்சினிற் பதித்துத் தந்தார்!
தமிழரிற் சைவத் துண்மை
அறிந்திடாக் காரணத்தாற்
சைவத்தை விட்டுக் கிறீஸ்து
சமயத்தை நாடு வோர்க்குச்
சைவத்தின் மேன்மை கூறி
அவர்களைத் தடுத்துக் கொண்டார்!
பார்சிவல் சுவாமி வேண்டப்
பைபிளைத் தமிழி லாக்கிப்
பாரதம் எடுத்துச் சென்று – அங்கே
அறிஞரால் ஏற்கச் செய்தார்!
ஆலயங் களிலே சைவப்
பிரசங்கம் செய்து வந்தார்!
சிதம்பரம் சென்னை போன்ற


ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுகநாவலர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக நகரி லெல்லாம்
சிகரம் போல் இவரின் தொண்டு
சிறந்திட இவரைப் போற்றித்
திருவாவடுதுறை ஆதினத்துடன்
தமிழக அறிஞரும் இணைந்து
"நாவலர்" பட்டம் தந்தார்!
தமிழரே பெருமை கொண்டார்!
தமிழினுக் கணிகள் சேர்த்து
ஐம்பத்து ஆறு ஆண்டாய்த்
தமிழுடன் சைவம் இரண்டும் – தனது
கண்கள்போற் காத்து நின்றார்!
சிவநெறி காக்கும் சக்தி
மிக்கதோர் அரணாய் நின்றார்!
சிவநெறிப் பரப்பில் ஐந்தாங்
குரவராய் என்றும் உள்ளார்!
இறையன்பால் தொண்டால் அறிவால்
உயர்ந்த இப்பெரியார் யாரோ?
இறையன்பாற் தமிழர் பெற்ற
ஆறுமுக நாவலர்ப் பெரியோன்!!
நாவலரன் றில்லை யென்றால்
இன்றெங்கள் சிவநெறி இல்லை!
நாவலரன் றில்லை யென்றால்
இன்றெங்கள் தமிழும் இல்லை!!
நாவலர் பணிகள் சாற்றத்
தமிழிலே வார்த்தை இல்லை
நாவலர் பணிகள் சாற்றத்
தமிழரில் யார்தான் வல்லார்!!



இலங்கை அரசினால்
வெளியிடப்பெற்ற
நாவலர் பெருமான்
நினைவு முத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலி நாட்டிற் தோன்றித்
தமதரும் சமய மான
கத்தோலிக் கத்தை யெங்கும்
பரப்பிடத் துறவை ஏற்றுத்
தமிழகம் வந்து சேர்ந்து -
ஐம்பது ஆண்டு காலம்
தமிழக மண்ணில் வாழ்ந்து
தமிழினைக் கற்றுத் தேர்ந்து -
தமிழகப் பண்பை யெல்லாம்
மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு
தமிழகத் தவரும் அவரை ஏற்கத்
தமிழகத் துள்ளோர் மெச்சத்
தமிழனைப் போல வாழ்ந்து
மேற்குள்ளோர் தமிழைப் பற்றி
அறிந்திடும் வண்ணம் தமிழர்
போற்றிடும் நீதி நூலாம்
திருக்குற ளதனை லத்தீன்
மொழியினிற் பெயர்த்துத் தந்தும் -
"தொன்னூல் விளக்கம்" என்னும்
மொழியினை விளக்கும் இலக்கண
நூலினை ஆக்கித் தந்தும்
தமிழ்மொழிச் சொற்க ளுக்குப்
பொருளினை அறிய ஏற்ற
தமிழ்மொழி அறிந்தோர் போற்றச்
"சதுரகராதி" ஆக்கித்
தமிழிலே முதன்முத லாயோர்
அகராதி படைத்துத் தந்தும்
தமிழிலோ ரிடத்தைப் பெற்றார்!



இத்தாலியத் தமிழ் பேரறிஞர்
வீரமாமுனிவர் (பெஸ்கி)
(CONSTANTIUS BESCHI)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பணி சிறக்க நின்றார்!
தரணியில் உயர்ந்து நின்றார்!
மேலும் இவர்...
பரமார்த்த குருவைப் பற்றி
அங்கதச் சுவையி னோடு
தரமுயர் கதைகள் தமிழில்
உரைநடை வடிவி லாக்கி
'அங்கதச் சுவையைத் தமிழில்
உரைநடை வடிவில் முதலில்
அறிமுகம் செய்தார்' என்னும்
பெருமைக்கு முரிமை பெற்றார்!
தமிழ்மர பதனைப் போற்றிப்
புதுப்புது அணிகள் சேர்த்துத்
தவமகன் யேசு பிரானின்
தந்தையாம் சூசை யப்பர்
தலைவராய் விளங்கும் வண்ணம்
தமிழ்மணம் பரவும் வண்ணம்
தமிழறிந் தோர்கள் போற்றத்
'தேம்பா வணி' யென்றோதும்
காவிய மொன்றைத் தந்து–தமிழ்ப்
பணியிலே உயர்ந்து நின்றார்!
மேவிய பணியில் இன்னும்
பற்பல நூல்கள் செய்தார்!
தமிழின்பால் மாறாக் காதல்
கொண்டஇவ் வறிஞன் யாரோ?
தமிழ்ப்பணிக் கென்றே தன்னை
அளித்தஇவ் வறிஞன் யாரோ?
மதுரைக்கு வந்து சேரும்



சி(நி)லையாக
வீரமாமுனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையிவர் பெயரோ 'பெஸ்கி'!
மதுரைக்கு வந்த பின்னால் – இவர்
'வீரமா முனிவர்' ஆனார்!
தமிழுக்குத் தொண்டு செய்தார்க்
கிறப்பில்லை என்று சொல்வார்!
தமிழ்த் தொண்டர் 'பெஸ்கி' எங்கள்
தமிழுடன் தமிழே யானார்!!

நாவலர் கிழக்கிற் தோன்றிக்
கிறிஸ்தவ வேத நூலாம்
நானிலம் போற்றும் 'பைபிள்'
நூலினைத் தமிழிற் தந்தார்!!
மேற்கினி லுதித்த 'பெஸ்கி'
கிழக்குக்கு வருகை தந்து
போற்றிடும் குறளை லத்தீன்
மொழியினிற் பெயர்த்துத் தந்தார்!!

**கால அட்டவணை**

| | |
|---|---|
| ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் | 18.12.1822 - 05.12.1879 |
| வீரமாமுனிவர் | 08.11.1680 - 04.02.1747 |

( ஈழநாடு - 12.01.2004 19.01.2004 26.01.2004 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன்னர் அசோகர்
## மாவீரன் அலெக்ஸாண்டர்

போர்க்களம் செல்வதிலும்
பகைவரை வெல்வதிலும்
பொழுதைக் கழித்தின்பம்
கொண்டதோர் மாமன்னன் -
போரை வெறுத்தான்!
வெற்றியைச் சபித்தான்!!
அகிம்சையை வரித்தான்!
அன்பை வளர்த்தான்!!
சிந்தையைத் தொட்டிடும் விந்தையிது - கிழக்கிலே!
போர்க்களம் புகுவதையும்
வெற்றிகள் தொடர்வதையும்
சரண்புகும் நாடுகளைத் தன் பேரரசுடனே
இணைத்துக் கொள்வதனையும் பே(ா)ரின்பப்
பணியெனக் கொண்டதோர் மாவீரன்
தொடர்ந்ததோர் மாவீரன் -
போர்வீரர் களைத்ததால் போரை
நிறுத்தித்தன் தாயகம் நோக்கி
மீண்டிடும் வழியினில்
நோய்வாய்ப் பட்டுயிர்
மாய்ந்தான் -- மேற்கினில்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌரியப் பேரரசரான
பிந்துசாரரின் இறப்பு
அண்ணன் தம்பியை
மோதிட வைத்தது -
முடியுரிமை பற்றி
முடிவு கட்டிட!
தொண்ணூற்றொன்பது
தம்பியர்களையும் -
அண்ணனாம் சுசீமாவையும் -
மாமன்னர் அசோகர்
சமரினில் வெ(கொ)ன்று
தந்தையின் அரியணையைக்
கைப்பற்றிக் கொண்டார்!
ஆயினும் - நாலாண்டுகள்
கடந்ததன் பின்னரே
மணிமுடி சூடினார் -
மாமன்னராக அசோகர்!
அசோகரின்
தந்தையார் -
"பிந்துசாரர்"!
தாயார் -
"சுபத்திராங்கி(தம்மா)"!
"தேவர்களால் விரும்பப்பட்டவன்"-
எனப்பொருள் படுகின்ற
"தேவானாம்பிய" -
"கண்களுக்கு இனியவன்" -
எனப்பொருள் தருகின்ற
"பியதசி" - என்னுமிரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பெயர்களைச்
சூடிய அசோகர் -
மகாதேவி
அசந்திமித்திரை
கருவாகி
பத்மாவதி
திசியரட்சிதை எனும்
கன்னியர் ஐவரை
மனைவியராய்க் கொண்ட
மாமன்னர் அசோகர் -
அரியணையி லமர்ந்த
அரிய வேளையில்
வடமேற்றிசையினில்
ஆப்கானிஸ்தானத்திலிருந்து
தென்திசையினிலே
மைசூர் வரையிலும்
விரிந்து கிடந்தது
மௌரியப் பேரரசு!
முடிசூடியதன் பின் -
தன்னரசாட்சியினது
ஒன்பதாம் ஆண்டினில் -
மௌரியப் பேரரசின்
பரப்பினைப் பெருக்கிடும்
தீராத் தா(க்)கத்தினால்
கலிங்கநாட்டின் மேல் -
இதுவே இன்றைய
ஒரிஸ்ஸா மாநிலம் -
படையுடன் நடந்த



மாமன்னர் அசோகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்னர் அசோகர் –
போரினில் வென்றார்!
பேரரசும் வளர்ந்தது!!
தோற்றிட்ட கலிங்கம்
தோற்றத்தை இழந்தது!
கலிங்கத்துக்காக
நடந்த பெரும் போரில்...
100000 பேர்கள் வரை
உயிர்களை இழந்தனர்!
உறுப்புகள் சிதைந்தவர்
உறவுகள் இழந்தவர்
வாழ்க்கைத் துணைகளைத்
தொலைத்துத் தவித்தவர்
கணக்கிலடங்கா!
150000 பேர்கள் வரை
சிறையுண்டனர்!
சிதையுண்டனர்!!
களத்தினில் மடிந்த
கரிகளும் பரிகளும்
சிதைந்த ரதங்களும்
ஆயிரம்! ஆயிரம்!!
போர் வெ(ற்)றிக் களிப்பினில்
கருத்திழந் திருந்த
மாமன்னர் அசோகர்
போர்க்கள ஓலங்களை
போர்க்கள அலங்கோலங்களைச்
சமர்க்கள அவலங்களைக்
ஒவ்வொரு வீட்டிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வீதியிலும்
கண்டுளம் திகைத்தார்!
கண்களைத் திறந்தார்!
இம்மண்ணுக்காகவா
இவரெல்லாம் மாண்டனர்?
இம்மண்ணுக்காகவா
இத்தனை இழப்புகள்?
இம்மண்ணுக்காகவா
இத்தனை அழிவுகள்?
சிந்தனை விரிந்தது!
சிந்தை தெளிந்தது!!
நெஞ்சம் நெகிழ்ந்தது!
வெஞ்சமர் மேற்கொண்ட
வேட்கை மறைந்தது!!
போர்வெற்றி மேற்கொண்ட
பெருவெறி தொலைந்தது!!
போர்களை வெறுத்தார்!
போரா யுதங்களை
வீசினார் தொலைவில்!!
அமர்க்களம் மறந்த
அசோக மாமன்னர்
அன்புடன் அகிம்சையை
அவனிக்குப் போதிக்கும்
புத்த மதத்தினைப்
பற்றிக் கொண்டவர்
பௌத்த சங்கத்துடன்
வளர்த்துக் கொண்டார் –
பலம்மிகு உறவினை!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம்தரும் தொடர்பினை!!
புத்தம் போற்றிநிற்கும்
புண்ணிய தலங்களுக்குத்
தவறாது சென்றவர்
தரிசித்து மகிழ்ந்தார்!
ஊர் ஊராயவர்
உலவி வருவதும்...
மக்களை அழைத்து
அறவழி வாழ்ந்திட
அகிம்சையைப் போற்றிட
அறி(ற)வுரை மொழிவதும்...
தம்பெரும் பணியெனத்
தலைமேற் கொண்டார்!
அன்பும் அகிம்சையும் – தமது
இருகண் ணெனக்கொண்டார்!
மாணவர் ஆசிரியர்களுக்கு
அடங்கி நடக்கவும்...
துறவிகள் அந்தணர்களை
மதித்து நடக்கவும்...
சுற்றத்தார் ஊனமுற்றோருக்குப்
பொருள்கொடுத் துதவவும்...
நல்வாழ்க்கை நடத்தவும்...
மற்றச் சமயத்தவரின்
மனம் நோகாதபடி
மதித்து நடக்கவும்...
தன்குடி மக்களைத்
தயவுடன் வேண்டிடும்
அறி(ற)வுரைகளைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்கள் பற்பல
அமைத்திடச் செய்தும்...
அவைகளை மக்கள்
அதிகமாய்க் கூடிடும்
இடங்களில் நாட்டவும்...
மக்கள் அவைகளைப்
படித்து அறிவுபெறவும் -
பணித்தார் அசோகர்!
முதன்முதல் கல்வெட்டுக்களை
அமைத்தவரும் அசோகரே!
தம்போதனைகளைத் தாமே
சாதித்துக் காட்டிட
விலங்கு வேட்டையை
விலக்கிக் கொண்டார்!
தாம் சொன்னவைகளைத்
தாமே செய்து காட்டினார்!
போதித்தவைகளைச்
சாதித்துக் காட்டினார்!
"விதேகா" நாட்டினிலே
பிறந்த நங்கையாம்
மகாதேவியுடன் தாம் கொண்ட
உறவினில் உதித்த
"மகேந்திரன்" (மகிந்தன்) என்னும்
தன்னரும் மைந்தனும்...
"சங்கமித்திரை"(சங்கமித்தை) என்னும்
தன்னரும் புதல்வியும்..
புத்தத்தைத் தழுவியதுடன்
துறவையும் ஏற்கவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விருவரினையும்
இலங்கைக்கு அனுப்பிப்
புத்தத்தைப் பரப்பிடும்
பணியினை அளித்தார்..
மாமன்னர் அசோகர்!!
புத்தசமயத்தைத் தாம்
பின்பற்றிய போதிலும்
பௌத்தத்தைத் தழுவிட
எவரையும் எக்காலத்துமவர்
கேட்டதும் இல்லை!
தூண்டியதும் இல்லை!
வேண்டியதும் இல்லை!
பணித்ததும் இல்லை!
மக்களிடத்தினிலும்
மிருகங்களிடத்தினிலும்
அன்பு பாராட்டிட
அறி(ற)வுரை செய்தவரும் -
போதித்த வண்ணமே
சாதித்துக் காட்டியவரும்
இவரே முதல்வர்!!
மாமன்னரும் இவரே!
மாமனிதரும் இவரே!!
முப்பத்தேழு ஆண்டுகள்
செப்பரும் நல்லாட்சி
ஒப்பரும் முடியாட்சி
இயற்றிய மாமன்னர்
முதுமை வந்துற்றதாலே
இமைகளை மூடிக்கொண்டார்!

மாமன்னர் மறைவின் பின்
அவரது மகனாம்
“குணாளன்”முடிசூடினான்!
இவரது முதுமைக்காலத்தில்
இவர் குடும்பத்துள்ளே
ஆட்சி அதிகாரம் பற்றிய
சர்ச்சைகள் எழுந்ததாகக்
கூறப்பட்ட போதிலுமவை
நிறுவப்படாத தொன்றானது!
எனினும் - மாமன்னர் பற்றி
எதனை எவர் கூறினாலும் -
அன்பும் அகிம்சையும்
அவனியிலுள்ளவரை
அசோக மாமன்னரும்
அகிலத்தில் வாழ்வார்!



சிலையாக
மாமன்னர் அசோகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பிலிப்பு
மசிடோனிய மன்னர்!
அவரின் மைந்தரே
அலெக்ஸாண்டர்!!
"ஒலிம்பியசு" என்பவளே
அலெக்ஸாண்டரின் அன்னை!
கிரேக்கப் பேரறிஞராம்
அரிஸ்டோட்டிலின்
அருமை மாணவர்தாம்
அலெக்ஸாண்டார்!
திறமை மிக்க இவர்
இளமையிலேயே
தந்தையார் பிலிப்பு
பைசாண்டியத்திற்குச்
சென்றிருந்த வேளை
செய்ய வேண்டிய துணர்ந்து
ஆளுநராக இவர்
ஆட்சிப் பொறுப்பேற்றார்!
பதினாறாவது வயதுதான்
அவ்வேளை இவருக்கு!!
"திரேசிலிஸ்" உருவான
கலகத்தை எளிதாகவே
அடக்கிய அலெக்ஸாண்டர் -
தெமோசுதனிசின்
பேருரையாலீர்க்கப்பட்ட
கிரேக்க நகரம் பலவும்
தம்மை எதிர்த்து
எழுந்ததோர் கிளர்ச்சியை



மாவீரர் அலெக்ஸான்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கினார் திறம்பட!
முடக்கினார் எளிதாக!!
இவரின் தந்தையார்
கொலையுண்ட வேளையில்
நாடெங்கும் உருவான
கொந்தளிப்பினையும்
வெற்றியுடன் அடக்கிய
அலெக்ஸாண்டரினை
அவரின் படைத் தலைவர்கள்
தேர்ந்தெடுத்தனரே -
"மூன்றாம் அலெக்ஸாண்டர்" என!
காரிந்தில் கூடியதோர்
கூட்டம் இவரையுடன்
"ஆசியாமைனர்" மீதினிற் -
("சின்னாசியா" மீதினிற்) -
படையெடுத்திடப் பணித்தது!
வெற்றியுடன் பணிமுடிந்து
மசிடோனியா திரும்பியவர் -
பாரசீக நாட்டின் மேல்
படையெடுக்கத் துணிந்தார்!
படையுடன் நடந்தவர்
ஆசியாமைனரிலிருந்து
சைலீசியக் கணவாய்வழியாகப்
பாரசீகத்தை அடைந்தார்!
"கிராமிகசு" எனப்படும்
ஆற்றங்கரையினில்
பெரும்போர் நிகழ்ந்தது!
பெருவெற்றி குவிந்தது!!


இரண்டாம் பிலிப் மன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம்மிகு சிரியாநாட்டின்
பகுதிகளையும் வென்றுதம்
பேரரசினை விரித்தார்!!
மசிடோனியாவிலுள்ள
பொறியியலாளர்களின்
பேருதவியினைப் பெற்று
ஏழுமாதம் நீடித்த
“தயர்” முற்றுகையினையும்
முடித்தார் வெற்றியுடன்!
எகிப்தினை வென்றவரின்
பெருவெற்றி யினையென்றும்
மொழிந்திடவாங்கே
நைல்நதிக் கரையிலே
எழுந்த எழில்நகரே
“அலெக்ஸாண்டிரியா” என்பதாகும்!
பாரசீகத்தை முழுமையாகப்
பணிந்திடச் செய்யவே – அவர்
படையெடுத்தார் மீண்டும்!
படைபலம் கண்டதும்
பாரசீகம் அவரின்
காலடி பணிந்தது – அரசின்
எல்லையும் விரிந்தது!
முப்பதினாயிரம் வீரர்
முன்னணியில் நடந்திட
“இந்துக்குஸ்” எனப்படும்
மலைப்பகுதியி னூடாக
இந்தியா நோக்கி
விரைந்த அலெக்ஸாண்டர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பிரி வொன்றினைப்
"பெர்டிகாசு" தலைமையில்
காபூல் வழியாக
இந்தியாவை அடைந்திடப்
பணித்தவர் – மறுபிரிவுடன்
தடைகளை உடைத்து
வருகின்ற வழியினில்
வரவேற்றார் அவர்களைத்
தட்சசீல மன்னர்!
சிற்றரசர் பலபேர்கள்
பணிந்தனரவரை – ஆயினும்
"புட்கலாவதியின்" மன்னராம்
"அசுடசு" என்பவர்
அலெக்ஸாண்டரை எதிர்த்து
முப்பதுதினம் அவருடன்
மூர்க்கமாய்ப் போரிட்டு
மானத்துடன் போரிட்டு
மாண்டார் களத்தினில்!
பசரா – ஓரா முதலாம்
நகரங்கள் வீழ்ந்ததால்
சிந்து நதிவழியுள்ள
நுழைவாயில் திறந்தது!
பணிந்திட அழைத்ததைத்
துணிவுடன் மறுத்து
"போரஸ்" எனப்பெறும்
"புரு" மன்னர்தம்
பெரும் படையுடனே
எதிர்த்தார் களத்தினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்ஸாண்டரின் படையினை!
இயற்கையின் குழப்பத்தால்
தோற்றிட்ட "புருமன்னர்"
குற்றவாளியாய் நின்றார்-
அலெக்ஸாண்டரின் முன்னிலையில்!
"எவ்வாறு நடத்தப்படல் வேண்டும் -
என்றெதிர் பார்க்கிறீர்?" - எனப்
மன்னர்புருவைப் பார்த்தவர்
வினவினார் அலெக்ஸாண்டார்!
"அரசனைப் போல்எம்மை
நடத்திட வேண்டும்"-எனப்
புருமன்னர் உரைத்தார்!
மன்னனின் தன்மானம்
மன்னனின் மனத்துணிவு கண்டு
மனம்மிக மகிழ்ந்த
மகா அலெக்ஸாண்டர் -
புருவின் பகுதிக்கே - மீண்டும்
புருவை மன்னனாக்கி
மன்னன் புருவுடன்
நட்புப் பூண்டார்!
பீயாசுப் பகுதிகளையும்
பிடித்தார் எளிதினில்!
அப்பாற் தொடர்ந்திட
அவாவுற்ற வேளையில்
அவர்படை வீரர்கள் - அதற்கு
ஒருப்பட மறுத்ததால்
ஜீலம் நதிக்கே
மீண்டனர் அவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியினில் எதிர்த்த
மல்லர்களுடன் மற்றவர்களையும்
வென்றுயிர் தப்பினார்...
பெருத்த காயங்களுடன்!
படலா எனப்படும்
இடத்தினை அடைந்தவர்
தம்படை வீரரில்
ஒருபடைப் பிரிவினைக்
காந்தாரம் வழியாகத்
தாயகம் திரும்பிடத்
தந்தார் பணிப்புரை!
தனது தலைமையிலே
மறுபடைப் பிரிவுடன்
பலுசிசுதானம் வழியாகத்
தாயகம் நோக்கித்
தாகம் பொங்கிட
நடந்த அலெக்ஸாண்டர்
அடைந்தார் பாபிலோனை!
பார்வையைத் திருப்பினார் -
அரேபியா - கார்த்தேஜ்
இத்தாலி நாடுகள் மேல்!
இவற்றின்மேல் படையெடுக்கத்
திட்டங்கள் தீட்டியவர் -
பத்துநாள் காய்ச்சலால்
துன்புற்ற அலெக்ஸாண்டர் -
கிரேக்கப் பண்பாட்டால்
ஐரோப்பா - ஆசியாவை
இணைத்துவைக்க இவர்கண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதொரு கனவு
கருகியதொரு கனவாகிட -
போர்களிலே குவிந்திட்ட
வெற்றிகளின் பலனெதனையும்
அனுபவித்தறியா வீரனாகவே -
அதிஷ்டமில்லா வீரனாகவே - தம்
முப்பத்திரண்டாம் வயதில்
மூடினார்தம் வீர(வி)வழிகளினை!
ஆசையுடன் அவர்வளர்த்த
கிரேக்கப் பேரரசு
வளர்ந்த வேகத்திலும் பார்க்க
மிக விரைவாகவே
அஸ்தமனம் கண்டதந்தாம்-
அவரின் மறைவின்பின்!
மாபெரும் வீரனாம்
மாபெரும் மன்னனாம்
அலெக்ஸாண்டரின் உடலை
அலெக்ஸாண்டிரியாவுக்கு
எடுத்துச் சென்றங்கே
அடக்கம் செய்தனர் -
பொன்னினாலானதொரு
பேழையுள் வைத்தே -
வரலாற்றில் நிலைக்கும்படி!
வரலாறு நினைக்கும்படி!!

போர்வெறி கொண்டவர் -
போர் வெற்றி கண்டவர் -
போரினை வெறுத்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் வெற்றி வெறுத்தார்!!
அன்பினை வளர்த்தார்!!
அகிம்சையை வளர்த்தார்!!
கீர்த்திகள் மிக்கவர்
கிழக்கினில் உதித்தவர்!!
அம்மன்னர் எவரோ?
அவர்தான் மாமன்னர் அசோகர்!!
மௌரியப் பேரரசின்
மாமன்னர் அசோகர்!!

நாடுகளினூடவர்
நடந்தார் படையுடன்!
நாடுகள் பணிந்தன!
பீடுகள் பெருகின!
எதிர்த்தவர் ஒருசிலர்!!
எதிர்த்தவர் உருவிலர்!
தணியாப்போர் வெறியுடன்
குவிந்தபோர் வெற்றியுடன்
மீண்டார் தாயகம்!
மீண்டிடும் வழியினில்
காய்ச்சலால் வருந்தியவர்
கண்களை மூடினார்...
கிரேக்கத்தின் மாவீரர்!!
மேற்கின் பெருவீரர்!
அம்மாவீரர் யாரோ?
அவர்தான் மகா அலெக்ஸாண்டர்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்க் களங்களிலே**
**போராயுதங்களுடனே**
**விந்தைகள் நிகழ்த்திய**
**வீரர்கள் இருவரின் –**
**சிந்தைகள் வியந்திடும்**
**விந்தை முடிவுகள்!!**
**சமர்க்களங்களிலே**
**சண்டமாருதமாய்**
**நின்ற இவ்விருவீரர்கள்**
**எதைக்காணத் துடித்தனர்?**
**எதைக் கண்டு முடித்தனர்?**
**எனினும் – இவ்விருவீரரின்**
**வீரத்தை உலகம் மறக்காது!**
**வீரத்தை உலகம் மறுக்காது!!**

## கால அட்டவணை

| | |
|---|---|
| மாமன்னர் அசோகர் | - கி.மு. 273 - கி.மு 232 |
| மாமன்னர் பிந்துசாரர் இறப்பு | - கி.மு. 273 |
| மாமன்னர் அசோகர் (அரியணை கைப்பற்றல்) | - கி. மு 273 |
| மாமன்னர் அசோகர் ( முடிசூடியது) | - கி.மு 269 |
| மாமன்னர் பிந்துசாரர் | - கி.மு 301 - 273 |
| கலிங்கப் போர் | - கி. மு 261 |
| மகா அலெக்ஸாண்டர் பிறப்பு | - கி.மு. 356 |
| மகா அலெக்ஸாண்டர் இறப்பு | - கி.மு. 323 யூன் 13/16 |
| மகா அலெக்ஸாண்டர் மன்னனாக | - கி.மு. 336 - கி.மு. 323 |
| மன்னர் பிலிப்பு தந்தை கொலை | - கி.மு. 336 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் II மேற்கும்

**இளங்கோ அடிகள்**
**பாவலன் ஹோமர்**

மணிமுடி சூடி
மண்ணாளும் வாய்ப்பினை -
அரண்மனை வாழ்வை -
அன்றே துறந்தவர் ...
பாடிய பாடல்கள்
கிழக்கினில் இன்றவை
இல்லை - என்றுமவை
பைந்தமிழ்க் காவியம்!
பார்வையற்றவர் -
ஊர்தொறும் அலைந்தவர் -
பாடிய பாடல்கள்
மேற்கினில் இன்றவை
இன்றல்ல என்றுமவை
கிரேக்கரின் காவியம்!!

சேரநன்னாட்டின்
கோநகரானது -
வளம் மிகு நகராம்
வஞ்சிமாநகரம்!
பொன்முடி சூடிய
சேரலாதனனுக்குச்


noolaham.org | aavanaham.org


இளங்கோவடிகளார்

முதல் மகனாகச்
செங்குட்டுவன் –
இளையவனாக
இளங்கோ எனக்
குமாரர்கள் இருவர்!
அரசவைக் கொருநாள்
அரசதரிசனத்துக்காக
வந்தவோர் நிமித்திகன்
இளங்கோவைப் பார்த்து
"அரசாளும் இலட்சணம்
உன்முகத்துளது" என
மொழிந்திடக் கேட்டதும்
முன்னவன் செங்குட்டுவன்
"அரியணைக் குரியவன்
காத்திருக்க விட்டு
இளையவன் நான்
முடிசூடிக் கொள்வதா என"
விழிசிவந்திட எழுந்தான் –
இளவல் இளங்கோ!
உள்ளத் தெளிவுடன்
அரண்மனை வாழ்வை
அரசாளும் வாய்ப்பை
அன்றே துறந்தான் –
அரசவையில் நிமித்திகன்
உரைத்தவை அனைத்தும்
பொய்யா(க்)கும் வண்ணம்!
மெய்யா(க்)கா வண்ணம்!!
"இளங்கோ அடிகள் எனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமத்துடனே
குணவாயிற் கோட்டத்தில்
அமர்விடம் கொண்டான்!
இதனிடையே...
தந்தையின் பின்னால்
அரியணையமர்ந்த
செங்குட்டுவன் -
தன்தேவி வேண்மாள்
இளங்கோ அடிகள்
அமைச்சர்கள் எனப்பலர்
புடைசூழ்ந்திடவே
பெருவிருப்புடனே
மலைவளங்காணப்
ஒருநாள் புறப்பட்டவன் -
பேராற்றங் கரையினில்
தங்கிட நேர்ந்தது!
அவ்வேளையிலே -----
தங்கள் கண்களால்
தரிசித்த அதிசயத்தை
வேந்தனுக்குரைத்திட
வேட்கை மிக்க வேடர்கள்
காணிக்கைப் பொருட்களுடன்
வந்து பணிந்து
வணங்கி நின்றனர் -
குட்டுவன் திருமுன்னர்!
"மலை நாட்டினிலே
திருச்செங்குன்றிலே
வேங்கைமரத்தின் தண்நிழலிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுலை இழந்ததோர்
பத்தினிப் பெண்ணாள்
வந்து நின்றனள்!
அவ்வேளை அங்குற்ற
வானவர் – அவளிடம்
அவளது பதியினைக்
காண்பித்துக் கொண்டதும்
அவ்விருவரையும்
விமானமொன்றினிலே
விரைந்தழைத்தேகினர்!
விந்தை மிக்கதிதைக்
கண்களால் கண்டோம்!
கண்டதை உரைத்தோம்" என
வியந்து கூறியோர்
பணிந்து நின்றனர்!
வேடரின் கூற்றால்
வேட்கை மிகுந்திட
அரசன் தனது
அருகினில் இருந்த
சாத்தனார் முகத்தைச்
சற்றே பார்த்தான்!
அறிந்த அனைத்தையும்
விரித்தார் சாத்தனார்!
விளைவை அறிந்த
விரிவைத் தெளி(ரி)ந்த
இளங்கோ அடிகள்
"இம்மாகதையினை
யாமே பாடுவோம்" என


சிலம்புடைக்கும் கண்ணகி


noolaham.org | aavanaham.org

விருப்புடன் இயம்பவே –
மன்னன் செங்குட்டுவன்
“காதற் கோவலன்
கற்பின் கண்ணகி
இருவரும் இணைந்தனர்
சோழ நாட்டினில்!
இருவரும் பிரிந்தனர்
பாண்டிய நாட்டினில்!
வானகமடைந்தனர்
சேரநன்னாட்டினில்!
மூவேந்தர்களையும்
இணைத்திடும் சிறப்புள்ள
இப்பெருங்கதையினைப்
பாடும் திறனும்
பாடும் தகுதியும்
பெற்றவர் நீவிரே!
ஆதலால் – இஃதினைப்
பாடுவீர் நீவிரே” என
இளங்கோ அடிகளை
இறைஞ்சி நின்றான்!
புகார் – மதுரை
வஞ்சி என்றோதும்
காண்டம் மூன்றாய்
வகுத்த அடிகளார்
சிலம்பின் கதையைச்
சிந்தை அள்ளும்
“சிலப்பதிகாரம்” எனக்
காசினி போற்றவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியம் பாடினார்!
செந்தமிழன்னைக்கோர்
சிகாமணியானதே!

பழமை பெருமை
செழுமை மிக்கதாம்
காவிரிப்பூம் பட்டினத்தைச்
சோழ மண்டலத்தின்
கோநகராய்க் கொண்டு
செங்கோலியற்றினான்
சோழ மன்னனாம்
கரிகாற் சோழன்!
இப்பெரு நகரின்
முப்பெரு வணிகருள்
ஒருவன் "மாசாத்துவன்"!
கோவலன் –
அவனின் ஒரேமகன்!!
மற்றொரு வணிகன்
"மாநாய்கன்"!!
கண்ணகி –
அவனின் ஒரேமகள்!
அவ்விரு வணிகரும்
ஒருமனம் கொண்டதால்
கோவலன் – கண்ணகி
மணமக்களாகத்
திருமணம் கொ(க)ண்டனர்!
நல்லறமாயிவர்
இல்லறமியற்றினர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் சுழலவே
காலமும் கடந்தது!
இவர்களின் பாதையில்
அழகில் மிக்கவள்
ஆடற் கலையில்
அரும்புகழ் பெற்றவள்
மங்கை மாதவியின்
அதிசய அறிமுகம்!
ஆனால் – அதுவே
ஆபத்தின் ஆரம்பம்!
மெல்ல மெல்லக்
காலம் செல்லக்
கோவலன் கண்கள்
மாதவியின் மேல்
மயங்கத் தொடங்கின!
கால ஓட்டத்தில்
கண்ணீர்க் கடல் நடுவே
காதற் கண்ணகி
தன்னந் தனிமரம்!
கோவலன் வாழ்வு
காதற்களிப்பிலும்
கண்ணகி வாழ்வு
கண்ணீர்ப் பெருக்கிலுமாய்க்
காலம் கரைந்தது!
கதையும் புரண்டது!!
கானல்வரி பாடியதாலே
கோவலன் மாதவி
உறவினில் விரிசல்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவோ பிரிவினில்!!
இடையில் வந்த
இந்த உறவு
இடையில் முடிந்தது
விந்தை இல்லையே!
மாதவியாளிடம்
மயங்கிக் கிடந்தவன்
கண்கள் திறந்தன!
கோவலன் கால்கள்
கண்ணகி துணையைத்
தேடி விரைந்தன!
நாடி நகர்ந்தன!
கோவலன் கரங்கள்
வலிந்து சேர்ந்தன –
கண்ணகியாளின்
நலிந்த தோள்களை!
கண்ணகி விழிகளில்
இதுவரை பெருகிய
ஆத்திரக் கண்ணீர்
அக்கணம் முதலாக
ஆனந்தக் கண்ணீரானது!
சோழநாட்டினில்
வாழ்ந்த வாழ்க்கையினால்
சோர்வுற்ற கோவலன்
பழைய வாழ்வினை
மறக்க வேண்டியும்
புதிய வாழ்வினைத்
தொடக்க வேண்டியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரியப்படை கடந்த
நெடுஞ்செழியன்" ஆளும்
பாண்டிய நாட்டின்
வள(ர்) நகரான
தலைநகர் மதுரையில்
இல்லறம் புதுக்கினான் -
காதல் மனையாள்
கண்ணகியுடனே!
மாதவியிடத்தே
நிறைந்த கையுடன்
சென்ற கோவலன்
வரண்ட கையுடன்
மீண்டு வந்ததனால்
வாணிபம் செய்திட
வேண்டும் தனம்தேடக்
கண்ணகி தந்ததோர்
காற்சிலம்புடனே
மதுரை வீதியில்
நடந்தான் கோவலன்!
பொற்கொல்லன் ஒருவனின்
பொறியினில் வீழ்ந்தான்!
கொல்லன்தன் திருட்டினை
மறைத்திடத் துணிந்தவன் -
கரத்திலோர் சிலம்புடன்...
செழியனின் தேவியின்
காற்சிலம் பொன்றினைக்
கவர்ந்த வீண்பழியுடன்...
குற்றமொன்றுமிளையாத ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றதொன்றும் அறியாத...
குற்றமொன்றுமறியாத ...
கோவலனைத் திருடனாய்
நெடுஞ்செழியனிடத்துக்
கூட்டிச் சென்றவன்
"தேவியின் சிலம்பினைத்
திருடிய திருடனைக்
கொணர்ந்துள்ளேன் – மன்னா" –
எனக்கொல்லன் மொழியவே...
திருடன் எவனென்றும்
திருடன் கூறுவதென்னவென்றும்
அறிந்திட வி(றை)ளைந்திடா(த)
செழியன் மறுகணம்...
"கொன்று அச்சிலம்பினைக்
கொணர்க" எனப் பணித்தான்!
பணிப்பினை ஏற்றிட்ட
கொல்லனும் கொலைஞரும்
விளைவொன்றும் அறியாத
கோவலனைக் கொல்களம்நோக்கி
இட்டுச் சென்றனர்!
தம்மிட்டப்படியவர்
செழியனின் ஆணையை
நிறைவுறச் செய்தனர்!
தன்னுயிர்த் துணைவனின்
இன்னுயிரதனை
மன்னுயிர் காக்கும்
மன்னவன் செழியனின்
வளைந்த செங்கோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிக் கொண்டதை
ஆய்ச்சியர் வாய்வழி
அறிந்த கண்ணகி -
கனலென வெகுண்டாள்!
காற்றென விரைந்தவள்
செழியனின் அவைக்குள்
ஊழியத் தீயென
உத்தமி புகுந்தாள்!
உற்றது கேட்டாள்!
"உன்னுயிர் நாயகன்
என்னுயிர்த் தேவியின்
காற்சிலம்பதனைக்
கவர்ந்தான்" என்று
செழியன் பழித்தான்!
அவையோர் இளித்தனர்!
அவையின் நடுவேயவள்
கலைந்த கார்குழல்!
அலைந்த பூந்துகில்!!
கண்களிற் தீப்பிழம்பு!
கையிலோர் சிலம்பு!!
உலையென மூச்சு!
அலையென ஆர்ப்பு!!
"என்னுயிர்க் கணவரின்
கையில் இருந்தது
மணநாளில் சூட்டிய
மாணிக்கம் நிறைந்த
என்னிரு சிலம்பின்
ஒன்றென அறிந்துகொள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொன்று இதோ" என்று
அவையின் நிலத்திடை
அவையோர் திகைத்திடத்
தன்கையிலிருந்ததோர்
சிலம்பினைக் கண்ணகி
சினம்மிக எறிந்தாள்!
வெண்முத்தின் சிரிப்பினை
எதிர்பார்த்திருந்த
செழியனும் அவையும்
மாணிக்கச் சிரிப்பின்
கொடூரம் கண்டதும்
திகைப்பில் வீழ்ந்தனர்!
மலைப்பில் ஆழ்ந்தனர்!!
செழியன்தன் பிழையினை –
கொல்லன் கூறிய
பொய்நிறை உரையினை
மெய்யென நம்பிக்
குற்றமற்றதோர்
குடிமகன் உயிரினைக்
கவர்ந்திடப் பணித்த –
கழுவாய் இல்லாத –
கொடுஞ்செயல் எண்ணி
நொந்தான்!
வெந்தான்!!
"நானோ மன்னன்?" –
என்று நகைத்தான்!
"நானே கள்வன்" –
என்று கூவினான்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்திடை வீழ்ந்தான்!!
நிலவுல கிழந்தான்!!
ஆராய்வின்மையால்
அளித்த ஆணையால்
ஆருயிர் இழந்தான்!!
செழியனின் நிலைகண்ட
செழியனின் தேவியாம்
கோப்பெருந்தேவியும்
செழியனைத் தொடர்ந்தாள்!
விண்ணகம் அடைந்தாள்!
செழியனின் அநீதியைத்
தட்டிக்கேட்காத
சுட்டிக்காட்டாத
பழிசேர் மக்கள்
வதிந்த மதுரையைக்
நிறைபுகழ் செல்வியாம்
கண்ணகி சினந்தவளின்
கற்புக் கனலால்
பார்ப்பனர்
அறவோர்
பசுக்கள்
கற்புடைமகளிர்
முதியோர்
குழந்தைகள்
தவிர்ந்த ஏனையோர்
எரியுண்டிறந்தனர்!
மதுரை மாநகரைப்
பொசுக்கி அகன்றாள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யர் அழிந்தனர்!
"நீதியை எவர் கொல்லநினைத்தாலும்
நீதி அவரைக் கொல்லும்" –
எனுமுய(யி)ர் நீதியைக்
காலங்கள் தோறும்
காசினிக்குணர்த்திடும்
சிலம்பின் கதையே
சிலப்பதிகாரம்!!

கற்பின் செல்வியாம்
கண்ணகி – அன்றே
தன்னுயிர்த் துணையுடன்
விண்ணகம் புகுந்த
செய்தியை அறிந்ததும்
செல்வியின் வடிவினைக்
கல்லில் வடித்துப்
பூசித்து மகிழ்ந்திட
விழைந்ததன் தேவியின்
விருப்பினை விரைந்து
நிறைவு செய்திட –
நிறையுடை கல்லினை
இமயத்திலிருந்தே
இங்கு கொணர்ந்திடத்
தன்னுளம் கொண்டான்
மன்னன் செங்குட்டுவன்!
"வடதிசை மன்னர்கள்
வரைவிலாத் திறையுடன்
வந்தெனை விரைவினில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகுவீர்” என்றவன்
திசைகளனைத்திலும்
முரசறைவித்தான்!
வடதிசை மன்னர்கள்
திறைப்பொருள் சுமந்து
சேர மன்னன்தாள்
சேர்ந்து பணிந்தனர்!
விரைந்து பணிந்தனர்!
செங்குட்டுவனின்
செய்திகள் பற்றி
இழித்தும் பழித்தும்
தோள்வலி யற்றவனாய்ச்
சேரனைக் கருதிய
ஆரிய மன்னராம்
கனகனும் விசயனும்
திறையொடு வந்து
பணிந்திட மறுத்தனர்!
திமிருடன் இருந்தனர்!
தமிழனின் மிடுக்கை
உணர்த்திடத் துணிந்த –
இவர்களின் செருக்கை
அடக்கிடத் துணிந்த –
செங்குட்டு மன்னன்
இமயம் நோக்கி –
அவ்விரு மன்னரின்
ஆள்புலம் நோக்கிப் –
படையுடன் நடந்தான்!
தடையின்றி நடந்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைபலம் கண்டும்
பணிந்திட மறுத்தவர்
சேரனை எதிர்த்தனர்!!
பதினெட்டு நாழிகை
நீடித்தவிப் போரில்
புலியென்றறியாது
"பூனையென்றெண்ணிப் -
பொருதிடத் துணிந்த
முழு மூடர் நாம்" -
என்றுண்மை உணர்ந்த
என்றுள்ளம் தெளிந்த
கனகனும் விசயனும்
சேரனின் பதங்களைச்
சேவித்து நின்றனர்!
சேரனின் ஆணையைச்
சென்னிமேற் கொண்டனர்!
சேரன் விரைந்து
செயலில் இறங்கினான்!
செல்வியின் வடிவத்தைச்
செதுக்கிடற் கேற்றதாய்க்
கல்லினைத் தேர்ந்தான்-
இமயத்திலிருந்தே!
கனக - விசயனின்
தலைகளில் கல்லேற்றித்
தன்நகர் மீண்டான் -
செங்குட்டு மன்னன்!
கற்பின் செல்விக்குத்
தம்பி இளங்கோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சிலை வடித்தமை
போதாதென்றவன்
அண்ணன் குட்டுவன்
கற்சிலை வடித்தான்!
சிலையெடுத்திடுகின்ற
அப்பொன் நாளினை
முப்பெரு விழாவென
எடுத்திடத் துணிந்தான்!
நாற்றிசை மன்னரும்
நற்செய்தி அறிந்தனர்!
பெருவிழாக் காணவே
பெருவிருப்புடனவர்
சேர்ந்தனர் மன்னர்கள் -
சேர நன்னாட்டினில்!
கொடுங்கோளூரினில்
கற்பின் செல்விக்குச்
சிலையெடுத்திடுகின்ற
கலையெழில் பொலிந்த
திருவிழாக் கண்டு பின்னர்
தத்தம் நாடுகள்
திரும்பிய மன்னர்கள்
தத்தம் நாட்டிலும்
கற்பின் செல்விக்குக்
கற்சிலை வடித்தனர்!
ஆலயம் அமைத்ததில்
செல்வியைப் பூசிக்கும்
அற்புத முறையினை
அறிமுகம் செய்தனர்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனந்தம் பெற்றதோடு –
நலங்கள்
அனந்தம் பெற்றனர்!!
கற்பின் செல்விக்குக்
கற்சிலை எடுத்த
முப்பெரு விழாவிலே –
முதுகடல் நடுவிலே
முத்தெனத் திகழும்
இலங்கையை ஆண்ட
கஜபாகு மன்னனும்
கலந்து மகிழ்ந்து
தன்நகர் மீண்டதும்
தன்முதற் பணியெனக்
கற்புக்கரசிக்குக்
கலைத்திறன் மிக்கதோர்
கற்சிலை வடித்துக்
கண்ணகியம்மனைத்
தொழுதிடும் முறையினைத்
தொடக்கி வைத்தான்!
கற்பின் செல்வியின்
அருட்காட்சி உலகெல்லாம்!
கற்புக்கரசியின்
அருளாட்சி உளமெல்லாம்!
சிலம்பின் கதையில்
இளங்கோவின் அரியணை!
சிலம்பின் கவிதையில்
இளங்கோவின் உயர்நிலை!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தங்கள்
இலக்கிய வளர்ச்சிக்காய்
அன்றே அடிக்கல்
அமைத்தவன் என்று
மேற்குலகத்தவர்கள்
இன்றும் போற்றிடும்
பாவலன் ஹோமர்
பிறந்தது கிரேக்கத்தில் – ஆயினும்
சுமிர்னா நகரத்தார்
தம்நகர்ப் பிறந்தவன் –
உரோட்சு நகரத்தவர்
தம்நகரில் பிறந்தவன் –
கொலோபன் நகருள்ளோர்
தமது நகரில் ஜனித்தவன் –
சாலாமிசு நகரிலுள்ளோர்
தங்கள் நகரில் பிறந்தவன் –
சியோசு நகரத்தோர்
தம்நகரிலே ஜனித்தவன் –
ஆர்காசு நகரில்தான்
தோற்றம் பெற்றவன் –
ஏதென்சு நகரத்திலேயே
தோற்றம் பெற்றவன் –
என்று ஒவ்வொரு
நகரத்துள் ளோரும்
அவனது பிறப்பில்
உரிமை கொண்டாடிப்
பெருமை பாராட்டும்
பாவலன் ஹோமர் –



பாவலர் ஹோமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை யற்றவன்!
உரிமை கொண்டாடிய
உறவொன்று மற்றவன்!!
ஊர்தொறும் ஹோமர்
உலாவரும் வேளையில்
தன்னுள்ளப் பரப்பினில்
தளிர்விடும் உணர்வினைப்
பாக்களாய் வடித்தான் –
படிப்பவர் வியக்கவே!
கவிதையாய் வடித்தான்
கற்பவர் நயக்கவே!
பாடலாப் படைத்தான்
பாருளோர் போற்றவே!!
“கிரேக்கத்தின் கல்வி
கலை பண்பாடு
இலக்கியம்” எனப்பல
மண்மேல் நின்று
வென்று செழித்திடக்
கா(வ)லாக அமைந்தவை
பாவலன் ஹோமரின்
பாக்களே” என்றின்றும்
சாற்றிடும் கிரேக்கர்
போற்றி செய்கின்றார்!
கிரேக்கத்தின் பண்பு
நாகரிகத்துடனே
சாகசம் பலவும்
நிறைந்தவையாகப்
பாவலன் ஹோமர்



இளவரசன் பாரிஸ் - இளவரசி ஹெலன் மற்றும்
பாவலன் ஹோமர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினார் காவியம்!
ஒன்று "இலியட்"!
இன்னொன்று " ஒடெஸ்ஸி"!!
இலியட் காவியம்
இயம்புவ தென்னவோ?
இம்மாபெரும் கவிஞன்
இயற்கையோடு
இணைந்து கொண்டது
ஜரிசுத்தீவிலேயே!

"பிரையம்" என்பவனே
"ட்ராய்" நாட்டினை
அரசாண்டு வந்தான்!
அவன் மகன் "பாரிஸ்" –
"இசுபார்ட்டா" நாட்டின்
மன்னனின் அதிதியாய்ச்
சென்றங்கு சிலகாலம்
தங்கி இருந்தவன்
இன்பத்தில் மிதந்தான்!
இசுபார்ட்டா மன்னனாம்
மெனிலாசு என்பானின்
பேரெழில் மிக்குடை
இராணியாம் ஹெலனைத்
தான்நாடு மீள்கையில்
தன்நாடு மீள்கையில்
கவர்ந்து கொண்டு மீண்டான் –
இளவரசன் பாரிஸ்!
கிரேக்கர் தாம்போற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரெழில் இராணியாம்
ஹெலனைப் – பாரிஸ்
கவர்ந்திட்ட செய்தியை
அறிந்ததும் கிரேக்கர்
வெகுண்டு கிளர்ந்தனர்!
சினந்து எழுந்தனர்!
அரசியை மீட்டிட
அணிகளாய்த் திரண்டனர்!
போர்க்கலங்களேந்திய
போர்வீரருடனே
கப்பல்கள் ஆயிரம்
கடலில் விரைந்தன!
கப்பல்களில் விரைந்தனர்!
ட்ராய் நகரத்தையவை
முற்றுகையிட்டனர்!
ட்ராய் நகரத்தினையவர்
முற்றுகையிட்டபின்
ஆண்டுகள் பத்து
கழிந்தனவாயினும் –
பெரும்போர் பலவும்
நிகழ்ந்தனவாயினும் –
ட்ராய் நகரத்தினைக்
கைப்பற்றிடவோ –
அழகியாம் ஹெலனை
மீட்டெடுத்திடவோ –
முடிந்திடவில்லை –
கிரேக்கப் படைகளால்!
நேரடி மோதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாததனைச்
சூழ்ச்சியால் ட்ராயினை
வீழ்த்திடத் துணிந்தனர்!
பெரிய மரத்தினை
வெட்டி எடுத்ததில்
பெரியதோர் குதிரையைக்
கிரேக்கர் செய்தனர்!!
அம்மரக் குதிரையின்
வயிற்றின் உள்ளே
பெருந்தொகைப் படையினர்
பதுங்கி இருக்கும்படி
ஒழுங்குகள் செய்தனர் –
எவரும் அறியாதவண்ணம்!!
பெருமரக் குதிரை
இழுத்துப் போய்க் கிரேக்கர்
போர்க்களத்தினிலே
நிறுத்தி வைத்தனர்!!
போரில் தோற்றவர்
ஓடுவார் போலக்
குதிரையைக் கைவிட்டு
ஓடினர் கிரேக்கர்!!
கிரேக்கர் தோற்றோடும்
காட்சியைக் கண்டதும்
ட்ராய் நகர் மக்கள்
துள்ளிக் குதித்தனர் –
வெற்றிக் களிப்பினில்!
களத்தினில் நின்ற
பெருமரக் குதிரையை –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுள் மனிதர்கள்
இருப்பதை அறியாது –
இருப்பவர் தங்களின்
பகைப்படை வீரர்கள்
எனுமுண்மை அறியாது –
கிரேக்கரின் உபாயத்தின்
அபாயத்தை உணராது –
குதிரையால் தமக்கெல்லாம்
அழிவென்பதறியாது –
வானத்தைத் தொட்டிடும்
கோஷங்களுடனந்தப்
பெருமரக் குதிரையை
ட்ராய் நகர் மக்கள்
அனைவரும் திரண்டு
இழுத்துச் சென்றதை
நகரத்தின் மத்தியில்
நிறுத்தி வைத்தனர்!
போர் வெற்றிச் சின்னமாய்ப்
போற்றி மகிழ்ந்தனர்!
காரிருள் சூழ்ந்ததும்
தம்மில்லத் துறங்கினர்!
நடுநிசி சூழ்ந்ததோ?
கொடுவிதி சூழ்ந்ததோ?
குதிரையின் வயிற்றினுள்
குடிகொண்ட வீரர்கள்
புற்றீசல் போலவே
புறப்பட்டு வெளிவந்தனர்!
உறங்கிய மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைக் குடித்தனர்!
ட்ராய் நகர் மன்னனின்
உயிரையும் முடித்தனர்!
ட்ராய் நகரத்தினையவர்
தீயிட்டுப் பொசுக்கினர்!
பேரெழில் இராணியாம்
ஹெலனையும் மீட்டனர்!
வெற்றிக் களிப்புடன்
சேர்ந்தனர் கிரேகத்தை!
பெருவெற்றி தந்தவிப்
பெரும்போர் நிகழ்வினைப்
பல்சுவைப் பாக்களால்
பாடினான் ஹோமர்!
காசினி போற்றிடும்
காவியம் "இலியட்" –!!

அடுத்தது "ஒடெஸ்ஸி"!
அறைவது என்னவோ?
போரினில் ட்ராய் நகர்
வீழ்ச்சியுற்றதன் பின்
அப்பெரும் போரில்
பங்கேற்ற வீரனாம்
"ஒடிசசு" என்பவன்
ஆண்டுகள் பத்தாக
அங்குமிங்குமாய்
அலைந்து திரிந்த
செய்திகள் பற்றி –
சொந்த நாட்டுக்கவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளும் வழிகளில்
வீரன் நிகழ்த்திய
வீரச்செயல்கள் பற்றி -
விரிப்பதே "ஒடெஸ்ஸி"!!

தனதன்பன் ஒடிசசுவை
சூழ்ச்சியினாலே
மிகத் தொலைவினிலே
இருக்குமோர் தீவிலே
வளதேவதையான
"காலிப்சோ" என்பவள்
சிறைவைத்துள்ளதையும் -
"ட்ராய் நகர்ப் போரில்
பங்கேற்கும் பொருட்டு
இதாகாவில் உள்ள
தன்னில்லம் விட்டு
"ஒடிசசு" சென்றபின்
அங்கு குழுமிய
நீசர்கள் நிகழ்த்திய
நிகழ்வுகள் அனைத்தையும் -
கடவுளரின் ஆலோசனைக்கான
குழுவின் கூட்டத்தினிலே
"செயசு"க் கடவுளிடம் -
வீரன் ஒடிசசுவின்
காவற்தெய்வமாம்
"அதீனா" என்பவள்
முறையிட்டுக் கொண்டாள் -
தனதன்பன் துயர்நீக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளை –
"ஒடிசசுவின்" மனைவியாம்
"பெனிலாபு" என்பவளுக்கு
அவள் வசித்திருக்கும்
"இதாகா" ஊரில் –
அவளை அடைந்திட
விரும்பிய சிலபேர்
அவளுக்குப் பற்பல
இன்னல் விளைப்பதாய் –
அவளுடையபொருட்களை
அபகரித் தெடுப்பதாய் –
செயசுக் கடவுளிடம்
முறையீடு செய்தாள் –
ஒடிசசு குடும்பத்தின்
காவற் தெய்வமாம்
அதீனா தொடர்ந்தும் –
அநீதியைத் தடுக்கவே!
ஆர்வமாய் அனைத்தையும்
அறிந்து கொண்டதும்
செயசுக் கடவுள்
செயலினில் இறங்கினார்!
நீதியை நிலைநாட்ட
ஆணையிட்டதுடன்
அதற்கு வேண்டிய
அனைத்துரிமைகளையும்
அதீனாவுக்கு வழங்கினார் –
செயசுக் கடவுள்!
அதீனாவும் உடனேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் மிக்க
நம்பிக்கைக்குரிய
அறிவுரையாளராய்
மறுவேடம் கொண்டாள்!
ஒடிசசுவின் ஊராம்
இதாகாவுக்கு விரைந்தாள்!
இன்னல்கள் விளைப்போர்
சூழ்ந்து நின்றிடும்
அவனது மாளிகையை
அடைந்தாள் அதீனா -
அன்பனைக் காத்திட!
ஒடிசசுவின் மகனாம்
"தெலிமாகசு" வுக்கு
ஆனைத்தையும் விளக்கி
அறிவுரை தந்தாள்!
அதன்படி நடந்தது
மக்கள்சபைக் கூட்டம்!
அதீனா வழங்கிய
ஆலோசனைப்படியே
மகன் தெலிமாகசு
புறப்பட்டான் தன்
தந்தையைத் தேடியே!
மீண்டும் தெலிமாகசு
ஊர்மீளும் வரையும்
இன்னல் விளைப்போர்
இதாகாவில் எந்தவிடத்திலும்
இருந்தலாகாது எனப்
பொது மக்கள் சபையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையிட்டது!
அதீனாவின் உதவியைப்
பிறர் அறியா வண்ணம்
பெற்ற தெலிமாகசு
இடுக்கண் பலவற்றை
எதிர்கொண்டு நின்றவன்
அன்னையாம் பெனிலாபு
அறிந்திடா வண்ணம்
கப்பலொன்றினிலே
பயணத்தைத் தொடர்ந்தான் –
தந்தையைத் தேடிடும்
தலையாய பணியில்!
மறு வேடத்தினிலே
அவனுடன் அதீனாவும்
பயணத்தில் இணைந்தாள்!
"பைலசு" துறைமுகத்தை
அவனது கப்பல்
அடைந்த வேளையில்
"ட்ராய் நகரில்" நடந்த
போர்களைப் பற்றியும் –
அதிற் பங்கேற்ற
வீரர்கள் அனைவரும்
மீண்டது பற்றியும் –
வீரர்கள் நிகழ்த்திய
வீரச் செயல்கள் பற்றியும் –
பேரெழில் அரசியாம்
ஹெலனைப் பற்றியும் –
அறிந்து கொண்டான் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையைத் தேடிப்
புறப்பட்ட தெலிமாகசு!!
அவன்சென்ற இடமெல்லாம்
அன்புடன் மக்கள்
வரவேற்பளித்தனர் – அவனுக்கு!
பரிசுப் பொருட்களும்
அவனுக் களித்து
அன்பைப் பொழிந்தனர்!
அவ்வேளையிலே –
இதாகாவில் இருக்கும்
அவனின் அன்னையாம்
பெனிலாபு–
தன்னன்பு மகனைக்
காணாமையினாலே
கடுந்துயர் கொண்டாள்!
அவள் துயர் அறிந்த
தேவதை அதீனா
அன்னை பெனிலாபுக்கு
நற்கனவு ஒன்றினால்
மனதுக்கு ஆறுதல்
அளித்தாள் விரைந்து!
அவ்வேளையிலே
அன்னை பெனிலாபுவை
அடைந்திட விரும்பி
இன்னல் விளைத்த
சிலபேர் வெகுண்டு
ஒன்றாய் இணைந்து
மகன் தெலிமாகசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னூர் இதாகாவுக்குத்
திரும்பும் வேளையில்
தடுத்து நிறுத்தவும்
இடை மறித்தவனுக்கு
இடர்கள் விளைக்கவும் –
தீட்டிய திட்டம்
தகர்ந்து போனது!
இப்படிப் பற்பல
சோதனை – வேதனை
அவர்களை வாட்டின!
கடவுளர் கருணையால்
அனைத்தையும் வென்றனர்!
பிரிந்தவர் மீண்டும்
இணைந்து கொண்டனர்!
இன்னல் விளைவித்தோர்
தண்டனை பெற்றனர்!!
திரைமறைவினிலே
இருந்து கொண்டு
காவல் தெய்வமாம்
அதீனா – நாட்டினில்
நீதிகள் நிலைகொள்ள –
பீதியைப் புறந்தள்ள –
அயராது உழைத்தாள்!
அன்பரைக் காத்தாள்!!
வியக்கும் வண்ணம்
விரிக்கும் கதையிதே
பாவலன் ஹோமரின்
காவியம் "ஒடெஸ்ஸி"–!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரச குலத்தவன்**
**துறவினை ஏற்றவன்**
**இளங்கோ அடிகள் -**
**குடிமக்களான**
**கோவலன் - கண்ணகி**
**வாழ்வின் கதையைக்**
**காவியமாக்கினான்**
**கிழக்கினில் - அன்று!**
**குடிமகனொருவன்**
**நாடோடி - அந்தகன்**
**பாவலன் ஹோமர்**
**மன்னர் குலத்தினில்**
**நிகழ்ந்தவையனைத்தையும்**
**காவியமாக்கினான்**
**மேற்கினில் - அன்று!!**

## கால அட்டவணை

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்- கி. பி 42 - 100
(58 ஆண்டு ஆட்சி)
"கடல் பிறக் கோட்டிய" செங்குட்டுவன் - கி. பி 80 - 155
(55 ஆண்டுகள் ஆட்சி, 75ஆண்டுகள் வாழ்க்கை)
இளங்கோ அடிகள் - கி .பி 85 - 160
"ஆரியப்படை கடந்த" நெடுஞ்செழியன் - கி .பி 119 - 144
கஜபாகு மன்னன் - கி .பி 148 - 170
பாவலன் ஹோமர் - கி.மு 08ஆம் நூற்றாண்டு
இரண்டாம் கரிகாலன் - கி .மு 50 - கி .பி 37
கண்ணகி கோவில் - கி .பி 149
(அமைப்பாண்டும் இடமும் - கொடுங்கோளூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபாண்டிய கட்டபொம்மன்
## மாவீரன் நெப்போலியன்

"அடுத்தவர் ஆட்சி ஏற்கோம்!
அடிமையாய் வாழோம்" என்று
கடுஞ்சமர் செய்த வீரன்
தெருவினில் மாண்டான் கிழக்கே
அயலுள்ள நாட்டையெல்லாம்
அடிமையாய்க் கொண்டு ஆள
அயர்வின்றி உழைத்த வீரன்
சிறையினில் மாண்டான் மேற்கே!
வீரத்தின் தன்மை இரண்டாய்
வேறுபட் டிருக்கக் காண்பீர்!
வீரத்தின் முடிவும் இங்கே
கூறுபட் டிருக்கக் காண்பீர்!

கொள்ளரும் வீரம் ஓங்கி
விளைகின்ற திருநெல் வேலி
கொள்ளுமோர் குறிச்சி பாஞ்சைப்
பதியினைக் கட்டப் பொம்மு
வெல்லரும் பாண்டி மன்னன்
மணிமுடி தாங்கி ஆண்டான்!
சொல்லரும் வீரம் நேர்மை
நீதியோ டாட்சி செய்தான்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வீரபாண்டியன்

பிறந்தமண் மேலே காதல்
கொண்டதால் கட்டப் பொம்மு
பிறந்தமண் மேலே மாற்றார்
தீண்டவே சசிக்கா வீரன்!
வெல்லரும் பாஞ்சைநாட்டை
வென்றிட எண்ணங் கொண்டு
வெள்ளையர் பாஞ்சை மண்மேல்
பலமுறை மோதித் தோற்றார்!
“என்னல மிழந்த போதும்
என்னர சிழந்த போதும்
என்னுயிர் இழந்த போதும்
என்னுயிர் நாட்டைக் காப்பேன்!
வெள்ளையர் எனது நாட்டை
ஆளநான் பொறுக்கேன்” என்று
வெள்ளையர் செயலை யெல்லாம்
வெள்ளையர் பணிப்பை யெல்லாம்
வெள்ளையர் மலைக்கும் வண்ணம்
துணிவுடன் எதிர்த்து நின்று
வெள்ளையர் களைக்கும் வண்ணம்
களத்திலும் மோதி நின்றான்!
வெள்ளையர் முடிவில் ஓர்நாள்
பாஞ்சையைச் சூழ்ந்து கொண்டார்!
வெள்ளையர் திகைக்கும் வண்ணம்
பாண்டியன் எதிர்த்து நின்றான்!
முழங்கிடும் பீரங்கி முன்பும்
தீகக்கும் துவக்கின் முன்பும்
வழங்குமோ நீண்ட நாட்கள்
வேலுடன் வில்லும் வாளும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தண்டிக்கும் வெள்ளையரும் தண்டணை பெறும் மன்னரும்

பொம்முவின் படைகள் தலைவன்
வெள்ளையத் தேவன் என்பவனை
வெள்ளையர் சுட்டுக் கொன்றார்!
ஆயினும் தளரா மன்னன்
வெள்ளையர்க் கெதிராயுள்ள
தன்நண்பர் உதவி சேர்த்து
வெள்ளையர் மீது மீண்டும்
மூர்க்கமாய்ப் பொருதும் வண்ணம்
வெள்ளையர் அறியா வண்ணம்
பாஞ்சையை விட்டுச் சென்று
வெள்ளையர்க் குதவி நின்ற
புதுக்கோட்டை மன்ன னிட்ட
வஞ்சக வலையைச் சற்றும்
அறிந்திடாப் பொம்மு மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வஞ்சனை வலையில் வீழ்ந்து
வெள்ளையர் கரத்தைச் சேர்ந்தான்!
பிறந்தமண் காக்கும் போரில்
தோற்றிடாப் பொம்மு: ஒன்றாய்ப்
பிறந்தவன் விரித்த வஞ்ச
வலையினில் வீழக் கண்டு
பிறந்தமண் மீதிற் பற்றுக்
கொண்டவர் உள்ளம் வெந்தார்!
பிறந்தமண் மீதிற் பற்றைக்
கொன்றவர் மகிழ்ந்து நின்றார்!
கயவர்கைச் சிக்கிக் கொண்ட
மன்னனை வெள்ளைக் காரர்
விசாரணை செய்வார் போல்
பாசாங்கு செய்து ஈற்றில்
மன்னன்மேல் குற்றம் சாட்டி
மன்னனின் பிழைகட் கெல்லாம்
"மரணமே" தண்டனை யென்றும்
மன்னிப்புக் கிடமில்லை யென்றும்
கயத்தாற்றுத் தெருவில் நின்றபுளிய
மரத்தினிற் தூக்கிக் கொன்றார்!
பிறந்தமண் மேலே பற்றுக்
கொண்டோனின் உயிரைக் கொன்றார் - ஆனால்
பிறந்தமண் மேலுள்ள பற்றைக்
கொன்றிட முடிந்த தாமோ?
அன்றவன் விதைத்த பற்றுப்
பின்னாளில் செழித்து ஓங்கி
வளர்ந்ததைக் கண்டு கொண்டோம் - அதனால்
விளைவையும் கண்டு வியந்தோம்!!




பாண்டிய மன்னனைக்
கௌரவிக்கும் பொருட்டு
வெளியிடப்பட்ட
முத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனதன்னை நாட்டின் ஆட்சி
உலகெலாம் நிலைக்கும் வண்ணம்
தனதன்னை நாட்டை மாற்றார்
தலைகுனிந் தேற்கும் வண்ணம்
தன்திரு நாட்டின் ஆட்சித்
தலைமையை வலிந்து ஏற்றுத்
தன்திரு நாட்டின் வாழ்வைத்
தன்னுயிர் மூச்சாய்க் கொண்டு
தன்புய வலிமை காட்டித்
தன்படை வலியைக் கூட்டித்
தன்னயல் அரசை யெல்லாம்
தன்பலம் கொண்டு வீழ்த்தித்
தாய்த்திரு நாடாம் பிரான்ஸின்
தன்னிக ரில்லாத் தலைவன்
தானென்று முரசம் கொட்டித்
தரணியே நடுங்கும் வண்ணம்
தாயகம் பிரான்ஸை ஆண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரன் நெப்போ லியனே!

தாய்த்திரு நாட்டின் கீர்த்தி
பெருக்கிடும் போரி லெல்லாம்
வாய்த்தநல் வெற்றி கண்டு
போர்வெறி கொண்ட வீரன்
பிரிட்டனைத் தாக்கி வெற்றி
கொண்டிட முனைந்து சென்றான்!
பிரிட்டனோ தனது கப்பற்
படையினா லிவனை வென்றார்!
ருஷ்ய நாட்டின் மேற்தன்
படையினை நடத்திச் சென்றான்!
ருஷ்யா நாட்டி யற்கை
பகைத்ததாற் போரிற் தோற்றுப்
பிரான்ஸினை நோக்கி வந்த
நெப்போ லியனின் படையைப்
பிரான்ஸினுக் கெதிராம் மூன்று
நாடுகள் அணி திரண்டு
துணிவுடன் "லீப்சிக்" கென்னும்
களத்தினில் எதிர்த்த போது
துணிவுடன் படையைச் சேர்த்து
மோதியபோதும் பிரான்சு அந்தப்
போரினிற் தோற்கக் கண்டு
எதிரிகள் நெப்போ லியனைப்
போர்க்கைதி யாக்கி "எல்பாத்" –
தீவுக்கு அனுப்பி விட்டார்!
ஆயினும் வலிமை மிக்கோன்
சிறையினி லிருந்து தப்பித்
தாயினும் உயர்ந்த நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையை மீண்டும் நாட்டப்
பிரான்சுக்கு விரைந்தோடி வந்து
மீண்டும்தன் படையைச் சேர்த்தான்!
பிரான்ஸினிச் செயலைக் கண்டு
பிரான்ஸினுக் கெதிராம் நாலு
நாட்டினர் அணி திரண்டு
பெரும்படை யுடனே பிரான்ஸை
"வாட்டர்லூ" களத்தில் வென்று
வீரன்நெப்போ லியனை மீண்டும்
சிறைப்பிடித் தவனை "சென்ஹெலினாத்"
தீவுக்கு அனுப்பி வைத்தார்!
ஈடில்லா உயர்ந்த வீரன்
நெப்போலியன் "ஹெலினா" என்னும்
தீவினில் உள்ள கொடிய
சிறையினில் ஆறு ஆண்டு
சொல்லரும் துயரில் உழன்று
ஈற்றினில் உலகை நீத்தார்!
"பிறந்தமண் உரிமை காக்க
வெள்ளைய ருடனே மோதப்
பிறந்தவன் இவனே" என்று
துதித்திடக் கிழக்கிற் கண்டோம்!
பிறந்தமண் பெருமை நாட்டப்
புறப்பட்டுக் களங்கள் வென்று
சிறந்தவன் சிறையில் நொந்து
இறந்திட மேற்கினில் கண்டோம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரன் நெப்போலியன்

**கால அட்டவணை**

| | |
|---|---|
| **கட்டபொம்மு மன்னன்** | **- 1790** |
| கைதுசெய்யப்பட்டது | - 1799.10.16 |
| தூக்கிலிடப்பட்டது | - 1799.10.17 |
| | |
| **நெப்போலியன்** | **- 1769 - 1821** |
| திருமணம் | - 1796.03.09 |
| | |
| லீப்ஸிக் போரில் தோல்வியும் எல்பாத் தீவுக்குக் கைதியாகக் கடத்தப்பட்டதும் | - 1813.10.16 - 19 |
| | |
| எல்பாத் தீவிலிருந்து தப்பியோடி வந்தது | - 1815 |
| | |
| வோட்டர்லூப் போரில் தோல்வியும் சென் ஹெலினாத் தீவுக்குக் கைதியாகக் கடத்தப்பட்டதும் | - 1815.06.18 |
| | |
| சென்.ஹெலினாத் தீவில் சிறையில் மரணம் | - 1821 |

( ஈழநாடு - 13.05.1990 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 13 மேற்கும்

## குழந்தைக் கண்ணன்
## குழந்தை யேசு

"குழந்தையால் அழிவு" என்றோர்
அசரீரி கூறக் கேட்டுக்
குழந்தைகள் இனிய வாழ்வைக்
குடித்தவர் கதையைக் கேட்பீர்!
கிழக்கிலே வாழ்ந்த கம்சன்
குழந்தையைக் கொல்லச் சொன்னான்!!
மேற்கிலே வாழ்ந்த ஏரோது
குழந்தையை வதைக்கச் சொன்னான்!
சிறுமதி படைத்தோர் நெஞ்சைக்
குடையவே துடிப்பீர்!உண்மை!!
குறுமதி படைத்த இரண்டு
கல்நெஞ்சர் கதையைக் கேட்பீர்!!

தன்தங்கை வயிற்று தித்த
குழந்தையாம் கண்ணன் – பின்னால்
தன்னுயிர்க் கின்னல் செய்வான் –
என்றதால் மாமன் கம்சன் –
கண்ணனால்தான் முடிவு என்னும்
உண்மையைத் தடுக்கக் கம்சன் –
காலத்தின் தீர்ப்பை மாற்றி
அமைத்திடத் துணிந்த கம்சன் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுயிர் நிலைக்க வேண்டித்
தானாளும் நாட்டி லுள்ள
பன்னூறு மழலைகள் வாழ்வைக்
(மு)குடித்திட ஆணை யிட்டான்!
கம்சனின் ஆணை கேட்டுக்
கண்ணனைப் பெற்றெ டுத்தோர்
கண்ணனைக் காக்கும் மார்க்கம்
எவ்விதம் என்று ஆய்ந்தார்!
கண்ணனின் இருப்பி டத்தை
மாற்றலே தக்க தென்று
கண்ணனின் வாழ் விடத்தைக்
கடிதினில் மாற்றிக் கொண்டார்!
இன்னுயிர்க் குழந்தை கண்ணன்
தன்னுயிர் காத்துக் கொண்டான்!!
தன்தங்கை குழந்தை கையால்
பின்னுயிர் இழந்தான் கம்சன்!
தன்னுயிர் காக்க வேண்டிக்
குழந்தைகள் உயிரைக் கொன்று
என்றுமே மாறாப் பழியையும்
ஏற்றனன் கொடிய கம்சன்!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாடுறை தொழுவ மொன்றில்

மார்கழிக் குளிரும் வாட்ட

மானிடர் வாழ்வைக் காக்க

உதித்தனர் குழந்தை யேசு!

“மண்ணிலே உதித்த யேசு

மண்ணிலே மக்கள் போற்றும்

மன்னனாய்த் திகழ்வார்” என்று

அறிந்ததால் ஏரோது மன்னன்

குழந்தையைக் கொல்ல எண்ணி

“இருவயதுக் குள்ளே யுள்ள – அனைத்துக்

குழந்தைகள் உயிரைக் கொள்(ல்)வீர்!

அவர்களோ டந்த யேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலனும் அழிந்து போவான்" –
என்றெண்ணி ஆணை யிட்டான்!
பாலகர் உயிரைக் கொல்லும்
பாவியர் செயலைக் கண்டு
குழந்தையின் பெற்றோர் நொந்து
குழந்தையைக் காக்க வேண்டிக்
குழந்தையை மறைத்துக் கொண்டு
காரிருள் சூழ்ந்த வேளை
பாவியின் நாட்டை விட்டு
அயல்நாடு சென்று சேர்ந்தார்!
பாரினைக் காக்க வந்த யேசு
பாலனைக் காத்துக் கொண்டார்!!
பாலகர் உயிரைக் கொண்ட
பாவியாம் ஏரோது மன்னன்
பாவத்தின் பயனாய் விரைவில்
சாவினை அணைத்துக் கொண்டான்!
"குழந்தையா?எங்கே?" என்று
ஏங்குமிப் பூமி தன்னில் –
"குழந்தையே செல்வம்" என்று
ஏத்துமிப் பூமி தன்னில் –
குழந்தையைத் தெய்வமாகப்
போற்றுமிக் குவலயத்தில் –
குழந்தையாய்த் தெய்வம் மண்ணில்
உதித்ததை அறியா மூடர்
"குழந்தையால் தொல்லை" என்ற
அச்சத்தால் நாட்டில் வாழ்ந்த
குழந்தைகள் வாழ்வைக் கொன்றார்!
மறைந்திடாப் பழியைப் பெற்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை வதைக்க ஆணை
இட்டவன் கிழக்கில் – கம்சன்!
குழந்தையை வதைக்க ஆணை
இட்டவன் மேற்கில் – ஏரோது!!



ஏரோது மன்னன்

**கால அட்டவணை**

ஏரோது மன்னன் - கி .மு 37 - கி .பி 04 வரை

( ஈழநாடு - 20.05.1990 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தாஜ்மஹால் பிரமிட்ஸ்

மண்ணை வளர்க்கும் நதியோரம்
மண்ணை மறந்தவர் நினைவாக
மண்மேல் அமைத்த கட்டிடங்கள்
கண்ணை மயக்கும் அமைப்பாக
மண்ணே வியக்கும் அமைப்பாக
மண்மேல் கிழக்கில் ஒன்றினையும்
மண்மிசை மேற்கில் பிறிதொன்றையும்
மண்ணினில் இன்றும் காண்பீரே!!

சமூகக் கதைகளும் புராணக் கதைகளும்
மன்னர் கதைகளும் மனுநீதிக் கதைகளும்
பல்லா யிரமாகப் பற்றிப் படர்ந்துள்ள
யமுனை நதியின் தென்கரையோரத்தில்
அக்ரா நகரினைத் தலைநக ராய்க் கொண்டு
அரசியற்றி வந்தான் மன்னன் ஜகாங்கீர்!
மொகலாய வம்சத்தைச் சேர்ந்தஇம் மன்னனின்
மகனாக லாகூரில் உதித்தான் ஷாஜஹான்!
அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து நின்ற – ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியலில் ஆர்வமின்றி விலகியே நின்ற -
இளவரசன் ஷாஜஹான் தன்னுயிர்த் துணையாக
இணையில்லா அழகிலும் அறிவிலும் உயர்ந்த
"அருசுமத்து பானுபேகம்" எனும்பெயர் கொண்ட
"மும்தாஜ் மஹால்" என்பவளை மணந்தான்!
"மும்தாஜ் மஹால்" என்னும் பெயருக்கு
"அரண்மனை அணிகலன்" என்பதே அர்த்தமாம்!
அழகியுடன் இல்லறம் நடத்திய வேளையில்
தந்தையின் மரணம் ஷாஜஹான் தலையினில்
மணிமுடி சூட்டிட அரியணை அமர்ந்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் – மும்தாஜ் இல்லற வாழ்க்கையில்
இன்பமும் துன்பமும் சுகமும் துக்கமும்
இணைந்து வந்த வேளையி லெல்லாம்
மும்தாஜ் அவனுடன் இணைந்தே இருந்தாள்!
வேண்டும் பொழுதெலாம் அறிவுரை வழங்கி
பேரழகியாம் மும்தாஜ் நிழலாக நின்றாள்!
இவர்களின் இல்லறம் – அரசு வாழ்க்கை
இனிதே நிகழ்ந்திடக் காலம் கரைந்தது!
பதினாலாவது மகப்பேற்றின் போதினில் அழகிதன்
பத்தொன்பதா மாண்டு மணவாழ்க்கையின்போதினில்
மண்ணை மறந்தவள் கண்களை மூடினாள்!
மன்னனின் துயரத்தை விரித்திட லியாது!
"பர்காம்பூர்" எனுமிடத்தில் மும்தாஜ் உடலினை
அடக்கம் செய்தவன் – தன்காதற் துணைவியைக்
காலம் காலமாய் நினைத்திடும் வண்ணம்
ஞாலம் உள்ளவரை நிலைத்திடும் வண்ணம்
நினைவுச் சின்னமொன் றமைத்திடத் துணிந்தான்!
நினைத்தவன் செயலிலும் விரைந்தே முனைந்தான்!
இதனை அமைத்திட இருபத்தொரு ஆண்டுகள்
இருபதி னாயிரம்பேர் கடினமா யுழைத்தனர்!
இந்தியச் சிற்பிகளுடன் இத்தாலி பிரான்ஸ்
மத்திய ஆசியா பாரசீகம் முதலாம்
பல்வேறு நாட்டினைச் சேர்ந்த சிறந்த
சிற்பிகள் இணைந்தக் கட்டிடம் அமைப்பதில் –
"உஸ்தாது ஈஸா" எனுமுயர் பாரசீகச் சிற்பியின்
தலைமையின் கீழே ஊக்கமாய் உழைத்தனர்!
ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாவை
உழைப்பின் ஊதியமாய்ப் பெற்றான் உஸ்தாது!


ஷாஜகான்


மும்தாஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிங்கினில் அமைந்தஇவ் வழகிய சின்னத்தில்
பலநூறு விலையுயர் நவரத் தினங்களும்
காண்போர் கண்களைக் கவர்ந்திடும் வண்ணம்
வேண்டிய இடங்களிற் பதிக்கப் பெற்றுள!
மும்தாஜின் நினைவுச் சின்னத்தை அமைத்திட
மூன்றுகோடி ரூபாவைச் செலவு செய்தான்!
காலையிற் பார்த்தால் ஒருவித வர்ணமும்
மாலையிற் பார்க்கையில் பிறிதொரு வர்ணமும்
இரவினிற் பார்த்திடின் இன்னொரு வர்ணமும் –
இப்படி வர்ணங்கள் பலகாட்டி மயக்கிடும்!
காதலின் சின்னமாய் எழுந்தஇக் கட்டடம்
காண்போர் எவரையும் ஈர்ப்பது விந்தையா?
கட்டடம் அமைத்து முடிந்ததும் மன்னன்தன்
காதற் துணைவியின் உடலினை முன்னர்
புதைத்திட்ட"பர்ஹாம் பூரில்" உள்ளதாம்
"செய்னா பாதுத் தோட்டத்தி" லிருந்ததை
அகழ்ந்து எடுத்துக் கொணர்ந்த ஷாஜஹான்
ஆசைமிக அமைத்த தாஜ்மஹாலில் வைத்தான்!!
அக்ராவில் "இராசா மான்சிங்" என்பவரின்
இடத்தை வாங்கி அமைக்கப் பட்டதாம்
மும்தாஜ் மஹாலின் உட்புற அமைப்புகள்
மூக்கின்மேல் விரல்வைத்து வியக்கவே செய்யும்!
முப்பத்தைந்து ஆண்டுகள் மறுமணம் செய்யாது
மும்தாஜ் நினைவோடு வாழ்ந்த மன்னனின்
மூன்றாம் மகனாம் "ஔரங்கசீப்பு" என்பவன் –
தன்னண்ணன் "தாரா" என்பவன் ஆட்சியைத்
தனதாக்கிக் கொள்ளவே விரைந்து எதிர்த்துச்
சூழ்ச்சிகள் செய்து தாராவைக் கொன்று


ஜகாங்கீர்


ஔரங்கசீப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் உரிமையைத் தனதாக்கிக் கொண்டவன் -
தந்தையையும் சிறையில் அடைத்து வைத்தான்!
எந்தவோர் உரிமையும் அவருக்கு வழங்கிட
மறுத்த "ஔரங்கசீபு" தந்தையின் துயர்பற்றி
மனம்சற்றும் கலங்காது அரியணை அமர்ந்தான்!
சிறையுள் வருந்திய தந்தைக்கு வேண்டிய
அனைத்தையும் தவறாது அளித்து உதவினாள்
ஷாஜஹானின் மூத்த மகளாம் "ஜகானாரா"!
ஷாஜஹான் சிறையினில் வருந்திய போதெலாம்
ஆறுதல் அறிவுரை கூறியே தேற்றினாள்!
ஆற்றொணாத் துயரினில் வருந்திய மன்னன் -
எட்டரை ஆண்டுகள் உழன்ற ஷாஜஹான் -
எழுபத்தி நாலாம் வயதினில் தனக்குற்ற
மனத்துயர் சிறைத்துயர் அனைத்தையும் மறந்து
மறைந்தார் - ஆயினும் மனங்களில் நிறைந்தார்!
இதனைப் போலொரு நுட்பங்கள் நுணுக்கங்கள்
நிறைந்ததோர் சின்னம் எந்தவோர் பெண்ணுக்கும்
இதுவரை எவராலும் எவ்விடத்தும் அமைத்ததில்லை!
இதனைப் பார்ப்போர் இதுபற்றி வியந்தும்
புகழ்ந்தும் நயந்தும் நிற்பதைக் காணலாம்!
பூவுலகினில் உள்ள அதிசயம் ஏழிலும்
இதுவும் ஒன்றாக விளங்கிடக் காண்பீர்!
இதனை அமைத்த மன்னனும் அவனின்
காதல் மனையாளும் காலங்கள் தோறும்
வாழ்வார் நிலைத்து! வாழ்வார் நினைவில்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தைகள் மேய்த்து ஒவ்வொரு இடமாக
மந்தைக் கூட்டத்துடன் அலைந்த மனிதனின்
அறிவினில் மாற்றம் உருவா கிடவே
நதிக்கரை களிலவன் தங்கி வாழ்ந்திட -
நதியின் நீரினைத் தடுத்தந் நீரினை
பயன்படுத் திக்கொண்டு பயிர்கள் வளர்த்திட -
பழகிக் கொண்டவன் வாழ்வை உயர்த்தினான்!
பயிர்கள் வளர்த்தவன் ஓய்வாக இருக்கின்ற
நேரங் களிலவன் தன்கூட்டத் தவருடன்
ஆடியும் பாடியும் பொழுதைக் கழித்தான்!
இவ்வண்ணம் மனிதன்தன் வாழ்க்கையில் நாள்தொறும்
ஒவ்வொரு துறையிலும் ஏ(மா)ற்றங்கள் கண்டான்!!
மனிதனை உயர்த்திய நதிகள் பலவுள ஆயினும்
மனிதனை உயர்த்திய நதிகளில் ஒன்றாம்
எகிப்தின் ஊடாகச் சலசலத் தோடிடும்
நைல்நதி என்பதும் ஒன்றென் றறிவீர்!
நைல்நதிக் கரையினில் வளர்ந்த மக்கள்
நானிலம் வியந்திட அளித்தவை பலவுள!
அவற்றினில் ஒன்றாம் கட்டடக் கலையாம்!
அவரன்று அமைத்திட்ட கட்டடங் களிலுள்ள
நுட்பங்கள் நுணுக்கங்கள் பற்றியிந் நாள்வரை
நுண்ணறி வாளர்கள் பல்வகை ஆய்வுகள்
நிகழ்த்திடும் போதிலும் உண்மைகள் எதனையும்
அறியாது இன்றும் திகைத்து நிற்கின்றார்!!
விஞ்ஞானம் வளர்ந்து விண்ணினைக் கடந்து
விரையுமிந் நாளிலும் விளக்கம் கண்டிலர்!
“மரணம் அடைந்த தங்களின் உறவினர்
மீண்டும்தம் உடலினைத் தேடிக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர் மறுபடியம் வாழ்க்கை நடத்துவர்" -
என்றுளம் நம்பிய எகிப்திய மக்கள்
மரண மடைந்ததம் உறவினர் உடல்களை
மண்ணுள்ளே புதைக்காது மருந்திட்டுக் காத்தனர்!
இறந்தோரின் உடலுடன் நகைகள் ஆடைகள்
அறுசுவை உணவுகள் முதலாம் பொருட்களைக்
கட்டடம் அமைத்ததன் உள்ளே வைத்ததைக்
கருத்துடன் காத்து வந்ததோர் விந்தையே!
மருந்திட்டுக் காத்த உடல்களை "மம்மீஸ்"
என்றே அழைப்பர் ஆங்கில மொழியினில்!
தங்களை ஆண்ட மன்னர்கள் இறந்ததும்
அம்மன்னர் உடலையே இவ்விதம் காத்தனர்!
எகிப்தியர் அமைத்திட்ட இக்கட்டட அமைப்பினை
"பிரமிட்" என்று பெருமையோ டழைக்கிறார்!!
நைல்நதி கடலுடன் கலந்திடும் இடத்துள்ள
கெய்ரோ நகருக்கு மேற்குத் திசையினில்
ஐந்து மைல்கள் தொலைவினில் உள்ளதே
"கீஸர்" என்னுமொர் பழம்பெரும் நகரம்!!
"கூபு" என்னும் எகிப்திய மன்னனின்
காலத்தில் எழுந்த பிரமிட்டே இங்குள!!
"பெரும் பிரமிட்" என்றிதை அழைக்கிறார்!
பெரும் பிரமிட்டின் அடித்தளப் பரப்பு
பதின்மூன்று ஏக்கர் மட்டுமே கொண்டுள!!
இதனுயரம் நானூற் றைம்பத்தொரு அடிகளே!!
இதிலுள்ள கற்கள் இருபத்துமூன்று லட்சம்!!
இரண்டரைத் தொன்னே ஒருகல்லின் நிறையாம்!
ஒருகல்லின் பருமனோ நாற்பது கனஅடிகளாம்!
பிரமிட்டின் மொத்த நிறைதான் என்னவோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்தெட்டு லட்சத்து நாற்பத்தெண் ணாயிரம்தொன்!
அண்மையில் (1959) எடுத்திட்ட கணிப்பின்படி யின்னமும்
எழுபத் தைந்து பிரமிட்டுகள் எஞ்சியுள்ளனவாம்!
எகிப்தினை அண்டிய பகுதிகளிலே இவையுள்ளனவாம்!!
முப்பத் தாறடிச் சதுரமுள்ள தட்டையான
தளமொன் றுண்டிப் பிரமிட்டின் உச்சியிலே!!
இருபது ஆண்டுகள் ஒருலட்சம் மக்கள்
இதனை அமைத்திட உழைத்தனர் என்கிறார்!
பாரிய எடையுள்ள பெருந்தொகைக் கற்களைப்
பாரம் தூக்கிகள் இல்லாவக் காலத்தில்
வாகன வசதிகள் இல்லாவக் காலத்தில்
வசதியாய்க் கடலாறு இல்லாத இடத்தினில்
இவைகளை எவ்விதம் கொண்டு சேர்த்தனர்?
இத்தனை உயரத்துக் கெவ்விதம் ஏற்றினர்?
இப்படியான பிரமிட் ஒன்றா? இரண்டா?
இப்படி இன்னமும் எழுபத் தைந்துள்ளன!
இப்படி வினாக்கள் விடைகாண உள்ளன!
இப்படி வினாக்கள் விடையின்றி உள்ளன!!
விஞ்ஞானம் வளர்ந்து விண்ணையும் கடந்துபோய்
வியத்தகு ஆய்வுகள் விளைக்கும் இந்நாளில்
நுட்பம் மிகுந்த கருவிகள் கொண்டிப்
பிரமிட்டைத் துளைத்துத் துருவித் துருவியே
பற்பல துறையினர் பற்பல முனைகளில்
பகுப்பாய்வு செய்கின்றார் அல்லும் பகலுமே!
பிரமிட்டின் உள்ளே உள்ளவை பற்றிப்
பிரமிப்பாகவே உள்ளது உலகுக்கு இன்னமும்!
இறந்தவர் உடல்களைக் காத்திட அமைத்தவிச்
சிறந்த உயர்ந்த தொழில்நுட்பம் பொதிந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமிப் பூட்டு பிரமிட்டும் – உலகினர்
பிரமிக்கும் அதிசயம் ஏழினில் ஒன்றே!



இறந்ததன் காதலி மும்தாஜின்
இனிய நினைவினைப் போற்றியே
மன்னவன் அமைத்த தாஜ்மஹால்
மண்ணினை மயக்குதே – கிழக்கினில்!
இறந்தவர் உடலினைக் காத்திடவே
இறந்தவர் உடலினை வைத்தமைத்த
பிரமிட் கண்டு உலகமென்றும்
பிரமித்து நிற்குதே – மேற்கினில்!!

## கால அட்டவணை

| | |
|---|---|
| ஜகாங்கீர் - முடிசூடல் | - 1605( 36 வது வயதில்) |
| ஷாஜஹான் பிறப்பு | - 15. 01.1592 |
| ஷாஜஹான் - மும்தாஜ் திருமணம் | - 1612 |
| ஷாஜஹான் முடிசூடல் | - 1628.02.24 |
| மும்தாஜ் மரணம்(முதலில் அடக்கம்) | - 1631 |
| தாஜ்மஹால் அமைப்பு | - 1632 - 1653 |
| ஷாஜஹான் சிறையில் | - 1658.06.18 |
| ஔரங்கசீபு பிறப்பு | - 1618.10.24 |
| ஷாஜஹான் இறப்பு | - 1666.01.22 |
| கூபூ மன்னன் | - கி.மு 2900 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜராஜ சோழன்
## 16 ம் லூயி மன்னன்

மக்களை மதித்து வாழும்
மன்னனே மக்கள் மன்னன்!
மக்களை மதித்து ஆளும்
ஆட்சியே மக்கள் ஆட்சி!
மக்களை மிதித்து வாழும்
மன்னனோ "மிலேச்ச" மன்னன்!
மக்களை மிதித்து ஆளும்
ஆட்சியும் "காட்டு" ஆட்சி!
மனிதரை மதித்து ஆண்டான்
கிழக்கிலோர் மக்கள் மன்னன்!
மனிதரை மிதித்து வீழ்ந்தான்
மேற்கிலோர் "மிலேச்ச" மன்னன்!!

சுந்தரசோழனுக்கு மவரது அரசியான
வானவன்மா தேவியிடத்தும் உதித்த
திருமகன் "அருண்மொழித்தேவன்"!
தந்தையின் வழியில் வாய்த்த
தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட
சோழப் பேரரசின் ஆட்சிப்
பொறுப்பினை ஏற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமுடி சூடியாளும்
மன்னனா யமர்ந்து கொண்டான்!
ஆட்சியி லமர்ந்து மூன்று
ஆண்டுகள் கடந்த பின்தன்
பெயரினை "ராசராசன்" என்று
மாற்றிக் கொண்டாட்சி செய்தான்!
"உலகமாதேவி" என்பவர் தானிவனின்
பட்டத்து அரசியாவார்!
"இராசேந்திரன்" என்னும் மகனே
முடிக்குரிய வனாயுதித்தான்!!
தமிழ்மக்கள் நலங்கள் போற்றித்
தமிழ்நில வளங்கள் தேக்கித்
தமிழினம் தம்தலை நிமிர்ந்து
தரணியில் வாழும் வண்ணம்
தமிழறம் செழிக்க ஆண்டான் -
தமிழ் மன்னன் ராசராசன்!
தமிழரின் ஆட்சி ஓங்க
நாடுகள் பலவும் வென்றான்!
பலமிகு கடற்படைத் துணையினோடு
ஈழத்தை வென்று ஆங்கே
தன்னாட்சி நிலைக்கச் செய்தும் -
தன்னாட்சிப் பரப்பைப் பெருக்க
நாடுகள் பலவும் வென்றும் -
தமிழ்வீரம் நிலைக்கும் வண்ணம்
தமிழ்மக்கள் வாழ்த்தப் பெற்றான்!
தமிழரின் வாழ்த்தைப் பெற்றான்!!
தமிழரின் சிற்ப சித்திரத்தினோடு
கலையெல்லாம் விளங்கும் வண்ணம்



மாமன்னன் இராஜராஜ சோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சையில் மாபெருங் கோயில்
ஒன்றினை அமைத்தனன் ராஜராஜன்!
397 அடி அகலத்தோடு அதனின்
793 அடி நீளம் கொண்டதாக
நடுவிமானம் 216 அடி உயரம்
கொண்டுள்ள தந்தக் கோவில்!
நான்காண்டு காலம் அயரா
உழைப்பினால் அமைந்த தன்றோ!
கோவிலின் வெளித் திருச் சுற்றினிலே
ஒரே கல்லில் செதுக்கப்பெற்ற
நந்தியின் சிலையொன்றுண்டு!
12 அடி உயரம் கொண்டு
19 – அடி நீளம் கொண்டு
8 – அடி அகலம் கொண்டு
அமைந்துள்ள தந்த நந்தி
தமிழ்ச் சிற்பச் சிறப்பைக் கூறும்!
தஞ்சையில் அமைந்த அக்கோயிலுக்குப்
"பெருவுடையார்கோவில்" என்றும்
"பிரகதீஸ்வரர் கோவில்" என்றும்
இன்னும்பல பெயர்கள் உண்டாம்!
"கருவூர்த் தேவர்" எனுமோர் சைவப் பெரியார்
இப்பெருமான் மீதோர் பதிகம்
பாடியுள்ளார் எனுமோர் செய்தி
இருப்பதை அறிந்து கொள்வீர்!
அதுமட்டுமின்றி இந்த மன்னன்
திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி
எனும் சைவப் பெரியார் துணையால்
"திருமுறை" வகுக்கச் செய்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி சிறப்புற் றோங்க
சிவநெறி வளம்பெற் றோங்க
திருமுறை அருள்பெற் றோங்க
தமிழ்க்கலை செழிப்புற் றோங்க
ஏர்த்தொழில் வளங்கள் ஓங்க
செய்தொழில் வளங்கள் ஓங்க
தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து
தரணியில் வாழும் வண்ணம்
தமிழரசாட்சி செய்தான்!
தனியரசாட்சி செய்தான்!!
தமிழினம் நிலை(னை)க்கும் வண்ணம்
மனுநீதி நிலைக்க ஆண்ட
தமிழ்நலம் போற்றி ஆண்ட
மன்னவன் விருதுகளுடன் பட்டங்கள்
பலபெற்றுத் திகழ்ந்த அவனை
"சைவம் வளர்க்கும் தண்முகில்"
"திருமுறை போற்றும் செவிலி"
"கற்றவர் தமக்கொரு நற்றுணை"
"இயலிசை படரும் கொழுகொம்பு"
"சோழநாராயணன்"என்பனவுடன்
"நித்திய விநோதன்" என்றும்
"சிவபாத சேகரன்" என்றும்
"மும்முடிச் சோழன்" என்றும்
"தென்னபராக்கிரமன்" என்றும்
"பண்டித சோழன்" எனவும்
"இராசவித்தியாதரன்" எனவும்
"சோழமார்த்தாண்டன்" எனவும்
"செயங்கொண்ட சோழன்" எனவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் விருதுகள் பலவும் பெற்றுப்
போற்றிட வாழ்ந்த மன்னன் -
இருபத்தொன்பது ஆண்டுகாலம்
மனுக்குலம் போற்ற ஆண்ட
தமிழ்க்குலம் வாழ்த்த ஆண்ட
என்றென்றும் நினை(லை)க்கும் வண்ணம்
நல்லாட்சி செய்த மன்னன்
மண்ணுல கத்தினையே விட்டு -
மண்ணுலக காட்சி தந்த
மனநிறை வுடன் ராசராசன்
விண்ணுல காளச் சென்றான்!
மக்களை மதித்து ஆண்ட
மாமன்னன் ராசராசன்
மக்களின் மனங்களிலின்றும்
வாழ்கின்றான்! என்றும் வாழ்வான்!!



தஞ்சைப் பெரிய கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் நாட்டுக் கயலிலுள்ள
ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த
ஆற்றலில் அறிவில் மிக்க
அரசிளங்குமாரியான
"மேரி அன்ரோனையிற்" எனும் பெண்ணை
தன்ராணியாக்கிக் கொண்டு
பதினாறாம் லூயி மன்னன்
மாபெரும் பிரான்ஸ் நாட்டின்
மன்னனாய் மணிமுடி சூடி
அரியணை மீதமர்ந்து கொண்டு
"பிரபுக்கள்"வகுப்பினோர்க்கும்
"உயர்குடி"மக்களுக்கும்
சார்பாக ஆட்சி செய்தான் - அவர்கள்
சுகபோக வாழ்க்கை வாழ்ந்தார்!!
மத்திய வகுப்பைச் சேர்ந்தோருடனே
கீழ்த்தர வகுப்பினோரும்
தங்களின் உழைப்பை யெல்லாம்
வரிகளாய் அரசுக் களித்துவிட்டு
ஏழ்மையில் தவித்தார் மக்கள்!
வாழ்க்கையி லின்னல் ஓங்கத்
துன்பத்தில் உழன்றார் மக்கள்!!
மக்களை வருத்திப் பெற்ற
மக்களின் உழைப்பை யெல்லாம்
வரிகளாய் வருத்திப் பெற்றும்
மக்களின் வாழ்வைச் சற்றும்
கவனத்திற் கொண்டிடாதும் -
மக்களின் பணத்தைக் கொட்டி
வேர்செயில்ஸ் நகரில் எழிலார்



பதினாறாம் லூயி மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிங்கினால் உலகம் போற்ற
மாளிகை அமைத்துக் கொண்டும் –
வளங்களைச் சிதைத்துக் கொண்டும் –
மக்களை வருத்திக் கொண்டும் –
நாட்டின தெண்ணம் இன்றிச்
சுகங்களே சதமென் றெண்ணித்
தன்னெண்ணம் போலப் பிரான்ஸை
ஆண்டனன் லூயி மன்னன்!
பசினால் துவண்ட மக்கள்
பசிக்குண்ண ரொட்டி கேட்டார்!
பசிக்குண்ண ரொட்டி இன்றேல்
"கேக்" உண்பீர் என்றாள் ராணி!
வாட்டிடும் துயருக் கெல்லாம்
வி(மு)டிவொன்று காண வேண்டி
ஆட்சியை எதிர்க்கக் கிளந்தார்!
துணிந்தவர் புரட்சி செய்தார்!!
ஆட்சியை எதிர்க்கும் மக்கள்
எவரையும் விசாரணை இன்றி
சிறைவைக்கும் பெரிய கோட்டை
நகரத்தின் நடுவில் இருந்தது!
அதன்பெயர் "பஸ்ரீல்" கோட்டை!!
புரட்சியில் கிளர்ந்த மக்கள்
பேரணியாகச் சென்று அந்தக்
கோட்டையைத் தாக்கி சிதைத்துத்
தம்வச மாக்கிக் கொண்டு
வெற்றியில் மகிழ்ந்து நின்றார்!
பிரபுக்கள் வாழும் எழிலார்
மாளிகை களினை மக்கள்



பதினாறாம் லூயி மன்னனின் ராணி
மேரி அன்ரோனைற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கியதோ டமைந்திடாது
அவற்றினை எரித்தழித்தார்கள்!
நாட்டினில் அமைதி சட்டம்
சீர்குலைந்திடுதல் கண்டு
மன்னன்தன் குடும்பத்தோடு பிரான்ஸ்
நாட்டை விட்டோட முயன்ற
வேளையில் கண்டனர் கிளர்ச்சியாளர்!
இதற்கென அமைக்கப் பட்ட
நீதிமன்றத்தின் முன்னால்
"அரசுக்கு எதிராய் நடந்தார்"
எனக் குற்றம் சுமத்தப் பட்டோர்
விரைவினில் விசாரணை செய்து
அவர்மேலே சுமத்திய குற்றம் மன்றால்
நிரூபிக்கப்பட்டவுடனே –
இதற்கென "கிளர்ச்சியாளர்" உருவாக்கிய
"கிலற்றீன்" என்னும் ஓர்
சிரச்சேதம் செய்யும் இயந்திரத்தால்
கொலை செய்யப் பட்டார்கள்!
இவ்விதம் ஆயிரமாயிரம் மக்கள்
சிரத்சேதம் செய்யப் பட்டார்கள்!
இந்நீதி மன்றின் முன்னால்
மன்னனும் ராணியும் நிறுத்தப்பட்டு
விரைவினில் விசாரணை செய்து
குற்றவாளிக ளென்னும் தீர்ப்பு
மன்றினால் வழங்கப் பட்டதனால்
அவ்விருவரும் விரைந்து புதிய
இயந்திரக் "கிலற்றீன்" கொண்டு
சிரச்சேதம் செய்யப் பட்டார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்பு பிரான்ஸில் உருவான
மாற்றம் பலவற்றின் பின்னால்
"சமத்துவம் எவர்க்கும் சொந்தம்!
சுதந்திரம் எவர்க்கும் சொந்தம்!!
சகோதரர் மக்கள் எல்லாம்" -
என்றோதும் ஆட்சி கண்டார்!
பிரான்ஸின் படைகளுக்கு தலைமைப்
பொறுப்பேற்று வெற்றிகள் பலவும்
கண்ட "நெப்போலியன்""என்பான்
பிரான்ஸ் நாட்டின் ஆட்சிப்
பொறுப்பேற்றுக் கொண்டான்!
"பிரான்ஸின் புரட்சி பெற்ற
குழந்தையே நெப்போலியன்" என்பர் -
வரலாற்று ஆசிரியர்கள் -இன்றும்!
மக்களை மதித்து ஆட்சி
நடத்திட மற(று)ந்த மன்னன்
மக்களால் மிதிக்கப் பெற்றான்!
மக்களை மதித்து ஆண்ட
மாமன்னன் ராஜராஜன்
மண்ணினை விட்டு நீங்கி
ஆயிரம் ஆண்டின் பின்னும்
மன்னனின் உதய நாளில் -
மக்களேன் விழா வெடுத்து
அவன் புகழ் பரவுகின்றார்?
மக்களை மதித்து ஆண்ட
மாமன்னன் என்பதால்தான்!
மக்களின் மதிப்பைப் பெற்ற
மாமன்னன் என்ப தால்தான்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை வதைத்த லூயி
மன்னனின் ஆட்சி வீழ்ந்து
மக்களின் ஆட்சி கண்ட
இருநூறாம் ஆண்டாம் இன்றும்
மக்களேன் பிரான்ஸில் இன்றும்
மகிழ்ச்சியில் மிதக்கின்றார்கள்?
மக்களைச் சமமாய்ப் போற்றும்
அரசாங்கு மலர்ந்த தால்தான்!
மக்களை வதைத்த " தொல்லை"
தொலைந்ததாற் களிக்கின்றார்கள்!!

மக்களை மதித்த மன்னன்
மக்களின் மதிப்பைப் பெற்றான் – கிழக்கில்! –
மக்களை மிதித்த மன்னன்
மக்களால் மிதிக்கப் பெற்றான் – மேற்கில்!!

## கால அட்டவணை

**ராஜராஜ சோழன் (அருண்மொழித் தேவன்) – கி.பி 985 –1014**

பிறந்த மாதமும் நட்சத்திரமும் - ஐப்பசி சதயம்
முடிசூடியது - கி.பி. 985 யூலை 18ம் நாள்
(ஆடி மாதம் புனர்பூச நட்சத்திரம்)
தஞ்சைப் பெரிய கோவில் நிர்மாணம் - கி.பி. 1005 - கி.பி. 1010

**பதினாறாம் லூயி மன்னன்** (LOUIS – XVI) **– கி.பி. 1754 – கி.பி. 1793**

பிறப்பு - 23.08.1754, முடிசூடியது - 10.05.1774
பஸ்ரீஸ் (BASTILLE) கோட்டை கைப்பற்றியது - 1789.07.14
மரணதண்டனை - 21.01.1793

**மேரி அன்ரோனைற்** (MARIE ANTOINETTE)

பிறப்பு - 02.11.1755, இறப்பு - அக்டோபர் 1793



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் 16 மேற்கும்

## ஞானப்பிரகாச முனிவர்
## சிந்தனையாளர் அரிஸ்டாட்டில்

ஆயிரம்மைலுக் கப்பாலுள்ள
நாடொன்றி லிருந்து
அலைகடல் கடந்து
அல்லல்பல கடந்து
இம்மண்ணுக்கு வந்து
இம்மண்ணை ஆக்கிரமித்து
ஆட்சியைப் பிடித்தவரின்
அநியாயச் சட்டத்தை
ஏற்க மறுத்ததால் -
எதிர்க்கத் துணிந்ததால் -
ஆளுவோரால் தன்னுயிருக்கு
ஆபத்து வருமென்பதால் -
தன்நாட்டை விட்டோடி
அயல்நாடு சென்று
தன்னுயிர் காத்தார்
அன்று ஓர் அறிஞர் - கிழக்கில்!

ஆட்சியிலிருந்தவரின்
அகால மரணத்தால்
ஆட்சியைப் பிடித்த - புது
ஆளுவோர்கள்
தன்னுயிர் பறித்திடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராவ தறிந்ததும்
தன்னுயிர் காத்திடத்
தளரா மனத்துடன் - யாரும்
காத்திரா நேரத்திலே
கண்காணா வேளையிலே
தன்நாடு துறந்து - தன்
தாய்நாடு சேர்ந்து
தன்னுயிர் காத்தார்
அன்றோர் அறிஞர் - மேற்கில்!

பழமைகளுடன்
பெருமைகளும்
மகிமைகளும்
கொண்ட பெரும் நகராம்
யாழ்ப்பாண நகரத்தினை
அடுத்துள்ளதோடு -
நீர் வளம்
நில வளம்
கலை வளம் எனப்பல
வளங்களும் நிறைந்ததே
"திருநெல்வேலி" எனும்
சிற்றூராகும்!
இல்லை - சிறுநகராமாகும்!
வளர் நகராமாகும்!
அதிகாரமும் - நிறைந்த
கல்விச் செல்வமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்செல்வமும்
கொண்டிருந்தவர்தான்
"காராளபிள்ளை"
எனுமோர் பெரியார்!
அப்பெரியாரின்
பெருந்தவப் பயனாக
அருந்தவ மகனாக
ஆயிரத்தறுநூற்று
இருபத்தைந்தினில்
தோற்றம் பெற்றார் –
ஞானப்பிரகாசர்!!
இலங்கைத் தீவினில்
முதன்முதலாகப்
பாதம் பதித்த
அந்நிய நாட்டவர்
போர்த்துக்கேயரின்
பேயாட்சியின் கீழ்
அடிமைப்பட்டிருந்தது –
யாழ்ப்பாண இராச்சியம்!
"யாழ்ப்பாண அரசினைக்
கைப்பற்றிக் கொண்டிங்கு
குடிகொண்டுள்ள
போர்த்துக்கேய அதிகாரிகளின்
உணவுத் தேவைக்காக –
யாழ்ப்பாணத்தில் வாழும்
குடும்பத்தவர்கள்
தவணைமுறையில் –
சுழற்சி முறையில் –



ஞானப்பிரகாச முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திற்கொருபசு
தரல் வேண்டும்!
தரத் தவறினாலவர்கள்
தயவுதாட்சண்யமின்றித்
தண்டிக்கப்படுவர்" எனக்
கருணை சிறிதுமில்லாக்
காட்டுமிராண்டிச் சட்டத்தை
ஆக்கியிருந்தனர் -
அந்நிய ஆட்சியினர்!
போர்த்துக்கேய ஆட்சியாளர்!
"பசுவைப் பூசிக்கும் நாம்
பசுவைப் புசிக்கக் கொடுப்பதா" -
என்றுளம் நொந்தனர்!!
ஆட்சியை வெறுத்தனர்!
பசுவைப் புசித்திடப்
பாவியர்களுக்குக்
கொடுக்க வேண்டிய
கெ(ா)டும் நாள் வருவதை
அறிந்து கொண்டவர்
அதிர்ச்சி அடைந்தவர்
அச்சம் கொண்டவர்
ஆத்திரம் மிகுந்தவர்
கருணையுளம் படைத்தவர்
இளமைத்துடிப்புடையவர்
இளைஞர் ஞானப்பிரகாசர் -
பசுவைக் கொல்லும் - பெரும்
பழியிலிருந்து
விலகிக் கொள்ள - பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம் கொண்டவர் –
அநியாயச் சட்டத்தை
எதிர்க்கத் துணிந்தவர் –
பலவழிகளையும்
பரிசீலித்துப் பார்த்தவர் –
இரவோடிரவாக
'அலைகடல் கடந்து
அக்கரை அடைந்து
தமிழகத் தினிலுள்ள
"வேதாரணியம்"–
எனுமிடத்தினிலே
தஞ்சம் புகுந்தார் – அங்கு
தங்கியிருந்தார்!
தன்னைக்காத்துக் கொண்டார்!
திருத்தொண்டு புரிவதில்
கருத்துடன் இருந்தார்!
காலம் கரைந்ததால்
கருத்திலும் மாற்றம்!
அவ்வூர் விட்டுடன்
அகன்ற ஞானப்பிரகாசர்
"திருப்புகலூர்" எனும்
ஊரினைச் சேர்ந்தார்!
அவ்வூரில் வாழ்ந்த
அண்ணாசாமி ஆசாரியாரிடம்
சிவதீட்சை பெற்றுச்
சிவசீலரானவர்
தவசீலரானவர்
சிதம்பரம் அடைந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வூரினையே – தம்
விருப்பிடமாகத் – தம்
இருப்பிடமாக்கினார்!
நடராஜப் பெருமான்மேல்
நாட்டம் மிகவே
ஆடலிறைவனின்
அடியவரானார்!
நாட்கள் கரைந்தன!
நாட்டமும் மாறின!!
தமிழகத்தினது
எல்லை கடந்து
வடதிசை நோக்கிப்
பயணம் செய்தவர்
வடநாட்டிலுள்ள
வங்காளம் அடைந்தார்!
ஞானப்பிரகாசர் அங்கே
வாழ்ந்த காலத்திலோர்
பிராமணத் துறவியிடத்து
வடமொழியிலுள்ள
தருக்கம் – மீமாம்சை
வியாகரணம் முதலியன
கற்கத் தொடங்கிக்
கற்றுத் தெளிந்தார்!
கற்றுத் தேர்ந்தார்!
விரிவாகக் கற்றார்!
விரைவாகக் கற்றார்!!
குருவின் உபதேசம்
பெறும்பேறு பெற்றவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் ஆணைப்படி
திருவண்ணாமலை ஆதீனத்தை
வந்தடைந்தனரெம் –
ஞானப்பிரகாசர்!
ஆதீனத்தில் அவர்
இருந்த காலத்தில்
சைவம்
சைவசித்தாந்தம்
தமிழ்மொழி
வடமொழி என்பவற்றில்
நல்ல புலமையும்
சிறந்த தேர்ச்சியும்
பெற்றதனால் –இவர்
தமிழ் மொழியிலும்
வடமொழியிலும்
சைவசித்தாந்த நூல்களை
இயற்றும் திறமையை
இயல்பாகவே பெற்றனர்!
விசேட தீட்சை
பெற்றுக் கொண்டவர் –
துறவு வாழ்க்கை
ஏற்றுக் கொண்டார் –
“முனிவர் ஞானப்பிரகாசர் ”எனும்
எனும் சிறப்புப் பெயருடன்
துறவு வாழ்க்கையைத்
தொடக்கலானார்!
காத்திருக்காது காலம்
கரைந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர் ஞானப்பிரகாசர்
திருவண்ணாமலையை விட்டுச்
சிதம்பரம் சேர்ந்தவர் –
சிதம்பரத் திருத்தலத்தினில்
"ஞானப்பிரகாசம்" எனும்
பெயரிலோர் – தீர்த்தக்
குளத்தையும் –
குளத்தை அடுத்ததோர்
மடத்தையும் அமைத்தவர் –
அதனருகிலோர்
ஆச்சிரமத்தையும்
அமைத்துக் கொண்டார்!
இறைபணியினிலும்
சமய நூல்களுக்கு
உரையெழுதுவதிலும்
உற்சாகத்துடன் ஈடுபட்டார்!
"சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கு"
தமிழினில் – இவர்
எழுதிய உரையே – உயர்
சிறப்புப் பெற்றதொன்றாகும்!
முனிவரவர்கள்
வடமொழியிலுள்ள
சித்தாந்தசிகாமணி
பிரமாண தீபிகை
பிரசாத தீபிகை முதலிய
நூல்களையும் –
பௌட்கராகம விருத்தி
சிவஞானபோத விருத்தி முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உரை நூல்களையும் –
எழுதியுள்ளார்கள்!
சிவஞானசித்தியார் உரையிலே
காமிகம்
வாதுளம் முதலிய
ஆகமங்களையும் –
தொல்காப்பியம்
ஞானாமிர்தம்
கோயிற்புராணம் முதலிய
தமிழ் நூல்களையும்
மேற்கோள்களாகக்
காட்டியுள்ளார் இவர்!
ஈழத்திலிருந்து
தமிழகம் சேர்ந்து
சைவசித்தாந்தப் பணியில்
சிறந்த முறையில் – அறிஞர்
போற்றும் முறையில்
பெரும்பணியியற்றியவர்
அரும்பணியாற்றியவர் –
முப்பத்துமூன்றாண்டுகள்
பூவுலகில் வாழ்ந்திருந்தவர் –
மிகச் சிறிய வயதிலேயே
சித்தாந்தசிந்தனையாளர்கள்
பலருள்ளே – சிறந்தவராக
ஒருவராக விளங்கியவர் –
முனிவர் ஞானப்பிரகாசர்!
ஆயிரத்து அறுநூற்று
ஐம்பத் தெட்டாம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பங்குனி மாதத்தில் வரும்
பூச நட்சத்திரத்தில்
ஞானப்பிரகாச முனிவர்
ஆடலிறையின்
அரவிந்த மலரடிகளைச் -
சிவநெறி நிற்போரின்
சிந்தை கலங்கிட
அணைந்து கொண்டார் - ஐயன்
இணைத்துக் கொண்டார்!

கிரேக்கம் என்பது
சிந்தனையாளர்களின்
சாதனையாளர்களின்
தத்துவ மேதைகளின்
மாவீரர்களின்
விளைநிலம் என்பர்!
"மஸிடோனி" நகரில்
"ஸ்டாஜிரா" எனும் இடத்தில்
"நிக்கோமாக்கஸ்" -
எனும் பெயருள்ள
வைத்தியரொருவருக்கு
மகனாகப் பிறந்தார் -
அரிஸ்டாட்டில்!
"ஏதென்ஸ்" நகரிலேயே
இவர் பிறந்தாரெனச்


சிந்தனையாளர் அரிஸ்ரோட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சொல்வாருமுண்டு!
மாபெரும் வீரனாம்
மாபெரும் மன்னனாம்
மகா அலெக்ஸாந்தரின்
பாட்டனாருக்கு –
அரிஸ்டாட்டிலின் தந்தையே
அரண்மனை வைத்தியர்!
விஞ்ஞானியின் மகனாகப்
பிறந்த இக்குழந்தை
மருந்து வாசனையிலேயே
வளர்ந்து வந்தது!
வீட்டில் நிலவிய
சூழல் காரணமாகவும் –
தந்தை இயற்றிய
பணிகள் காரணமாகவும் –
குழந்தை அரிஸ்டாட்டிலுக்கு
“விஞ்ஞான” மனப்பான்மை
இயல்பாகவே உருவானது!
இதனால் அக்குழந்தை
எதனை எடுத்தாலும்
ஆராய்ந்து பார்க்கும்
பகுத்துப் பார்க்கும்
உளப்பண்பு தாமாகவே
உருவானதுபற்றி
வியப்பதற்கில்லை!
சுழன்றது காலம்!
கனிந்தது காலம்!
அரிஸ்டாட்டில்


பேரறிஞர் பிளாட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியக் கலையைத்
தந்தையிடமே
கற்றிடத் தொடங்கினார்!
மாமன்னன் அலெக்ஸாந்தரின்
அரண்மனை வைத்தியராகப்
பணியேற்க வேண்டிய
பணியாற்ற வேண்டிய
அரிஸ்டாட்டிலின்
அகத்திலோர் மாற்றம்!
மனத்திலோர் திருப்பம்!
காலத்தின் எண்ணத்தில் –அவரின்
கருத்தில் ஏற்பட்ட
மாற்றத்தின் பயனாக
நேற்றுவரை தந்தையிடம்
வைத்தியம் கற்று வந்ததை
உடனடியாகவே
நிறுத்திக் கொண்டவர் –
தத்துவக் கலையினைக்
கற்றிடவிரும்பினார்!
கற்றிடத் தொடங்கினார்!
தத்துவம் கற்றவர்
தமது மன்னனுக்குத்
தத்துவம் போதிக்கும்
குருவாக அமர்ந்தார்!
அரிஸ்டாட்டில் தமது
பதினெட்டாம் வயதில்
தந்தையை இழந்ததால்
தனி(வி)த்திட நேர்ந்தது!


சிந்தனையாளர் சோக்கிரட்டீஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை சூழ்ந்தது!
தவித்திட நேர்ந்தது!
தந்தையின் மறைவின்பின்
தந்தையார் சேர்த்து வைத்த
பணம் பொருட்களினைப்
பயனில்லா வழிகளில்
செலவிட்டழித்ததால்
சொல்லரும் ஏழ்மையில்
வாடியதாலவர்
வாழும் பேராவலில்
சேனையில் இணைந்ததாகவும்
சிலகாலம் பணம் தேடி
வைத்தியராயவர்
பணி செய்த போதிலும்
பெரும்பயன் இன்மையால்
மனம்மிக நொந்துதன்
மனதைத் தேற்றிடும்
வழிபற்றிச் சிந்தித்த
அரிஸ்டாட்டில் முதலில்
"ஐசோக்ரேட்டஸ்" எனும்
ஆசிரியரிடத்திலேயே
கல்வி பயின்றதாகவும் -
அக்காலத்தில் வாழ்ந்த
அறிஞர் பெருமகனாம்
"பிளேட்டோ" பற்றி
அறிந்த அரிஸ்டாட்டில்
பிளேட்டோ நடத்திய
கலைக் கழகத்தினிலே


மாவீரன் அலெக்ஸாண்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து கொண்டதாகவும் –
கதை பல உண்டு!
எது எவ்வாறாயினும்
எவர் எதைச் சொல்லினும்
அரிஸ்டாட்டில்
அறிஞர் பிளேட்டோவைக்
குருவாக ஏற்று – அவரது
கலைக் கழகத்தினிலே
இருபதாண்டுகள்
பயின்றார் என்பதுவே
எவரும் மறுக்காது
ஏற்றுள்ள உண்மையாம்!
குருவான பிளேட்டோ
முதுபெரும் தத்துவஞானி!
அவரின் மாணவன்
அரிஸ்டாட்டிலோவெனில்
விஞ்ஞான ரீதியில்
எதனையும் பகுத்து
அறிவதில் சிறந்தவர் – அதனால்
"குரு சொல்வதுவே
வேதவாக்கு" என்றெண்ணும்
மனப்பான்மை – சிறிதும்
மாணவனிடத்தில்
இருந்ததே இல்லை – அதனால்
இருவருக்குமிடையில்
கருத்து முரண்பாடுகள்!
பிளேட்டோவுக்கு
வயது வளர்ந்ததால்



இரண்டாம் பிலிப் மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மறைவின்பின்
பிளேட்டோவின்
கலைக் கழகத்தின்
தலைமைப் பதவி
தமக்கே கிடைக்குமெனும்
பெருநம்பிகையுடனவர்
வாழ்ந்திருந்தார் -
அரிஸ்டாட்டில்!
ஆனால் - பிளேட்டோவின்
ஆயுள் முடிந்தபோது
அவரின் மருமகனாம்
"ஸ்பியூஸிப்பஸ்" என்பவர்
கலைக் கழகத்தின்
தலைவராயமர்ந்தார்!
அதனால் - அரிஸ்டாட்டிலின்
ஆசை பொய்யானது!
தலைமைப் பதவிக்
கனவு கலைந்தது!!
மனம்மிக நொந்திடக்
கலைக் கழகத்தினைவிட்டு
வெளியேறிய அவர்
அலைந்து திரிந்தார் -
நாடோடியாகவே!
இவ்வண்ணம் சிலகாலம்
அலைந்த அரிஸ்டாட்டிலை -
அனுபவ அறிவில்
சிறந்த அரிஸ்டாட்டிலை -
"ஹெர்மியாஸ்"எனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் தனது
அரசவைக்கு அழைத்து
அவருக்குப் பெருமதிப்பு
வழங்கி மகிழ்வித்தான்!
மன்னனும் மகிழ்ந்தான்!!
இவ்வேளையில்தான்
அறிஞர் அரிஸ்டாட்டில்
"ஹெர்மியாஸ்" மன்னனின்
சகோதரியொருவரை
மணம் செய்து கொண்டு
மகிழ்வுடன் வாழ்ந்தார்!
அவரது மகிழ்ச்சியோவெனில்
நிலைத்தது சில காலமே!
விதிசெய்த சதியினாலே
ஹெர்மியாஸ் மன்னனின்
ஆட்சியுரிமையோடவனின்
ஆருயிரும் பறிபோயினவே!
எனவே – அரிஸ்டாட்டில்
இருப்பிடமின்றியே – மீண்டும்
ஆற்றொணாத் துயருடன்
அலைந்தார் ஓராண்டு!
அந்த வேளையிலேயே –
அக்காலத்தினில் உலகில்
பெரும்புகழுடன் விளங்கிய
மஸிடோனியாவின்
மன்னனாம் பிலிப் –
அரிஸ்டாட்டிலை அழைத்துப்
பதின்மூன்று வயது நிரம்பிய –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரட்டுக் குணமுடன்
வீரமும் நிரம்பிய -
தன்னொரே மகனான
அலெக்ஸாண்டருக்கு
ஆசானாக அமர்ந்து
கலைகள் அனைத்தையும்
கற்பித்து - அவனையோர்
அறிவுசால் அரசனாக
உருவாக்கும் பெரும்பணியை
அவருக்கு வழங்கினான்!
மன்னனின் பணிப்பிற்கு
அறிஞர் அரிஸ்டாட்டிலும்
அகமகிழ்ந் திணங்கினார்!
உறுதியான உள்ளமும்
உரம்மிக்க உடலும் கொண்ட
மாமன்னன் பிலிப்
"திரேஸ்" ராச்சியத்தை
வெற்றி கொண்டங்குள்ள
தங்க வயலொன்றைத்
தனதாக்கிக் கொண்டவன்
தங்கம் குவித்திடப்
பேராவல் கொண்டான் - எனவே
போராவல் கொண்டான்!!
எனவே - தன்நாட்டில்
சிதறிக் கிடந்த - நகர
ராச்சியங்களையெல்லாம்
போர்களின் மூலம்
இணைத்துக் கொண்டான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுமாப்புக் கொண்டான்!!
கிரீஸ் முழுவதுமே
அவன்காலில் வீழ்ந்தது!
"தங்க மகனும்
தங்கக் குவியலும்
தத்துவாசிரியரும்
என்னுடன் உள்ளவரை
உலகத்தை நானே
கட்டியாள்வேனே" என
மனப்பால் குடித்த
மன்னவன் பிலிப்பின்
கற்பனை தகர்ந்தது!
கதைதிசை மாறியது!!
எதிர்பாரா வேளையில்
சதிகாரனொருவனால்
மாமன்னன் பிலிப்
மறைந்தான் சடுதியில்!
தந்தையின் இற(ழு)ப்பினால்
தந்தையின் மகுடத்தைத்
தரித்து கொண்ட மகன்
அலெக்ஸாண்டர் விரைந்து
அரியணை அமர்ந்தவன்
அடுத்ததை நினைத்தான்!
அயல் நாடுகளினை
வெற்றி கொண்டுதன்
ஆட்சியை விரித்திடப்
பேராவல் கொண்டான்!
பேராவல் கொண்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்காகத் தன்னைத்
தயார் செய்ய முனைந்தான்!
தயாராகப் பணித்தான்!!
அரிஸ்டாட்டில் மீண்டும்தன்
ஆசான் பிளேட்டோவின்
கலைக் கழகம் பற்றிக்
கருத்திற் கொண்டவர்
திரும்பி யங்கு செல்ல
விரும்பிய போதிலும்
கலைக் கழகத்தின்
தலைவனாயிருந்த
"க்ஸெனாக்ரிடஸ்" என்பவன்
பிளேட்டோவின்
தத்துவங்களிலே –
அரிஸ்டாட்டிலுக்கு
நாட்டமில்லாத
இரண்டு துறைகளாம்
கணித சாஸ்திரம்
மாயாவாதம்
என்பவற்றினிலேயே
கழகத்தின் தலைவன்
நாட்டமுற் றிருந்தான்!
எனவே – அரிஸ்டாட்டில்
கழகத்தில் இணைவதில்
விரும்பமற்ற அவர்
புதிதாக எங்கேனும்
கலைக்கழக மொன்றினைத்
தொடங்க விரும்பியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பினார் ஏதென்சுக்கு!
பன்னிரண் டாண்டுகள்
அங்கவர் வாழ்ந்தார்!
உளவியல் - விலங்கியல்
அளவைநூல் - மெய்யறிவு
அரசியலமைப்பு - இயற்பியல்
வானிலைஇயல் - செய்யுளியல்
பேச்சுக்கலை - ஒழுக்கவியல்
உயிர்நூல் - அழகுக்கலை -
எனநூல்கள் பலவற்றினை
அங்கிருந்த காலத்தில் எழுதினார்!
ஏதென்ஸில் இருந்துதான்
அறிஞரின் அறிவொளி
அகில மெங்கணுமே
பரவிய தறிவீர்!
ஏதென்ஸ் நகரினில்
“லிஸியம்” (LYCEUM) எனும்
கலைக்கழக மொன்றினை - தமது
ஐம்பத்து மூன்றாவது
வயதின் போதே -
ஏதென்ஸை வென்ற
மஸிடோனிய மன்னனின்
பெருநிதி உதவியுடன்
நிறுவிக் கொண்டார்!
கலைக் கழகத்தினிலே
இளைஞர்கள் பலரும்
இணைந்து கொள்ளவே -
விரும்பி முன்வந்தனர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடு எதுவுமில்லாவிக்
கலைக் கழகத்தினிலே
சுதந்திரக் காற்றே
சுழன்று நின்றது!
கழகத்திற்கு வேண்டிய
சட்டதிட்டங்களையும்
மாணவர் இணைந்து
மனஒற்றுமையுடனே
ஆக்கிக் கொண்டனர்!
கழகத்தை மேற்பார்வையிடுவதும்
மாணவர்களேதான்!
மாணவர்களும்
ஆசிரியர்களும்
பேதமேது மில்லாது
சமமாகப் பழகினர்!
அரிஸ்டாட்டில் உட்பட
ஆசான்கள் அனைவரும்
விறாந்தைகளிலும்
பாதைகளிலும்
நடந்து கொண்டே
போதனை செய்தனர்!
மாணவர் அவைகளை
மகிழ்வுடன் கற்றனர்!
கலைக் கழகத்தினிலே
நிலை கொண்டிருந்தது
சுதந்திரக் கல்வி!
கல்வியில் சுதந்திரம்!!
கல்வியில் சமத்துவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவக் கல்வி!!
இக்கலைக் கழகத்தில்
உயிர் நூலும்
இயற்கை விஞ்ஞானமுமே
முதலிடம் பெற்றன!
பிளேட்டோவின் கழகம்
தத்துவப் பள்ளி!
அரிஸ்டாட்டிலின் கழகம்
ஆராய்ச்சிக் கூடம்!!
விஞ்ஞானச் சோதனைக்கூடம்
என்றுமதைக் கூறலாம்!
அவருக்கு வேண்டிய
ஆராய்ச்சிக்குத் தேவையான
தாவரங்கள்
பிராணிகள்
பறவைகள்
முதலானவைகளைத்
தடையேதுமின்றி
வழங்கும் வண்ணம்
வேட்டைக்காரர்கள்
தோட்டக்காரர்கள்
செம்படவர்கள்
முதலானோருக்கு
மாமன்னன் அலெக்ஸான்டர்
ஆணையிட்டிருந்தான்!
ஆராய்ச்சிகளுக்கு
அவசியம் வேண்டிய
பல்வேறு பிரதேசங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்ற
தாவரவகைகளை -
விலங்கின வகைகளை -
பறவை இனங்களை -
தடையேது மின்றி
தந்திடும் பொருட்டு
ஆசியாவினிலும்
கிரீஸ் நாட்டினிலும்
ஓராயிரம் பேர்களை
மாமன்னன் அலெக்ஸாண்டர்
நியமித்திருந்ததாகவும் -
பெருந்தொகை நிதியினை
அரிஸ்டாட்டிலுக்கு அவன்
வழங்கியதாகவும்
விரிக்கின்றது - வரலாறு!
அரிஸ்டாட்டில் - தமது
மனைவியின் வழியாகவும்
பெருநிதி பெற்றிடும்
பெருவாய்ப்புப் பெற்றதால்
இரண்டாயிரம் ஆண்டுகட்கு
வேண்டிய ஆராய்ச்சிகள்
அக்கலைக் கழகத்தில்
மேற்கொள்ளப் பெற்றன!
அந்நாட்களில்தான்
நூற்றைம்பத்தெட்டுவிதமான
அரசியல் அமைப்புச்
சட்டங்களை நன்கு
ஆராய்ந்தறிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசியல்" (POLITICS) எனும்
அரியதோர் நூலினை
எழுதப் புகுந்த
அரிஸ்டாட்டிலின்
அரசியல் தத்துவம்
முற்று முழுதாக
நகர ராச்சியங்களின்
அரசியல் தத்துவமே!
அவரின் பரிசீலனைக்கு
உட்பட்டவை யெல்லாம்
உடன் பட்டவையெல்லாம்
ஒன்றன்பின் ஒன்றாக
வீழ்ச்சியடைந்து வந்த
நகர ராச்சியங்களின்
அரசமைப்புச் சட்டங்களே!
"நகர ராச்சியங்களே
இலட்சிய ராச்சியங்கள்" என்றும்
"அவைகள் மீண்டும்
புத்துயிர் பெறும்" என்றும்
எண்ணிக் கொண்டவர் -தமது
"அரசியல்" நூலினை - முன்பு
எண்ணிக் கொண்டது போல
எழுதத் தொடங்கினார்!
மாமன்னன் அலெக்ஸாண்டரின்
மனம் நிறைந்த ஆதரவு
உற்சாக மளித்தது -
அரிஸ்டாட்டிலுக்கு!
அதே வேளையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலெக்ஸாண்டர் மாமன்னன்
யுத்தத்தின் பொருட்டுப்
புறப்பட்டு விட்டான் –
பெரும் படையுடனே!
பெரும் திட்டத்துடனே!!
யுத்தத்தின் பொருட்டவன்
புறப்படும் வேளையில்
தனது இடத்துக்கு
தனது பிரதிநிதியாக –
மஸிடோனியப்படைகளின்
தளபதிகளில் ஒருவனான
"ஆண்டிபேடர்" (ANTIPATER)
என்னும் பெயருடையவனை
அலெக்ஸாண்டர் மாமன்னன்
நியமித்துச் சென்றான்!
"ஆண்டிபேடர்"
அரிஸ்டாட்டிலின்
இனியதோர் நண்பன்!
தனது மகனையும்
அரிஸ்டாட்டிலின்
லிஸியம் கலைக் கழகத்துக்குக்
கற்பதன் பொருட்டு
அனுப்பி வைத்ததோர் –
அரிஸ்டாட்டிலை மதிக்குமோர் –
அரிய நண்பன்!
தனித்தனி நகரங்களாகத்
தனியாட்சி நடத்தியவர்களுக்கு
அலெக்ஸாண்டர் மன்னனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருகுடைக்கீழ்" ஆட்சி
வெறுப்பையே அளித்தது!
சினத்தையே வளர்த்தது!!
தம்மை அடிமை கொண்ட
மஸிடோனிய ஆட்சியை
விஷமென வெறுத்தனர் –
ஏதென்ஸ் நகர மக்கள்!
இந்த நாட்களில்தான்
நாவன்மை மிக்கவரும்
கிரேக்க நாட்டவருமான
புகழ்பெற்ற "வாசாலகர்"
"டெமாஸ்தனிஸ்" என்பவர் – தமது
நாவன்மையினாலே
ஏதென்ஸ் நகர்வாழ்
மக்கள் மனங்களில்
சுதந்திர உணர்ச்சியைக்
கிளர்ந்தெழச் செய்தார்!
"ஒருகுடைக்கீழ்" ஆட்சியை
அறிஞர் அரிஸ்டாட்டில்
ஆதரித்து வந்ததால்
ஏதென்ஸ் நகர மக்களுக்கு
அரிஸ்டாட்டில் மீதிருந்த
அன்பு கெட்டது!
எனினும் – அறிஞர்
கலைக் கழகத்தினைப்
பன்னிரண்டாண்டுகள்
பாதிப்பு எதுவுமின்றி
நலன்மிகும் முறையினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி வந்தார்!
இவ்வேளையில்தான்
அரிஸ்டாட்டிலின் மனைவி
இறந்தாளென்றும் –
அவர்களிருவருக்கும்
இல்லற வாழ்க்கையின்
அன்புச் சின்னமாகப்
"பிதியாஸ்" என்னும்
பெயருடன் ஒரேமகள்
இருந்தா ளென்றும் –
மனைவி இறந்தபின்
"ஹெர்ஃபிலிஸ்" என்றொரு
பெண்ணுடன் –அறிஞர்
கொண்ட தொடர்பினால்
அவ்விருவருக்கும்
"நிக்கோமாக்கஸ்" என்னும்
பெயருடன் ஆண்குழந்தை
பிறந்தது என்றும் –
அரிஸ்டாட்டில் தமது
உயிலில் தாம்பெற்ற
இருபிள்ளைகளுக்கும்
இரண்டாவது மனைவிக்கும்
தம் சொத்துக் களினைப்
பகிர்ந்தளித் தாரென்றும் –
அறிஞரின் ஒரேமகளான
"பிதியாஸ்" – மூன்று முறை
திருமணம் செய்தாளென்றும் –
அத்திருமணங்களினாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குக் குழந்தைகள்
மூன்று பிறந்தனவென்றும் -
அறிஞரின் சீடனொருவன்
தமதுயர் குருவான
அரிஸ்டாட்டிலுக்கு
நன்றி கூறும் பொருட்டு
அவரது பேரப்பிள்ளைகளான
அம்மூன்று பிள்ளைகளையும்
எடுத்து வளர்த்து - அவர்களை
நல்லதோர் நிலைக்குக்
கொண்டு வந்தானென்றும் -
எழுத்துச் சுவடிகளாயிருந்த
அறிஞரின் நூல்களைத்
தொகுத்திட உதவிய
அறிஞரின் ஒரே மகனான
நிக்கோமாக்கஸ் என்பவனும்
சிறு வயதிலேயே
இறந்து விட்டானென்றும் -
விரித்துள்ளார்கள் -
சரித்திர ஆசிரியர்கள்!
இவைகளிலெதுவுமே
அறிஞரின் ஆய்வுக்குப்
பாதிப்பு எதனையும்
விளைத்திடவில்லை!
கலைக் கழகத்தில் இருந்தபடி
கவலைகள் எதுவுமின்றி
நூற்றுக் கணக்கான
நூல்களை - அறிஞர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தளிக்கும் பணியைத்
தொடர்ந்தார் தடையின்றி!
அரிஸ்டாட்டிலிடம்
அலெக்ஸாண்டார்
எதுவித பாதிப்பினையும்
ஏற்படுத்தவில்லை - ஆனால்
பிளேட்டோவின்
சிந்தனைகள் பலவற்றை
அறிஞர் அரிஸ்டாட்டில்
கண்டித்துள்ளார்.
மறுத்துள்ளார் -
மாற்றியுள்ளார் -
தளர்த்தியுள்ளார் -
பல இடங்களில்!
ஆயினும் - அரிஸ்டாட்டிலின்
சிந்தனை அனைத்திலும்
பிளேட்டோவின் சுருதியே
பின்னணியில் ஒலிக்கிறது!
பிளேட்டோவின் கூட்டுறவே
அறிஞர் அரிஸ்டாட்டிலின்
சிந்தனைகளுக்கு அத்திவாரம்
என்பதுவே பேருண்மை!
அமைதி நிறைந்த - தமது
ஆராய்ச்சிக் கூடத்தில்
"அறிஞர்களுக்கொரு" தலைவர் தான் -
அரிஸ்டாட்டில்!
ஆயினும் அவர்தம்
வாழ்வில் சிக்கல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தது கண்டுள்ளம்
தளர்ந்திடாத அவரது
உறவினன் ஒருவனைத்
தண்டித்துவிட்டான் –
அலெக்ஸாண்டர் மாமன்னன் –
அறிந்தோ அறியாதோ!
உறவினனின் தண்டனையை
மாற்றும் வண்ணம் வேண்டி
அலெக்ஸாண்டர் மன்னனுக்கு
விண்ணப்பமொன்றினை
அனுப்பி வைத்தார் –
அறிஞர் அரிஸ்டாட்டில்!
அவ்வேளையில் மன்னன்
நாட்டில் இல்லாததால்
மன்னனின் பிரதிநிதி
அறிஞரின் விண்ணப்பம்
நிராகரிக்கப்பட்டதனை
அறிவித்ததோடு –
"அறிஞரும் அரசனின்
ஆணைக்கு மறுப்பின்றி
அடிபணிய வேண்டும்" –
என்றவன் பதிலில்
குறிப்பிட்டிருந்தான்!
இது கண்டு அறிஞர்
உளம் மிக நொந்தார் – ஆனாலும்
மன்னன் அலெக்ஸாண்டரின்
ஆட்சிக்கெதிராக
ஆர்ப்பாட்டம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதென்ஸ் மக்களோடு
இணைந்து கொண்டரசனின்
ஆட்சிக்கெதிராக
ஆர்ப்பாட்டம் செய்திடப்
பாதிக்கப்பட்டிருந்த
அறிஞரின் உள்ளம்
கடுகளவேனும் ஒருப்படவில்லை!
ஏனெனில் – மக்கள்
அலெக்ஸாண்டரின் ஆட்சிக்கு
எதிராகப் போராடி
வெற்றி பெற்றாலும்
வேறொரு அந்நியன்
ஏதென்ஸைப் பிடிக்கலாம்!
சில்லறைத் தகராறுகள்
இல்லாதிருந்தால்தான்
கலைகள் செழிக்கும்!
அறிவு சிறக்கும் – எனவே
"ஒரு குடைக்கீழான அரசே"
நாட்டின் வளர்ச்சிக்கு
உதவிடும் என்றவர்
உறுதியாய் நம்பினார்!
எனவே – அரிஸ்டாட்டில்
"ஏதென்ஸில் இருந்து கொண்டு
அலெக்ஸாண்டரின் ஆட்சியைத்
தொடர்ந்தாதரிப்பது" என
உள்ளத்தில் தெளிந்தார்!
உள்ளத்தில் துணிந்தார்!!
இதனை அறிந்து கொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதென்ஸ் மக்கள்
இதயம் குமுறினர்!
கடலெனப் பொங்கினர்!!
அறிஞர் இதனையும்
அறிந்து கொண்டும்
ஏதென்ஸ் நகரத்தில்
தொடர்ந்து வாழ்ந்தார்!
இவைகளை உணர்ந்த
அலெக்ஸாண்டர் மன்னன் – தனது
ஆசானை கௌரவித்திட
ஆயத்தமாகினான்!
ஏதென்ஸ் நகரத்தில்
ஏற்றதோர் இடத்தினில்
அரிஸ்டாட்டிலின்
அழகிய சிலையொன்றை
விரைவினில் வடித்ததை
அமைத்திடப் பணித்தான்!
சிலையினைக் கண்ட
ஏதென்ஸ் நகர் மக்கள்
ஏற்றிட மறுத்தனர்!
சீற்றமே கொண்டனர்!!
அரிஸ்டாட்டிலின்
அறிவுத்திறன் பற்றி
அறிந்து கொண்டோரும்
அவரைத்தம் எதிரியாகவே
கணித்தார்களேயன்றி
அறிஞராக அவரைக்
கடுகளவேனும் உளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கவே இல்லை!
"வேற்றூர் மன்னனின்
கையாள் ஒருவனுக்கு
எங்கள் நகரத்தில்
சிலை நாட்டுவதா?" –
என்றேதென்ஸ் மக்கள்
சீற்றம் கொண்டனர்!
சீற்றத்தின் வேகம்
தணிந்திடும் முன்னரே
அலெக்ஸாண்டர் மன்னனின்
அகால மறைவு கேட்டு
ஏதென்ஸ் நகர் மக்கள்
மகிழ்ச்சியில் மூழ்கினர்!
அடக்கப்பட்ட மக்களின்
விடுதலை முழக்கம்
ஓங்கி அதிர்ந்தது!
எங்கும் அதிந்தது!!
நகரில் ஆட்சி செய்த
மஸிடோனியக் கட்சியைக்
கலைத்தனர் மக்கள்!
களித்தனர் மக்கள்!!
வெற்றியின் வெறிசற்றே
அடங்கிய போதுதான்
அரிஸ்டாட்டிலின் நினைவு
மக்களின் மனங்களில்
திடீரென எழுந்தது – அவரை
அவரின் வாழ்வை
முடித்திடத் துணிந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அலெக்ஸாண்டரின் நிழலில்
அமர்ந்து கொண்டல்லவா
ஆட்டங்கள் போட்டான்
அரிஸ்டாட்டில் – எனவே
அவனின் கதையினை
முடித்திடுவோம்" என்று
துணிந்து கொண்டனர்!
துடிதுடித் தெழுந்தனர்!!
அறிஞர் ஒருவரை
அழிப்ப தென்பது
கஷ்டமானதொரு
காரியமல்லவே!
"ஆட்சிக் கெதிராகச்
செயற்படுகின்றார்!
இளைஞர் மனங்களைத்
திசைதிருப்புகின்றார்!
மதத்துக் கெதிராகப்
பிரசாரம் செய்கின்றார்!"–
என்னும் குற்றங்களை
அறிஞரின் மேலே
சுமத்திவிட்டவரை
நீதிமன்றொன்றினில்
நிறுத்தி அவரை
விசாரணை செய்வதுபோலப்
பாவனை செய்து – முடிவில்
கொலைத் தண்டனை விதித்து
அறிஞரின் கதையினை
முடித்து விடுவதுதானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கத்தினிலே
வழமையான நடைமுறை! – முன்பும்
வழமையாய் நடந்தது!!
“இந்த நடைமுறையே
தன் விடயத்தினிலும்
நடைபெறுமென்பதை –
நடைபெறவுள்ளதை –
அறிந்து கொண்டார் –
அறிஞர் அரிஸ்டாட்டில்!
ஏதென்ஸ் நகரம்
ஏற்கெனவே ஒரு
தத்துவ ஞானிக்கு
விளைவித்த கொடூரம்
மன்னிக்க முடியாதது!
மறக்கவும் முடியாதது!!
ஏதென்ஸ் நகரத்தில்
மீண்டுமொரு தடவை
அவ்வாறானதொரு கொடூரம்
அவ்வாறானதொரு பழிச்செயல்
நடைபெற இடமளியேன்!
நடைபெற நான் விரும்பேன்!!”
என்றுள்ளம் தெளிந்தார்!
என்றுள்ளம் துணிந்தார்!!
தன்தாயின் ஊரான
“சால்ஸிஸ்” என்னும் ஊருக்குத்
தப்பி ஓடி விட்டார் –
அறிஞர் அரிஸ்டாட்டில்!
தப்பி ஓடியதால் – அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுயிரைக் காப்பாற்றியதுடன்
ஏதென்ஸ் மக்கள்
மீண்டுமொரு தடவை
"அறிஞர்படுகொலை" எனும்
தீராத பழிச் சொல்லுக்கு
ஆட்படா வண்ணம்
ஏதென்ஸ் நகர் மக்களைக்
காப்பாற்றிட வேண்டுமெனும்
தன் பேராவலினையுமவர்
நிறைவேற்றிக் கொண்டார்!
நிறைவாக்கிக் கொண்டார்!!
அன்னையின் ஊர்அவரை
அரவணைத்த நாள்முதலாக
அறிஞரை நோய்களும்
அரவணைத்துக் கொண்டன!
"சந்தர்ப்பம் தமக்குச்
சாதகமாயில்லை" எனும்
விசனம் காரணமாக
விஷம் அருந்திக் கொண்டு
அறிஞர் அரிஸ்டாட்டில்
நோயை வரவழைத்தார்" -
என்றுரைப்பாருமுண்டு - அதனை
மறுத்துரைப்பாருமுண்டு!!
எவ்வாறோ அறிஞரை
அரவணைத்த நோய் அவரின்
உயிரினையும் மெல்ல மெல்ல
அரவணைத்துக் கொண்டதுவே!
அறிவொளி பரப்பி வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவனாம் அரிஸ்டாட்டில்
இமைகளினை முடினர் !!
இயற்கையோடிணைந்தனர்!
அறிஞர் மறைந்த ஆண்டின்
முதல் ஆண்டிலேயே
மாமன்னன் அலெக்ஸாண்டர் –
காத்திருக்கா வேளையிலே
அந்தகன்கைவசமானான்!
முப்பத்திரண்டாவது வயதிலேயே – தன்
மூச்சை நிறுத்திக்கொண்டான்!
அந்த ஆண்டிலேயே
ஆற்றல் மிகு பேச்சாளர்
"டெமாஸ்தனீஸ்" என்பவன்
தன்னுயிரைத் தானே
மாய்த்துக் கொண்டிறந்தான்!
தலைசிறந்த மன்னன்
மாண்புமிகு சிந்தனையாளன்
புகழ் பெற்ற நாவேந்தன் என
மூன்றினிய புதல்வர்களை
ஓராண்டு காலத்துள்
இழந்த "கிரீஸ்" அன்னை
விளக்கிட இயலாத
சகித்திட இயலாத
புத்திர சோகத்தால்
பொலிவிழந்து நின்றனளே!!
கதிகலங்கித் தவித்தனளே!
மதிமயங்கித் துடித்தனளே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளவந்தோர்கள்
புசித்திட வேண்டிச்
சட்டத்தின் படியோர்
பசுவைத் தருவதால் வரும்
பெரும்பழி பாவத்தை
நினைத்துளம் அஞ்சி –
அநியாயச் சட்டத்தை
எதிர்த்து நிற்பதனால்
தன்னுயிருக்கு வரவுள்ள
அபாயத்தை நினைந்தஞ்சி –
தன்னுயிர் காத்திட
யாரும் அறியாதபடி – தமிழர்
தாயகமெனப் போற்றும்
தமிழகம் சென்றங்கு
செந்தமிழ் வடமொழி
என்பனவற்றுடனவர்
சிவாகமங்களினையும்
தெளிவுறக் கற்றவர் –
துறவு வாழ்க்கையைப் – பெரு
விருப்புடன் ஏற்றவர் –
சைவம் வளர்க்கும்
அரும்பணியுடனே
செந்தமிழ் வளர்க்கும்
பெரும்பணியினையும்
யுகந்தொறும் போற்றிடச்
சிறப்புடன் இயற்றினார் –
யாழ்ப்பாண நகரின்
வடபால் விளங்கிடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமார் கிரமமாம்
திருநெல்வேலியில் விளங்கும்
திருவளர்குடும்பத் துதித்தவரான
முனிவர் ஞானப்பிரகாசர் – கிழக்கில்!

அறிஞர் பிளேட்டோவின்
சீடராய்த் திகழ்ந்தவர் –
மாமன்னன் அலெக்ஸாண்டரின்
நல்லாசானாயிருந்தவர் –
மக்கள் கற்றென்றும் – நற்
பயன் பெறும் வண்ணம்
ஆய்வுகள் பலசெய்து
அறிந்த உண்மைகளை – பல
நூல்களாய்ப் படைத்தவர் –
நாடுநலம் பெற்றிடவேண்டி
மாமன்னன் அலெக்ஸாண்டரின்
கொள்கைவழி நின்றதால்
ஏதென்ஸ் மக்களின் – பெரும்
கோபத்துக் காளானார்!
மாமன்னன் திடீரென்று
மரண மடைந்ததனாலே
உற்சாகம் கொண்டெழுந்த
ஏதென்ஸ் நகர் மக்கள்
தம்பெரும் சினத்துக்கும்
வெறுப்புக்கும் ஆளான
அறிஞர் அரிஸ்டாட்டிலைக்
கொன்றுதம் சினம்தீர்க்கத்
தயாராகும் செய்தியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து அரிஸ்டாட்டில் – தம்
அன்னையின் ஊரெனும்
“சால்ஸிஸ்” எனும் ஊருக்குத்
தப்பியோடிச் சென்றங்கு
தம்முயிர் காத்ததுடன் –
மற்றுமொரு அறிஞரைக்
கொலைசெய்த பெரும்பழியை
ஏதென்ஸ் மக்கள் மீண்டும்
ஏற்றிடா வண்ணமும்
தடுத்துக் கொண்டார் –
கிரேக்கத் துதித்ததோர்
தத்துவ ஞானியென்று
உலகின்றும் போற்றிடும் –
உலகென்றும் போற்றிடும் –
அறிஞர் அரிஸ்டாட்டில் – மேற்கில்!!

## கால அட்டவணை

**ஞானப்பிரகாச முனிவர்**
பிறப்பு - கி.பி. 1625, மறைவு - கி.பி. 1658 பங்குனி மாதம் (பூசம்)

**அறிஞர் பிளேட்டோ**
பிறப்பு - கி.மு. 429, இறப்பு - கி.மு. 347

**அறிஞர் அரிஸ்டாட்டில்**
பிறப்பு - கி.மு. 384, இறப்பு - கி.மு. 322

**மன்னன் பிலிப்பு** (ii)
இறப்பு - கி.மு. 336

**ஆண்டிபேடர்**
பிறப்பு - கி.மு. 397, இறப்பு - கி.மு. 319

**அலெக்ஸாண்டர்**
பிறப்பு - கி.மு.356, இறப்பு - கி.மு.323 யூன் 13-16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கும் மேற்கும்

அறிஞரை வளர்த்த அன்புக் கொருகதை!
அறிஞரை வதைத்த வன்புக் கொருகதை!!
அவனியில் இப்படிக் கதைபல இருப்பினும்...
அவைகளில் இரண்டினைக் கவிதையில் தருகின்றேன்!

மேற்கு நாடாம் கிரேக்கத் துதித்தவன்
பேரறி வாளனாம் தத்துவ ஞானியாம்
சோக்கிரட் டீஸ்தன் கிரேக்கத் திளைஞரின்
சோம்பலைப் போக்கி அறிவொளி ஏற்றினான்!
அறிவுச் சுடரினைச் சகித்திடா மன்னவன்
அறிவுச் சுடரினை ஏற்றிய அறிஞன்மேல்
ஆட்சிக் கெதிராய்ச் சூழ்ச்சிகள் செய்வதாய்
ஆட்சி மன்றில் குற்றம் சுமத்தினான்!
ஞானச் சுடரினை அழிப்பதாய் எண்ணியே
ஞானியின் உயிரினை நஞ்சூதந் தழித்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தமிழ் மன்னனாம் அதியமான் பெற்றதோர்
அதிசயக் கனியதாம் நெல்லிக் கனியினைத்
தாமே உண்டதன் நலங்களைப் பெற்றிந்தத்
தாரணி ஆண்டிடும் தன்னலம் தள்ளினான்!
நலமுடன் நெடுநாள் வாழ்ந்திட வேண்டியே
பலமுடன் தமிழ்ப் பணி இயற்றிட வேண்டியே
பாடிப் பாடியே செந்தமிழ்ப் பணிசெய்த
பாட்டி யானஎம் ஔவை மூதாட்டிக்கு
அன்புடன் அக்கனி அளித்தவன் மகிழ்ந்தான்!
இன்தமிழ் வளர்க்கும் நற்பணி புரிந்தான்!!

வதைகள் அப்படிப் பலவுண்டு தாரணியில்!
கதைகள் இப்படிப் பலவுண்டு தமிழினில்!!
இவைகளிர ண்டுமே இருவிதம் பொருளினில்!!
இவைகளின் தரத்தினை மதிப்பதும் பொறுப்பினில்!!

-முருகு-
(வாரமுரசொலி - 09.07.1989)

**இக்கவிதைத் தொகுப்பு உருவாக வித்திட்டதே**

**இக்கவிதை**

நன்றி

**சுபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றிப் பேராசிரியர்கள்

பல்வேறு துறைகளிலும் தன்னை அடையாளப்படுத்தியுள்ள "முருகு" தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்பான அறிவுடையவர். மரபு மாறாமல் செய்யுள் செய்யும் ஆற்றல் கைவரப் பெற்றவர். இவருக்குத் தமிழ்ப் புலமைக் குடும்பப் பின்னணியும் உண்டு. மாமன்னன் சங்கிலி, மாவீரன் யூலியஸ்சீசர், கௌதமபுத்தர், ஐசாக் நியூட்டன் எனத் தொடங்கி இந்த ஒப்பீடு தொடர்கிறது. அரிச்சந்திரன், நெடுஞ்செழியன், ஔவையார், ஆருணி, தருமி, ஆறுமுகநாவலர், இளங்கோ அடிகள், கட்டப்பொம்மன், குழந்தைக் கண்ணன், இராஜராஜ சோழன், ஞானப்பிரகாசமுனிவர் எனக் கீழைத்தேச ஆளுமைகளையும் ஒப்பீடு செய்திருக்கின்றார்.

நிறைவாக, முருகுவின் "கிழக்கும் மேற்கும்" நின்று வென்று நிலைக்கும். அவரின் முயற்சிகள் மென்மேலும் தொடர வாழ்த்துவோம்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

ஒப்பியற் கல்வியானது அறிவியலிலும் மனிதப் பண்பியலிலும் பல நலன்களைத் தந்துள்ளது. இந்த வகையில் மானிடவியல் ஆய்வு முறைகளில் ஒன்றான இன ஒப்பாய்வியலானது (Ethnology), பண்பாட்டிடை ஆய்வாக உலகப் பண்பாடுகள் பற்றிய புரிதலுக்குப் பெரிதும் துணையாகியுள்ளது.

இத்தகைய ஒரு சூழமைவில் "முருகுவின்" புதிய நூலான "கிழக்கும் மேற்கும்" வரவாகின்றது. பண்பாட்டிலும் இலக்கியங்களிலும் வாழும் "முருகு"வின் சமூக மனத்தினை வெளிப்படுத்தும் ஒப்பியல் நூலாக இந்நூல் வடிவம் பெற்றுள்ளது.

முருகுவின் இந்த ஒப்புவமையின் பொருண்மைகளாகப் பல இலக்கிய - வரலாற்றுப் பாத்திரங்கள் உயிர்ப்புப் பெறுகின்றனர். மேலான மனித மாண்புகள் அவரது இந்த ஒப்பீட்டில் அர்த்தம் பெறுவது போலவே, உலகளாவிய இழிநிலைகளையும் இந்த ஒப்புவமைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்தக் காலப்பணியின் உள்ளொளியான "முருகு" மென்மேலும் பெறுமதியான படைப்புக்களைச் சமூகத்துக்காக்க எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்!.

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**

விலை: 450.00

அச்சுப்பதிப்பு:
ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ் 021 221 9129

9 786249 519909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org